மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 213 | ஞாயிற்றுக்கிழமை | ஆனி 13 நாள் 27 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16+16 விலை : ரூ.40 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111




## அரசுக்கு எதிராக சஜித் அணி கண்டியில் பெரும் போராட்டம்

கொழும்பு, ஜூன் 27

அரசின் தான்தோன்றித்தனமான ஆட்சிக்கு எதிராகவும், எரிபொருள் விலை அதிகரிப்பைக் கண்டித்தும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர் கண்டியில் நேற்று ஆர்ப்பாட் 15 ➤

## அரசியல் கைதி திடீரென இறப்பு

*கடந்த வருடம் விடுதலையானவர்*

யாழ்ப்பாணம், ஜூன் 27

கடந்த வருடம் விடுதலைசெய்யப்பட்ட அரசியல் கைதியொருவர் நேற்றுத் திடீரென உயிரிழந்தார்.

கோத்தாபய ராஜபக்ச கொலைமுயற்சி வழக்கில் 2006ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைப்புப் பிரிவால் கைதுசெய்யப்பட்டு 14 ஆண்டுகள் தடுத்துவைக்கப்பட்டு கடந்த வருடம் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா 15 ➤

## கொரோனா 250,000

கொழும்பு, ஜூன் 27

நாட்டில் நேற்று ஆயிரத்து 801 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது 15 ➤

யாழ். போதனாவில்

## கொரோனாத் தொற்றால் மேலும் இருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனாத் தொற்றாளர் 15 ➤

# தமிழர்கள் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் அக்கறை

**கோத்தாபயவின் நிலைப்பாடு இதுவாம் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு**

கொழும்பு, ஜூன் 27

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு அதீத அக்கறை கொண்டுள்ளது. அதை வெளிப்படுத்தும் முதல் சமிக்ஞையாகவே தமிழ் அரசியல் கைதிகள் 16 பேரை பொதுமன்னிப்பின் கீழ் ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார். 15 ➤

## அடுத்த ஜனாதிபதி பசில் ராஜபக்சவா?

கொழும்பு, ஜூன் 27

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் புதல்வரான அமைச்சர் நாமல் ராஜபக்ச போட்டியிடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாறாக பொதுஜன பெரமுனவின் நிறுவுநரான பஸில் 15 ➤

## சாவு 43 மொத்தம் 2,905

கொழும்பு, ஜூன் 27

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நேற்றுமுன்தினம் 43 பேர் உயிரிழந்துள்ளனர் 15 ➤

## வடக்கில் 56

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடமாகாணத்தில் நேற்று 56 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். 579 பேரின் மாதிரிகள் நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்ட 15 ➤



## வெடிக்காத நிலையில் ஆட்லறிக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

மாதகல் பகுதியில் வெடிக்காத நிலையில் ஆட்லறிக் குண்டொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. வீதித் திருத்தப் பணிகளில் ஈடுபட் 15 ➤

## சகல அரசியல் கைதிகளையும் விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

**வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன் உறவினர்களால் நேற்று முன்னெடுப்பு**

கொழும்பு, ஜூன் 27

அரசியல் கைதிகள் 16 பேரை அரசு விடுவித்துள்ள நிலையில், சிறைச்சாலைகளிலுள்ள ஏனைய அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, கைதிகளின் நலனுக்காக செயற்படும் அமைப்புடன் இணைந்து பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு 15 ➤

## சுகவீனத்தால் பெண் இறப்பு

*நாய் கடித்தமை காரணமா?*

யாழ்ப்பாணம், ஜூன் 27

சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ள நிலையில், நாய் 15 ➤

செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....
செய்தி 021 493 0000 / 077 1209994
விளம்பரம் 021 493 1111 / 071 6182182

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவில் முறைகேடு

## புதிய பட்டியலைத் தயாரிக்குமாறு பிரதமரின் இணைப்புச் செயலர் உத்தரவு

**சாவகச்சேரி, ஜூன் 27**

**தென்மராட்சி பிரதேச செயலகத்தால் வீடமைப்புத் திட்டத்துக்கு பயனாளிகளைத் தெரிவு செய்ய மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பாக பிரதமரின் இணைப்புச் செயலாளர் களப் பரிசோதனை மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட பட்டியலுக்குப் பதிலாக புதிய பட்டியல் தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.**

தென்மராட்சி பிரதேசத்தில் இவ் வருட வீடமைப்புத் திட்டத்துக்கு பயனாளிகளைத் தெரிவுசெய்ததில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என பிரதமருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஊடகங்கள் சிலவற்றில் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பிரதமரின் இணைப்பைச் செயலாளர் பிரதேச செயலகத்துக்கு வந்தார். பயனாளிகள் தெரிவு தொடர்பான கோவைகளைப் பார்வையிட்டார். பிரதேச செயலர் மற்றும் தொடர்புடைய அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.

அதன்பின் அரசியல் செல்வாக்கால் உள்வாங்கப்பட்டவர்கள் என்று கருதப்பட்டவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு தகைமையுடையவர்களை இணைத்து புதிய பட்டியல் உருவாக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

தகைமையுள்ளவர்களின் பெயர்களை இணைத்து புதிய பட்டியல் தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். அதன்படி அரசியல் செல்வாக்கால் உள்வாங்கப்பட்டவர்கள் என்று கருதப்பட்ட 40 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டு. ஏற்கனவே நீக்கப்பட்ட 38 பேர் உட்பட தகைமையுள்ள 40 பேரின் பெயர்களை உள்வாங்கி பட்டியல் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-9)

மீள்குடியேற்றப்பட்ட

# சுதந்திரபுரம் கிராம மக்கள் மின்சாரம் இன்றித் தவிப்பு

முல்லைத்தீவு. ஜூன் 27

முல்லைத்தீவு சுதந்திரபுரம் ஒன்றரைஏக்கர் குடியிருப்புப் பகுதியில், மக்கள் மீள்குடியேற்றப்பட்டு பத்து வருடங்களாகியும் இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் அப்பகுதிக்கு வருகை தந்திருந்த இலங்கை மின்சார சபையினர் அங்குள்ள ஒழுங்கைகளை அகலமாக்கி வீதியோரத்தில் காணப்படும் பயன்தரு மரங்களை தறிக்குமாறும் கேட்டிருந்தனர்.

இதன் பிரகாரம் குடியிருப்பாளர்கள் தமது தென்னைமரங்கள் உள்ளிட்ட பயன்தரு மரங்களை தறித்து ஒழுங்கைகளையும் அகலித்துள்ளனர். இந்த நிலையில் இதுவரை மின்சாரம் வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ,நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் இது தொடர்பில் கவனம் செலுத்தி விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ஐ-9)

# யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுப் பயனில்லை

## பொலிஸ் ஆணைக்குழுவை நாடினார் பாதிக்கப்பட்டவர்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.பொலிஸ் நிலையத்தில் 6 முறைப்பாடுகள் பதிவு செய்தும் பயனில்லாத நிலையில், பாதிக்கப்பட்டவர் பொலிஸ் ஆணைக்குழுவை நாடியுள்ள சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

யாழ். நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை பிற மாவட்டத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு முறைப்பாட்டாளரான குறித்த நபர் வாடகைக்கு வழங்கியுள்ளார்.

கடையை வாடகைக்கு பெற்றுக்கொண்டவர் வழங்கியவரின் (முறைப்பாட்டாளரின்) அனுமதியின்றி கடையை விஸ்தரித்தது மட்டுமல்லாது ஏனைய பிற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்.

குறித்த விடயத்தை அறிந்துகொண்ட கடையை வாடகைக்கு வழங்கியவர் (முறைப்பாட்டாளர்) யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கச் சென்றிருந்த நிலையில், பொலிஸார் முறைப்பாட்டை ஏற்க முதலில் மறுத்துவிட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

பலத்த வற்புறுத்தல்களின் மத்தியில் மறுநாள் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. எனினும் முறைப்பாட்டாளர் குறிப்பிட்ட பல விடயங்கள் பொலிஸாரால் எழுதப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதையடுத்து பொலிஸ்மா அதிபரிடம் சென்று முறையிடப்பட்ட நிலையில் முறைப்பாடு முழுவதுமாக பதிவுசெய்யப்பட்டது. எனினும் இன்று வரை தனது முறைப்பாடு தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்று முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனக்கு நீதியைப் பெற்றுத்தருமாறு இலங்கை பொலிஸ் ஆணைக்குழுவின் யாழ் மாவட்ட அலுவலகத்தை அவர் நாடியுள்ளார். (ம-20)



நவாலி வடக்கில் தெரிவு செய்யப்பட்ட பொருண்மியம் நலிந்த 30 குடும்பங்கள் மற்றும் சிறப்புத்தேவையுடையோர் ஆகியோருக்கு மூவாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. கனடா நாட்டின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-50)

# 115 குடும்பங்களுக்கு உணவுப்பொருள்கள்

வவுனியா, ஜூன் 27

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் உள்ள 115 குடும்பங்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் வடக்கு மாகாணம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரணப் பணிகளின் தொடர்ச்சியாக வவுனியா செட்டிகுளம் பிரதேசத்திலும் இவ் உதவிகள் வழங்கப்பட்டன.

செட்டிகுளம் பிரதேசத்தின் கணேசபுரம், கப்பாச்சி, அருவித்தோட்டம் மற்றும் மெனிக்பாம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இவ் உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)



# கம்மன்பிலவுக்கு நாள் குறிக்க விசேட கூட்டத்துக்கு ஏற்பாடு!

கொழும்பு, ஜூன் 27

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் திகதியை நிர்ணயிப்பதற்காக விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஜூன் 1 அல்லது 2ஆம் திகதியளவில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர்களும், கட்சிகளின் சிறப்பு பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

ஜூலை மாதத்துக்கான முதல்வார நாடாளுமன்ற அமர்வு ஜூலை 6 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அந்த வாரத்துக்கான நிகழ்ச்சி நிரல் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவசர விடயமாக கருதி, விவாதத்துக்கு உட்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. எனினும், விவாத திகதி தொடர்பில் மேற்படி கூட்டத்திலேயே தீர்மானம் எடுக்கப்படும்.

அதேவேளை, அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலை மீள குறைக்கப்படுமானால் நம்பிக்கையில்லாப் பிரேரணையை மீளப்பெறுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது என அக்கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை அந்தஸ்துள்ள விசேட தூதுவரே பொருத்தம்

## இந்தியாவுக்கான தூதுவர் விடயத்தில் இராஜதந்திரி தயான் ஜயதிலக யோசனை



**கொழும்பு, ஜூன் 27**

**இலங்கையின் அண்மைக்கால விடயங்களில் இந்தியா அதிகளவில் கரிசனை கொண்டுள்ள நிலையில், இலங்கை விடயங்களை உயர்ந்த மட்டத்தில் கையாள்வதற்கு உடனடியாக விசேட தூதுவரை நியமிக்க வேண்டும் என்று இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக யோசனை முன்வைத்துள்ளார்.**

கொல்கத்தாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் திலோத்தமா அமையத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் சீனாவின் தலையீடு என்ற தலைப்பிலான சர்வதேச கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்திருந்தது.

அதில், கலாநிதி தயான் ஜயத்திலக்க மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீது பல நாடுகளுக்கு கரிசனைகள் அதிகமாகவே உள்ளன. அந்த வகையில், இலங்கை இதுவரை காலமும் அணிசேராக் கொள்கையை பின்பற்றி அனைத்து நாடுகளுடனும் இருதரப்பு உறவுகளை சுமுகமாகவே கொண்டுவந்திருந்தது.

ஆனால், இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் வெளிவிவகாரக் கொள்கையிலிருந்து விலத்தியிருக்கின்றார்கள். இதுபற்றிய பல கரிசனைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. குறிப்பாக இலங்கை சீனாவின் பக்கம் சார்ந்துவிட்டது என்று பகிரங்கமான விமர்சனங்கள் உள்ளன.

சீனா தனது கனவுத்திட்டமான பட்டுப் பாதைத் திட்டத்தில் இலங்கையையும் இணைத்துக்கொண்டு தெற்காசியாவில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கும் கடன்தொகைகளையும் பெரும் அபிவிருத்தித் திடங்களிலும் முதலீடுகளைச் செய்து வருகின்றது.

அதற்கு மிகச் சிறந்த உதாரணமாக கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்தைக் குறிப்பிடலாம். இந்தத் திட்டம் இலங்கையின் எதிர்காலத்துக்கு முக்கியமானதாக கருதப்படுகின்றபோதும் இதனால் சீனாவின் தலையீடுகள் இலங்கையில் அதிகரித்துவிடும் என்ற கரிசனை இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு அதிகமாகவே உள்ளது.

குறிப்பாக இந்தியாவுக்கு அதன் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயமாக உள்ளது. வடஇந்தியாவின் லடாக் பகுதியில் சீனாவுடனான எல்லை விவகாரங்கள் காணப்பட்டு வரும் நிலையில் தென் இந்தியாவில் அவ்விதமான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு இந்தியா அதிகளவில் ஈடுபாட்டைக் கொண்டிருக்கின்றது.

தற்போதைய மத்திய அரசாங்கத்தில் வெளிவிவகர அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி ஆகியோர் இலங்கை விடயத்தில் நீண்ட அனுபவம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அவ்வாறிருக்க, இலங்கை விடயங்களை கையாள்வதற்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள விசேட தூதுவர் ஒருவரை நியமிப்பதே பொருத்தமானதாகும். இத்தகைய நியமனம் ஒன்றின் ஊடாக இலங்கை விடயங்களை கையாள்வதே இந்தியாவுக்கு தற்போதுள்ள இராஜதந்திர மூலோபாயத் தெரிவாக இருக்கும் - என்றார். (த-இ)

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோ. சைக்கிள்கள் திருட்டு

வவுனியா, ஜூன் 27

வவுனியா நகர்ப்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றின் காவலாளியின் மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் திருடப்பட்டுள்ளதுடன், வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள வியாபார நிலையத்துக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவங்கள் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-110)

## தென்மராட்சி பிரதேசத்தில்

# சமுர்த்தி திணைக்களத்தால் பல்வேறு வேலைத்திட்டங்கள்

சாவகச்சேரி, ஜூன் 27

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகின் வேலைத் திட்டங்கள் பல எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி திணைக்களத்தால் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 41 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் சமுர்த்தி திணைக்களத்தால் லொத்தர் மூலம் வீட்டுத் திட்டத்துக்கு தெரிவான சமுர்த்தி பயனாளியால் அமைக்கப்பட்ட வீடு திறந்துவைக்கப்படவுள்ளது.

இதேவேளை சமுர்த்தி பயனாளி ஒருவருக்கு வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வுகளில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மற்றும் மாவட்ட சமுர்த்தி அதிகாரிகளும் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ- 9)

# அணுசக்தி விமானங்களுடன்

## அமெரிக்கா - இந்தியா போர்ப்பயிற்சி


கொழும்பு, ஜூன் 27

இந்திய கடற்படை போர்க் கப்பல்கள் மற்றும் இந்திய விமானப்படை போர் விமானங்கள் அமெரிக்க அணுசக்தியால் இயங்கும் விமானங்களுடன் கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

இந்த பயிற்சி நடவடிக்கையில் இந்திய கடற்படைக் கப்பல்களான கொச்சி மற்றும் டெக், பி - 8 ஐ மற்றும் மிக் - 29 கே விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

விமானங்களை தாங்கிய இந்திய போர்க் கப்பல்கள் கூட்டுப் பயிற்சிகளில் ஈடுப்பட்ட நிலையில் அமெரிக்காவின் விமானம் தாங்கி கப்பல் றொனால்ட் ரீகன், ஏவுகணை எதிர்ப்பு கட்டமைப்பைக் கொண்ட கப்பல், யு.எஸ்.எஸ். ஹால்சி மற்றும் டைகோண் டெரோகா ஆகிய கப்பல்களும் பயிற்சிகளில் ஈடுபட்டன.

மேலும், இரு நாடுகளின் படைகளின் ஒத்துழைப்புகளை மேம்படுத்தல் நவீன தாக்குதல் வசதிகளைக்கொண்ட கடல் மற்றும் வான் பரப்பு பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)





# வவுனியா கருங்கல் குவாரியால் சுற்றியுள்ள மக்களுக்கு ஆபத்து

## கிராம மக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 27

வவுனியா பெரிய கோமரசங்குளம் யேசுபுரம் பகுதியில் உள்ள சிறிய மலைக்குன்றில் கல்லுடைப்பதால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்று கிராம மக்கள் குற்றம் சாட்டினர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

குறித்த மலைக்குன்றில் கல்லுடைப்பதால் [illegible] வீடுகளில் வெடிப்புக்கள் ஏற்படுவதுடன், எந்த வித அறிவித்தலும் இன்றி வெடி வைத்து கற்களை உடைக்கும்போது அங்கிருந்து பறந்து வரும் கருங்கல் துண்டுகள் அருகில் உள்ள குளத்திலும், வீடுகளிலும் வீழ்கின்றன. கடந்த இரு தினங்களுக்கு முன்பாகவும் அதிகளவான கற்கள் வந்து வீழ்ந்துள்ளது. என்னும் குளத்து பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் சிலர் அதிஸ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர். அத்துடன் அருகில் அமைந்துள்ள விவசாயக் காணிகளிலும் கற்கள் வீழ்ந்து தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டுசெல்லும்போது கூட அச்சத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சுற்றுவட்டத்தில் இருக்கும் அனைத்துக் கிராமங்களுக்கும் குறித்த கற்குவாரியால் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த கல்குவாரியில் கல் உடைக்கும் நடவடிக்கைகளை தடுத்துநிறுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அல்லது பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திவிட்டு கல் உடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கோள்ள வேண்டும் - என்றனர். (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற நடைமுறை: சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, ஜூன் 27

நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்வது தொடர்பில் விசேட சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழு செயலரின் கையொப்பத்துடன் குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்றைக் கருத்திற்கொண்டு, சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுக்கமைவாக நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்வது தொடர்பிலேயே விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய, அனைத்து நீதிமன்றங்களுக்கும் பொருந்தக்கூடிய வகையிலான நடைமுறைகளும் ஆலோசனைகளும் விசேட சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

# கூட்டமாக நின்ற 67 பேருக்கு நேற்று பி.சி.ஆர்.

சாவகச்சேரி, ஜூன் 27

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் கொரோனாத் தொற்றாளர்கள் காணப்பட்ட பிரதேசங்களில் நேற்று எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றாளர்கள் காணப்படும் பிரிவு எனத் தெரிந்தும் கூட்டமாக நின்றவர்கள், அந்தந்தப் பிரிவுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இனங்காணப்பட்டு பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு நேற்று மட்டும் வரணியில் 23 பேருக்கும், கோவிலாக்கண்டியில் 9 பேருக்கும், மட்டுவிலில் 32 பேருக்கும், சாவகச்சேரியில் மூவருக்குமென 67 பேருக்கு பிசி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கூட்டமாக ஒன்றுகூடி நிற்பதை பொதுமக்கள் தவிர்த்து வீடுகளில் இருக்குமாறும். கூட்டமாக நிற்பது கண்டுபிடிக்கப்படின் அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை நடத்தப்படுமெனவும் சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர். (ப-9)



# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொரோனாவால் சாவு

கொழும்பு, ஜூன் 27


கொரோனாத் தொற்றுக் காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர். தாய், தந்தை, மகன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெரதெனஜயா, முருந்தலாவ பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

சிறிபால ராஜபக்ச (வயது 72), ஷிலா ராஜபக்ச (வயது 70) மற்றும் தம்மிக ராஜபக்ச (வயது 38) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சிறிபாலா 3 ஆம் திகதியும், அவரது மனைவி ஷிலா ராஜபக்ச 14 ஆம் திகதியும் அவரது மகன் 23 ஆம் திகதியும் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழந்தனர் என்று பொதுச் சுகாதார ஆய்வாளர் விக்ரம நாயக்க தெரிவித்தார். (த-இ)

## மரண அறிவித்தல்



### சிவபாதம் கணேசலிங்கம்

பிறப்பு 16.09.1957 — இறப்பு 26.06.2021

கோண்டாவிலை பிறப்பிடமாகவும், நல்லூர் குறுக்குத் தெருவினை வதிவிடமாகவும் கொண்ட சிவபாதம் கணேசலிங்கம் நேற்று (26.06.2021) சனிக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதம் நாகரத்தினம் தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சோதிலிங்கம் மகாதேவி மற்றும் சரஸ்வதி, கமலாதேவி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 644 6629

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 08 . 1936 — மறைவு 26 . 06 . 2021



### திருமதி சின்னத்தம்பி பவளம்மா

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் மானிப்பாய் ரீ.சி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பவளம்மா நேற்று (26.06.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை தங்கம் தம்பதியின் மகளும், காலஞ்சென்றவர்களான ராமு தங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், வசந்தி, வதனா, சிறீதரன், சிறீரஞ்சிதகுமார், பிரபாகரன், வனிதா ஆகியோரின் தாயாரும், விஜயராஜன், யோகராஜா, பாமினி, தவச்செல்வி, தர்சினி, சுரேந்திர ராஜன் ஆகியோரின் மாமியும், ஜென்சிகா, பிரியங்கா, கஜலக்சன், டிலான், டிலூஜன், பிரதீப், கபிஷ், கரிஷ்மா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

### கணபதிப்பிள்ளை சிவலிங்கம்

(சிவலிங்கம் மோட்டோர்ஸ் மற்றும் Transport உரிமையாளர் - யாழ்ப்பாணம்)



தோற்றம் 28 . 04 . 1938 — மறைவு 30 . 06 . 2018

அன்பின் சிகரமே
வாழ்வின் ஒளிவிளக்கே
எம் குடும்பத் தலைவனே!
எம் வாழ்வின் வழிகாட்டிய தீபமே!

ஆண்டு மூன்று மறைந்து விட்ட போதிலும்
அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
எம்மோடு பயணித்த எங்கள் அன்புத் தெய்வமே!

நாம் மகிழ்ச்சியாக இருக்க நம்மிடம்
ஆயிரம் விடியல்கள் இருந்தாலும்
சோகத்தை பகிர ஒரு நல்ல துணையாக
இறைவன் நமக்களித்த வரமாக நீங்கள் இருந்தீர்கள்!

உங்கள் குரல் எங்கள் காதுகளில்
இப்போதும் கணீரென்று கேட்குதப்பா!
ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் புன்முறுவல்
பூப்பூத்த வதனமாய் இருந்து கொண்டே இருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவலிங்கம் மோட்டோர்ஸ்
[illegible] வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3212

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கணக்கிட முடியாத மதிப்பு. அளவிட முடியாத உயரம்...

**வங்கி வரலாற்றில் இதுவரை எவரும் அண்மிக்காத ரூ.3 ரில்லியன் சொத்துக்கள் எம்மிடம்.**

- 2.5 ரில்லியன் ரூபா வைப்புகள்
- 2 ரில்லியன் ரூபாய்க்கு அதிகமான கடன்களும் முற்பணங்களும்
- திசையெங்கும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட நுகர்வோர் மத்திய நிலையங்கள்
- 4 வெளிநாட்டு கிளைகளுடன் இலங்கை வங்கிக்கு முழுமையான உரித்துள்ள நிர்வாக நிறுவனம் ஒன்று பிரிட்டனில் உள்ளது
- ரூ 53.9 பில்லியன் வணிக மதிப்பீட்டுடன், இலங்கையின் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடையே மிகப் பெறுமதியான வணிக நாமம்

HOLMES POLLARD & STOTT

81 வருடகால எமது பெருமை சேர்க்கும் பயணத்தில் நாட்டில் பல்வேறு சமூக பொருளாதார இலக்குகளில் வெற்றியீட்டி ஆசியாவின் பாரிய வங்கியாக தேசத்தின் பெரும் ஒளிவிளக்காக நாம் நவீன உலகின் டிஜிட்டல் மயப்படுத்தல் ஊடாக இலங்கையின் சகல இன மக்களினதும் உன்னதமான வாழ்க்கை எதிர்பார்புகளை ஒளிமயமாக்க நேற்றும் இன்றும் நாளையும் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

*மார்ச் 2021 வரை புள்ளிவிவரங்கள் பொருத்தமானவை

1975 BOC CALL CENTRE

www.boc.lk

தலைமை அலுவலகம் "இலங்கை வங்கி சதுக்கம்" இல. 01, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலையை எப்போது குறைப்பீர்?

## ஐக்கிய மக்கள் சக்தியின் பெரேரா எம்.பி. கேள்வி



**கொழும்பு, ஜூன் 27**

**அமெரிக்கா சென்றுள்ள பசில் ராஜபக்ச நாடு திரும்பினால் எரிபொருள் விலை குறைவடையும் என்று அமைச்சர்கள் சிலர் கூறினர். தற்போது பசில் ராஜபக்ச நாடு திரும்பி யுள்ளமையால், எப்போது எரிபொருள் விலையை குறைக்கப் போகிறீர்கள் என்று கேள்வியெழுப்புகின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும்கூறுகையில்,

நல்லாட்சி அரசில் எரிபொருள் விலை இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக போராடிய தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சதான் தற்போது எரிபொருள் விலையை அதிகரித்துள்ளார். அவர் ஜனாதிபதியாக பதவி வகித்த போது எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக போராடிய மீனவர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இன்னும் அதேபோன்று மீனவர்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். எனவே அரசு அவர்களுக்கான துரித நிவாரணத்தை வழங்க வேண்டும்.

ஆகவே பசில் ராஜபக்ச வந்துவிட்டார் எனக்கூறி அவரது கைகளில் பந்தை மாற்றிவிட்டு ஏனையோர் தப்பிக்க முயற்சிக்கக்கூடாது.

மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறி ஊடகங்கள் முன்னால் முதலைக்கண்ணீர் வடிப்பதை தவிர்த்து, தலைமைத்துவத்திடம் நேரடியாகச் சென்று பேசி மக்களுக்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். எரிபொருள் விலை குறைவடைந்தால் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம்தைக் கைவிடுவோம் - என்றார். (த-இ)

## தடுப்பில் உள்ளவரின் வீட்டு வளவில்

# புதைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி, ரவைகள் மீட்பு



கொழும்பு, ஜூன் 27

தங்காலை - நாக்குலுகமுவ பகுதியில் வீடொன்றின் வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த T-56 ரக துப்பாக்கி மற்றும் அதற்கான 13 ரவைகள் என்பவை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வலஸ்கல சுபுன் என அழைக்கப்படும் சுபுன் புத்திகவின் வீட்டின் பின்புற காணியிலேயே இவை கண்டறியப்பட்டன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சுபுன் புத்திக, 2018 ஆம் ஆண்டில் குடாவெல்ல மீன்பிடித் துறைமுகத்துக்கு அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கி பிரயோகத்தில் நால்வர் கொல்லப்பட்டிருந்தனர். துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியே புதைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (த-இ)

# போலித் தகவல் பரப்பினார் அதனாலேயே கைதானார்

## அசேல சம்பத் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

அஸ்ராஜெனகா தடுப்பூசி தொடர்பில் போலியான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றினார் என்ற குற்றச்சாட்டிலேயே சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டுக்கு எடுத்துவரப்படும் அஸ்ராஜெனகா தடுப்பூசிகளுக்கு, வேறு பதார்த்தங்களை கலப்படம் செய்வதுடன், அந்த தரமற்ற தடுப்பூசிகளையே மக்களுக்கு செலுத்தி வருகின்றோம் என்று சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் யூடியுப் செயலி மற்றும் சமூகவலைத்தளங்களில் செய்தி வெளியிட்டுள்ளார் என்று ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பொது முகாமையாளர் குற்றப்புல னாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், பிலியந்தலை பெலென்வத்த பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு அசேல சம்பத்தை கைதுசெய்துள்ளனர்.

இதன்போது, குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுடன் , பிலியந்தலை பொலிஸாரும் இணைந்து செயற்பட்டிருந்தனர். தற்போது அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், அசேல சம்பத் வெளியிட்ட செய்தி அடங்கிய காணொலி மற்றும் அது தொடர்பில் பார்வையாளர்களால் முன்வைக்கப்பட்ட கருத்து கணிப்புகள் தொடர்பிலும் விசாரணை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கமைய அவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். - என்றார்.

இதேவேளை, அசேல சம்பத், நேற்றுமுன்தினம் கடத்தப்பட்டிருந்தார் என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அவருக்கு சட்ட பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அதனையடுத்து, அசேல சம்பத் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

# சபாநாயகரிடம் வந்தது விசாரணை அறிக்கை

கொழும்பு, ஜூன் 27

கொழும்பு துறைமுக நகர் ஆணைக்குழு சட்டவரைவு திருத்தம் தொடர்பான விவாதத்தின் இறுதியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், வாக்குகள் சரியாக எண்ணப்படவில்லை என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் இடம்பெற்ற விசாரணையின் அறிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

விசாரணை அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் தொடர்பில் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

குறித்த வாக்கெடுப்பின்போது, வாக்குகள் சரியாக எண்ணப்படவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சபாநாயகருக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தது. (த-இ)



யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலய மாணவர்களது குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. நாவலர் தர்மகத்தா சபையின் நிதி உதவியில் பழைய மாணவர்கள் ஒத்துழைப்புடன் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)

# கட்டுக்குள் வந்தது கப்பலில் ஏற்பட்ட தீ




கொழும்பு, ஜூன் 27

கொழும்பிலிருந்து சிங்கப்பூர் செல்லும் வழியில் எம்.எஸ்.சி. மெசினா கொள்கலன் கப்பலின் இயந்திர அறையில் ஏற்பட்ட தீ விபத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த தீப்பரவலால் நாட்டின் கடல் பிராந்தியத்துக்கு பாதிப்பு ஏற்படாது என்று சமுத்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

[illegible] கிழக்கே 480 கடல் மைல் தூரத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது குறித்த கப்பலில் தீ பரவியது.

28 பணியாளர்களுடன் சென்ற குறித்த கப்பலில் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவினர் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தடுப்பூசியைப் பெற்ற

## புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் 9 பேர் மருத்துவமனையில்

முல்லைத்தீவு, ஜூன் 27

புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்கள் 900 பேருக்கு கொவிட் -19 தடுப்பூசி கடந்த இரண்டு நாள்களாக ஏற்றப்பட்டு வரும் நிலையில் நேற்று ஆடைத் தொழிற்சாலையில் மயங்கி வீழ்ந்த 9 பேர் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலையில் பணிக்குச் சென்ற அவர்கள் ஒவ்வாமை காரணமாக அவர்கள் மயங்கி வீழ்ந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவத்தைத் தொடர்ந்து நிர்வாகம் ஆடைத் தொழிற்சாலையின் நடவடிக்கைகளை நிறுத்தி பணியாளர்களை வீடுகளுக்கு அனுப்பிவைத்துள்ளது. இதேவேளை கிளிநொச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களில் பலர் நேற்று முன்தினம் மயங்கி வீழ்ந்தனர் அவர்களும் கொவிட் 19 தடுப்பூசியைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-19)

## தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகள் தொடர்பில் அறிவிப்பு

கொடிகாமம்.ஜூன் 27

கொவிட்-19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகள் தொடர்பில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பிரதேச மருத்துவமனையில் நாளை திங்கட்கிழமை ஜே/329, ஜே/330, ஜே/335 மற்றும் ஜே/336 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும், 30 ஆம் திகதி புதன்கிழமை ஜே/328 மற்றும் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

முதல் டோஸ் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் தடுப்பூசி அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் செல்லுபடியாகும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை தவறாது எடுத்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)




## பொதுக்கிணறு துப்புரவு

புங்குடுதீவு.ஜூன் 27

புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தில் உள்ள பொதுக்கிணறு ஒன்று 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதியுதவியில் சீரமைக்கப்பட் டுது. சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் (சூழகம் ) செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் புங்குடுதீவை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சுவாமி நித்திராஜாவின் நிதியில் இந்தக் கிணறு சீரமைக்கப்பட்டது. நான்காம் வட்டாரம் நுணுக்கல் மற்றும் தொழிலாளர்புரம் பகுதிகளைச் சேர்ந்த 50 இக்கு மேற்பட்ட குடும்பங்கள் இக் கிணற்றை குளிப்பதற்காக பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோர் அதிகார சபை சட்டத்தில் திருத்தங்கள்

கொழும்பு, ஜுன் 27
நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இதனூடாக வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை அதிகரிக்கப்படும் என சந்தைப்படுத்தல் கூட்டுறவு சேவைகள், சந்தை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.
இதற்கான அமைச்சரவை அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கைகளை இரண்டு வாரங்களில் மேற்கொள்ளவுள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
அதன்படி, இதுவரை 5 ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் ரூபாவுக்குள்ளேயே தண்டம் விதிக்கப்படுவதால், வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் எவ்வித அச்சமுமின்றி தவறிழைக்கின்றனர் என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார். அதனால், நுகர்வோரின் நலன் கருதியே இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# வீட்டில் திருட்டு முயற்சி: திருடர்கள் மடக்கிப் பிடிப்பு

கிளிநொச்சி, ஜுன் 27
வீடு ஒன்றில் திருட முயற்சித்த இருவர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பிராசபுரம் உழவனூர் பகுதியில் இடம் பெற்றது. குறித்த நபர்கள் வீடு புகுந்து திருட முயற்சித்த போது. வீட்டு உரிமையாளரால் அவதானிக்கப்பட்டு, கூச்சலிடப்பட்டுள்ளது. இதனை அடுத்து வீட்டில் கூடிய அயலவர்கள் வீட்டை சுற்றிவளைத்து தேடினர். இதன்போது இருவர் பிடிக்கப்பட்டனர். ஒருவர் தப்பித்துள்ளார். பிடிபட்டவர்களுக்கு மக்கள் தர்ம அடி கொடுத்து தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இவர்களில் இருவர் யாழ்பாணம் மானிப்பாய் பகுதியை சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ப-113)

# பழைய பல்லவியையே பாடாது கேள்விகளுக்கு பதிலளியுங்கள்

## ஜனாதிபதியிடம் ஹந்துனெத்தி எம்.பி. கேள்விக்கொத்து



**கொழும்பு, ஜுன் 27**
**நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்துகிறேன் எனக் கூறி பழைய கதைகளையே மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருக்க வேண்டாம். சீன இராணுவத்தின் உடையை ஒத்த ஆடையை அணிந்துள்ள சீனப் பிரஜைகள் யார்?, எரிபொருள் விலை குறைவடையுமா? இல்லையா? விவசாயிகளுக்கு எப்போது உரம் வழங்கப்படும்? இணையவழி கல்வியால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு எப்போது நிவாரணம் வழங்கப்படும்? என்பதை ஜனாதிபதி கூறவேண்டும்.**

இவ்வாறு கோரியுள்ளார், மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி.
மாத்தறை மாவட்டத்தில் கம்புறுபிட்டி நகர பஸ் தரப்பிடத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது மேற்கண்டவாறு கோரினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதாகவும் ஒரே நாடு ஒரே சட்டம் காணப்படுகிறது என்று கூறினாலும், நான் தான் நன்றாக செய்தேன் என்று மாத்திரம் கூறவேண்டாம். பழைய கதைகளையே கூறிக் கொண்டிருக்காமல் சீன இராணுவத்தின் உடையை ஒத்த உடையணிந்த நபர்கள் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்துங்கள். அதேபோன்று ட்ரோன் கமரா மூலம் இலங்கையை இந்தியா கண்காணிப்பதைப்பற்றிக் கூறுங்கள்.
தேசிய பாதுகாப்பு என்று வசனங்களால் மாத்திரம் கூறுவது போதுமானதல்ல. அதிகாரம் உடையவர்களுக்கும் அதிகாரம் அற்ற சாதாரண மக்களுக்கும் வெவ்வேறான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை அனைவரும் அறிவார்கள். எனவே, முடியுமானால் இந்த வைரஸ் பரவலை எப்போது கட்டுப்படுத்துவீர்கள்? என்று கூறுங்கள். அவ்வாறில்லை என்றால் நாட்டை நிர்வகிக்கக்கூடியவர்களிடம் ஒப்படைத்துச் செல்கிறேன் எனக் கூறுங்கள்.
அதேபோன்று விவசாயிகளுக்கு உரத்தை எப்போது வழங்குவீர்கள்? இவற்றை அறிந்து கொள்ள மக்கள் விரும்புகின்றனர். தற்போது எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. பொருள்களின் விலைகளும் உயர்வடைந்துள்ளன.
அதனை குறைப்பீர்களா? இல்லையா? இதனையும் அரசியல் வேலைத்திட்டமாக்க முயற்சிக்க வேண்டாம். இதேபோன்று இணையவழி கல்வியால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான நிவாரணத்தை எவ்வாறு வழங்கப்போகிறீர்கள்? என்று கேள்வியெழுப்புகின்றோம்.
மீண்டும் மீண்டும் உங்களின் போலியான வாக்குறுதிகளை நம்பி ஏமாறுவதற்கு மக்கள் தயாராக இல்லை. 73 வருடங்களாக வெவ்வேறு முகங்களில் ஒரே பொய்களையே கேட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதை மக்களுக்கு நினைவுபடுத்துகின்றோம்- என்றார். (த-இ)

# ஒரு லட்சம் மெட்ரிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானம்

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 27
நாட்டில் நெல் மற்றும் அரிசியின் கையிருப்பு ஒரு மாதத்துக்கும் குறைவான காலத்துக்கே போதுமானதாக அமையும். எனவே, ஒரு லட்சம் மெட்ரிக்தொன் அரிசியைக் குறைந்த விலையில் இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான விலைமனுக்கோரல் பத்திரங்கள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
கொழும்பிலுள்ள வர்த்தக அமைச்சில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடு முழுவதும் பொதுமக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு 100 ரூபாவுக்குக் குறைவான விலையிலேயே அரிசியை விற்பனை செய்யவேண்டும் என்று உயர்ந்துபட்ச கட்டுப்பாட்டு விலையொன்றை நிர்ணயித்தோம்.
அதற்குரிய வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டதுடன் அதனைப் பின்பற்றாதோருக்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.
அவ்வாறிருந்தும்கூட சதொச தவிர்ந்த பெருமளவான விற்பனை நிலையங்களில் நிர்ணயவிலையை விடவும் அதிக விலைக்கே அரிசி விற்பனை செய்யப்படுகின்றது. இலங்கைக்கு அரிசியை இறக்குமதி செய்யவிரும்பும் எந்தவொரு தரப்பினரும் எதிர்வரும் 10 நாள்களுக்குள் விலைமனுக்கோரலைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
அதன்படி எவ்வித ஊழல் மோசடிகளுமின்றி குறைந்த விலையில் தரமான அரிசியை இறக்கு[illegible] பார்க்கின்றோம். இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசியானது, உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலைக்கு அமைவாக அரசால் நிர்ணயவிலையில் விற்பனை செய்யப்படும்.

**வியாபாரிகளுக்கு இறுதி வாய்ப்பு**
இதேவேளை, அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தேவைப்படும் சுமார் ஒரு மாதகாலப்பகுதியில் உள்நாட்டு வியாபாரிகளுக்கு இறுதி வாய்ப்பொன்றை வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.
அதற்கமைவாக உள்நாட்டு வியாபாரிகள் அரிசியைப் பதுக்கிவைத்திருந்தால், அவற்றை சந்தையில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த விலையில் விற்பனை செய்யமுடியும். அவ்வாறு செய்யும்பட்சத்தில் நாம் ஒரு லட்சம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்யாமல். குறைந்தளவில் மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம். அதுமாத்திரமன்றி இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வியாபாரிகள் நிர்ணய விலையை விடவும் அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.
மேலும் பாவனையாளர் அதிகாரசபைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

**நிர்ணயவிலை சட்டத் திருத்தம்**
அடுத்தவாரம் அந்த யோசனை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், அதனைப் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். அந்தச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் நிர்ணயவிலையை விடவும் அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்பவர்களிடமிருந்து ஒரு லட்சம் ரூபா தண்டப்பணத்தை அறவிடமுடியும்.
மீண்டும் அதே தவறைச் செய்தால் இரண்டு லட்சம் ரூபாவாக அதிகரிக்கவும் முடியும். இதுவரை காலமும் இவ்வாறு அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவே தண்டப்பணமாக அறவிடப்பட்டது. அவர்கள் அதனைச் செலுத்திவிட்டு மீண்டும் அதே தவறைச் செய்வார்கள். எனவே சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. - என்றார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 33 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

மன்னார்,ஜூன் 27

மன்னார் நகரம் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள எட்டு கிராம அலுவலகர் பிரிவுகளைச் சேர்ந்த 33 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. சூரிச் சிவன் கோவில் சைவ தமிழ் சங்கத்தின் 'அன்பே சிவம்' அமைப்பின் நிதியில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவரும் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்கள் ஒன்றியத்தின் தலைவருமான மருத்துவர் மு.கதிர்காமநாதன், மாளிகைத்திடல் பிள்ளையார் ஆலய குருக்கள், மாவட்ட இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர் சுதாகரன் மற்றும் அன்பே சிவம் அமைப்பின் தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-213)

## பாவனைக்குதவாத கோழி இறைச்சி வவுனியாவில் மீட்பு

வவுனியா,ஜூன் 27

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் பாவனைக்குதவாத 200 கிலோ கோழி இறைச்சி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வட பகுதியில் விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட குறித்த இறைச்சி ஏற்றிய வாகனத்தை சோதனைக்குட்படுத்திய வவுனியா தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட இறைச்சியை மீட்டனர்.

வாகனமும் பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்பட்டது. குறித்த வாகனத்தில் போதியளவு குளிரூட்டி இன்மையால் இறைச்சி பழுதடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை போகஸ்வெவ பகுதியில் சுகாதார விதி முறைகளை மீறி உணவுப்பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவரிடம் பொருள்களைக் கைப்பற்றியுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வர்த்தகரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-110)

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 09 . 1936



மறைவு 26 . 06 . 2021

### இரத்தினசிங்கம் சரஸ்வதிதேவி (கமலாதேவி)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் சரஸ்வதிதேவி (கமலாதேவி) அவர்கள் நேற்று (26.06.2021) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜபிள்ளை யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், ஜெயந்தி (துவம்-கனடா), காலஞ்சென்ற ஜெயராசன் மற்றும் ஜெயவசந்தி, ஜெயராஜி, ஜெயமோகன் காலஞ்சென்ற ஜெயகௌரி (வதனா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், இரவீந்திரநாதன் மற்றும் இந்திரா, மயூரன் ஆகியோரின் அன்பு மாமியும், சீதா (சுவிஸ்), ஜெயா (கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K.K.S. வீதி கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:குடும்பத்தினர்.
0777 032 484

### சுகாதார அமைச்சரே ஏற்றமையால்

# மாகாண மருத்துவமனைகளை கையளிக்கத் தேவையில்லை

### ஆளுநருக்கு அவைத்தலைவர் மீண்டும் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

**மாகாணத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளை விரும்பாவிட்டால் அவர்களே வைத்துக்கொள்ளட்டும். அதற்கு நாங்கள் நிதி ஒதுக்கமாட்டோம் என்று கொழும்பு சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். மாகாணத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளுக்கு சுகாதார அமைச்சு நிதி ஒதுக்குவதில்லை. தேசிய வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக திறைசேரியே நிதி வழங்குகின்றது. எனவே சுகாதார அமைச்சரே கூறியமைக்கு அமைவாக, வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட 4 மருத்துவமனைகளையும் கொழும்பு அரசிடம் கையளிக்கவேண்டாம்.**



இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ்க்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இலங்கையில் மாகாண நிர்வாகங்களுக்கு உட்பட்ட 9 மருத்துவமனைகளை கொழும்பு அரசு பொறுப்பேற்கும் அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதில் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட 4 மருத்துவமனைகள் உள்ளடங்குகின்றன. இதற்கு வடக்கு மாகாணத்தில் எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் அவைத் தலைவர் ஆளுநருக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்[illegible] ... கடந்த [illegible] தி இந்த விடய [illegible] ... பொழுது, பதிலளித்து பேசிய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, 'மாவட்டங்கள் விரும்பாவிட்டால் நாம் மருத்துவமனைகளை எமது பொறுப்பில் எடுக்கமாட்டோம். அதேவேளை, மாகாண சபைகளின் கீழ் உள்ள மருத்துவமனைகளுக்கு சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கப்படமாட்டாது.' என்று கூறியுள்ளார்.

எனினும், இக் கூற்றில் அடங்கிய சில விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

வட மாகாணத்தில் உள்ள எந்த மருத்துவமனைகளும் மாவட்ட நிர்வாகங்களின் கீழ் இல்லை. அவ்வாறான எந்த [illegible] இல்லை [illegible] ... ஐந்து மாவட்டங்களிலும் உள்ள போதனா மருத்துவமனை தவிர்ந்த ஏனைய மருத்துவமனைகளும் சட்டரீதியாக மாகாண சபை நிர்வாகத்தின் கீழே தான் உள்ளன.

இவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் யாவும் தேசிய வரவு - செலவுத்திட்டத்தின் படி தேசிய திறைசேரியால் மாகாண சபைக்கு வழங்கப்படுகின்றன.

எனவே, மாகாண மருத்துவமனைகளுக்கு சுகாதார அமைச்சு நிதி வழங்குவது என்ற பிரச்சினை எழாது. எனினும், விசேட சூழ் நிலைகளில் மக்கள் நலன் கருதி சுகாதார அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்யலாம். அது கௌரவ அமைச்சரின் துணிவுத் தெரிவாகும். அந்த [illegible] சபைக்கு [illegible] ... தவிர்க்[illegible] ... கேள்விக்குட்படுத்த முடியாது. ஆயினும், இதுவரை காலமும் தேசிய வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் மூலமே மாவட்ட பொது மருத்துவமனைகள் உட்பட சகல மாகாண மருத்துவமனைகளும் மாகாண சபையால் நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இதில் எந்த மாற்றமும் முன்மொழியப்படவில்லை. எனவே, மாவட்ட பொது மருத்துவமனைகளுக்கான ஒதுக்கீடுகள் வழமைபோல தேசிய வரவு - செலவுத்திட்டத்தின் மூலமாக மாகாண சபைக்கே வழங்கப்படும் என்பது தெளிவு.

எனவே, இவற்றை கையளிக்கும் நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்- என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதி வடக்கு மாகாண பிரதம செயலர் அ.பத்திநாதனுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 182 கிலோ கஞ்சா நல்லூரில் மீட்பு

## ஒருவர் கைது



கிளிநொச்சி, ஜூன் 27

182 கிலோ 100 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய வாகனம் மற்றும் இயந்திரத்துடனான வள்ளமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சி பூநகரியில் இடம்பெற்றுள்ளது. பொலிஸ் மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்லூர் பகுதியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து சோதனையை மேற்கொண்டனர். இதன்போது கப் ரக வாகனம் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. குறித்த வாகனத்தில் 182 கிலோ 100 கிராம் எடை கொண்ட கஞ்சாப் பொதி பொலிஸாரால் மீட்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய கிளிநொச்சியைச் சேர்ந்த வாகனச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அதே வேளை, பொதியை ஏற்றிய வாகனம், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வள்ளம் மற்றும் அதன் இயந்திரம் என்பவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (ப-113)

*மீன்பிடித்துறை பாதிப்பு*

# இழப்பீடு வழங்குகிறது காப்புறுதி நிறுவனம்



கொழும்பு, ஜூன் 27

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்கு உள்ளானதில் மீன்பிடித்துறைக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு இடைக்கால இழப்பீடு வழங்க காப்புறுதி நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல் தீ விபத்துக்கு உள்ளானதில் மீன்பிடித்துறைக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு இடைக்கால இழப்பீடு 720 மில்லியன் ரூபாவை காப்புறுதி நிறுவனம் வழங்கவுள்ளது என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (த-இ)



# 100 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

கிளிநொச்சி,ஜூன் 27

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இரணைதீவு மற்றும் இரணைமாதாநகர் பகுதிகளைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தியின் ஒழுங்கமைப்பில் ஆஸ்திரேலிய மருத்துவ நலச் சங்கத்தின் நிதிப் பங்களிப்பில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை மற்றும் கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகம் ஆகியவை இணைந்து இந்த உதவிகளை வழங்கின. (ஐ-214)

# கொடிகாமம் பொலிஸாரால் இயலாததை முடித்தனர் காங்கேசன்துறை பொலிஸார்

## காயமடைந்தபோதும் கசிப்பு குகை முற்றுகை

தென்மராட்சி, ஜூன் 27

**கொடிகாமத்தில் இடம்பெறும், கசிப்பு உற்பத்தி, சட்டவிரோத மனல் அகழ்வு, மற்றும் திருட்டுக்கள் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு முறையிட்டும் பயன்கிடைக்காத நிலையில்; மக்கள் அது தொடர்பில் காங்கேசன் துறைப் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து நேற்று கசிப்பு குகை ஒன்று முற்றுகையிடப்பட்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.**

கசிப்பு உற்பத்தியாளர்கள் பொலிஸாரைத் தாக்கியபோதும், விடாது செயற்பட்ட பொலிஸாருக்கு மக்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

வரணி வடக்கு பகுதியில் உள்ள சூலங்கரை வைரவர் கோவிலுக்கு அருகில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுகின்றது என்று மக்களால் காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து, மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் வந்த பொலிஸார், கசிப்பு உற்பத்திக் குகையை முற்றுகை யிட்டுள்ளனர். கசிப்பு உற்பத்தியைப் பிடிக்கச் சென்ற பொலிஸாரை கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் தாக்கியுள்ளனர். இதனால் பொலிஸார் காயமடைந்தனர்.எனினும் பொலிஸார் தொடர்ந்து செயற்பட்டு, தாக்கியவர்களைக் கைதுசெய்து கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் கோடா. கசிப்பு போன்றவற்றைக் கைப்பற்றினர். (ப-9)



# பாதிக்கப்பட்டோருக்கு உணவுப்பொதிகள்

கொடிகாமம்,ஜூன் 27

பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட தென்மராட்சி மந்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

செல்வா ஹாட்வெயார் உரிமையாளரின் நிதி உதவியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.கஜேனின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணனால் நேரடியாக பயனாளிகளது வீடுகளுக்குச் சென்று குறித்த உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

# இலங்கை வங்கி கிளையில் இருவருக்கு கொரோனா


முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி கிளையில் பணியாற்றும் இருவருக்கு எழுந்தமான பி.சி.ஆர்.பரிசோதனையின்போது தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி அன்று புதுக்குடியிருப்பு இலங்கை வங்கியின் முன்னால் புதுக்குடியிருப்பு பிரதேச பொதுச் சுகாதாரப் பணிமனையினரால் எழுந்தமானமாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியானது. இதில் வங்கியில் பணியாற்றும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சிவநகர் பகுதியைச் சேர்ந்த ஒருவரும், யாழ்ப்பாணத்தில் இருந்து பணிக்கு வரும் ஒருவருமே தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து வங்கியில் பணியாற்றும் 15 பேருக்கு அன்டிஜென் பரிசோதனை நேற்று புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார பணிமனையில் மேற்கொள்ளப்பட்டது. எவருக்கும் நோய்த் தொற்றுக்கான அறிகுறி காணப்படவில்லை.

இதேவேளை கொரோனாத் தொற்றுக்கு உள்ளான இருவரையும் கொரோனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ப-19)



# தொற்றாளர்கள் இனங்காண்பது அதிகரிக்கலாம்

கொழும்பு, ஜூன் 27

கொவிட்-19 டெல்டா விவகாரத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் நாட்டில் தொடர்ந்து அடையாளம் காணப்படலாம் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பு தொற்றுநோயியல் பிரிவில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றுவதன் மூலம் மட்டுமே மீண்டும் நாட்டை முடக்கும் செயற்பாட்டைத் தடுக்க முடியும் - என்றார். (த-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மீண்டும் இருண்ட யுகம்

நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் அசேல சம்பத் நேற்றிரவு இலக்கத் தகடற்ற வெள்ளை நிற வாகனத்தில் கடத்தப்பட்டிருக்கிறார். நாட்டின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தொலைக்காட்சி அலைவரிசைகளில் உரையாற்றிக் கொண்டிருந்த சமயம் அசேல சம்பத், சிவில் உடை அணிந்தவர்களால், வெள்ளை நிற வாகனத்தில் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். பல்வேறு அழுத்தங்களை அடுத்து, அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் பின்னர் அறிவித்துள்ளபோதும், இந்தச் சம்பவம் நாட்டின் இருண்ட யுகம் ஒன்றை மக்களுக்கு ஞாபகப்படுத்தியிருக்கிறது.

இலங்கையில் ராஜபக்சக்களின் ஆட்சி நிலவியபோது, வெள்ளை வான் என்பது பிரசித்தமாகியிருந்தது. வெள்ளை நிற வாகனத்தில் கடத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர்இப்போது எங்கே என்று தெரியாது. ராஜபக்சக்களின் ஆட்சியில் இருந்து நாடு விடுபட்ட பின்னர், இந்த வெள்ளை வான் கடத்தல் கலாசாரம் காணாமல் போயிருந்தது. இப்போது ராஜபக்சக்கள் ஆட்சிப்பீடமேறியுள்ள நிலையில், மீண்டும் அந்த கொடூர இருண்ட யுகத்தை நோக்கி நாடு பின்தள்ளப்படுகின்றதா என்ற கேள்வியை நேற்றைய சம்பவம் ஏற்படுத்தியிருக்கின்றது.

தமக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை, தவறுகளைச் சுட்டிக்காட்டுவர்களை அடக்குவதற்கு 'வெள்ளை வான்' பயன்படுத்தப்பட்டது. மனித உரிமை மீறல்களை வெளிக் கொணர்ந்தவர்கள் , அடக்குமுறையை எதிர்த்தவர்கள் கடந்த காலங்களில் வெள்ளை வான்களில் கொண்டுசெல்லப்பட்டனர், காணாமல் ஆக்கப்பட்டனர். அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களைப் பட்டியலிட்டால் அது நீண்டு கொண்டே போகும். போர் இடம்பெற்ற காலத்திலும், அதன் பின்னரான காலப் பகுதியிலும் இந்த வெள்ளை வான் அச்சுறுத்தல் இருந்து கொண்டே இருந்தது. கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்த சில விசாரணைகளில் வெள்ளை வான் கடத்தல்கள் பற்றிய அதிரவைக்கும் தகவல்கள் வெளியாகியிருந்தன.


ஓய்ந்திருந்த 'வெள்ளை வான்' கலாசாரம் மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது. தடுப்பூசிகள் தொடர்பான தவறான தகவல்களை வெளிப்படுத்தினார் என்று அசேல சம்பத் மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது. அசேல சம்பத்தின் தகவல் தொடர்பாக முதலில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும், அசேல சம்பத் தவறான தகவலை வெளிப்படுத்தியிருந்தமை உறுதி செய்யப்பட்டால் அவர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இவை எவற்றையும் செய்யாது, அசேல சம்பத் வெள்ளை வானில் சிவில் உடையில் வந்தவர்களால் பலாத்காரமாக இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறார். அவரை இழுத்துச் சென்றவர்கள், அசேல சம்பத்தின் குடும்பத்தினருக்கு தங்களை உறுதிப்படுத்தவில்லை, தாங்கள் யார் என்றும் கூறவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பல்வேறு அரசியல் பெருந்தலைகள் இந்த விடயத்தில் தலையிட்டதை அடுத்து, அசேல சம்பத் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவித்தார். இதுவே ஒரு சாதாரண நபருக்கு நடத்திருந்தால், அரசியல் பெருந்தலைகள் தலையிடாதிருந்திருந்தால் இப்போது வரை அந்த நபருக்கு என்ன நடந்தது என்பது மர்மமாகவே இருந்திருக்கும் என்பதை கடந்த கால அனுபவங்கள் ஊடாக உய்த்தறியலாம்.

முன்னாள் சபாநாயகர் தனது சமூக வலைத்தளத்தில், ஊடகவியலாளர் ஒருவரும் கடந்த வாரம் வாகனத்தில் வந்தவர்களால் கடத்தப்பட்டு செய்தி மூலம் பற்றி விசாரிக்கப்பட்டார் என்றும், பின்னர் வீதியோரம் வீசப்பட்டார் என்றும் கூறியிருக்கின்றார். இந்தச் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஜனாதிபதியை நோக்கி கேள்வியும் எழுப்பியிருந்தார்.

தங்களை நோக்கி விரல் நீட்டும், தவறுகளை தட்டிக்கேட்போரை அச்சுறுத்தி அடக்கும் அரசின் செயற்பாடாக இவை அமைந்திருக்கின்றன. கொவிட் தொற்று நிலைமையைக் காரணம் காட்டி, நாட்டை இராணுவ மயப்படுத்தி வரும் அரசு, மக்களின் கருத்துச் சுதந்திரத்தையும் நசுக்குகின்றது என்று ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டு வரும் நிலையில், மீண்டும் 'வெள்ளை வான்' கலாசாரமும் ஆரம்பித்திருப்பது நாட்டுக்கு ஆரோக்கியமான சமிக்ஞை அல்ல.

கொரோனாத் தொற்று நிலைமை, நாட்டின் சூழல் பாதிப்புக்கள் என்று பெரும் அழிவுகளை எதிர்கொண்டு மக்கள் திக்கித் திணறிவரும் நிலையில், நாட்டின் ஆட்சிப்போக்கும் வில்லங்கமாகவே இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. இந்த நிலைமை தொடர்ந்தால் தமிழ் மக்களை மட்டுமல்ல, இலங்கையையும் கடவுள் தான் காப்பாற்ற வேண்டியிருக்கும்.




# 25 லட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு கொவிட் தடுப்பூசி

**கொழும்பு, ஜூன் 27**

**இலங்கையில் 2021 ஜனவரி 29 ஆம் திகதி முதல் ஜூன் 25 ஆம் திகதிவரை 25 லட்சத்து 43 ஆயிரத்து 22 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இன்றைய தினமும் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்படுகின்றது.**



ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அஸ்ராஜெனகா நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள கொவிஷீல்ட், சீனாவின் தயாரிப்பான சைனோஃபார்ம் மற்றும் ரஷ்ய தயாரிப்பான ஸ்புட்னிக் வை ஆகிய தடுப்பூசிகள் இலங்கையில் மக்களுக்கு ஏற்றப்பட்டுள்ளன.

இதன்படி கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறு முதலாவது டோஸை பெற்றுக்கொண்டவர்களில் 3 லட்சத்து 72 ஆயிரத்து 719 பேருக்கு இரண்டாம் டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

2021 மார்ச் 26 ஆம் திகதி முதல் ஜூன் 25 ஆம் திகதிவரை 15 லட்சத்து 2 ஆயிரத்து 985 பேருக்கு சைனோஃபார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது டோஸை 4 லட்சத்து 87 ஆயிரத்து 893 பேர் பெற்றுள்ளனர்.

ஸ்புட்னிக் வை தடுப்பூசி ஏற்றும் பணி ஏப்ரல் 30 ஆம் திகதி ஆரம்பமானது. ஜூன் 25 வரை ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 795 பேருக்கு அந்த தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது. இதில் 14 ஆயிரத்து 363 பேர் இரண்டாம் டோஸை பெற்றுள்ளனர்.

அதேவேளை, அடுத்துவரும் நாள்களிலும் இலங்கைக்கு தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன. செப்டம்பர் மாதம் முடியும்வரை சுமார் 13 மில்லியன் பேருக்கு தடுப்பூசி ஏற்றக்கூடியதாக இருக்கும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நாட்டில் நேற்றும் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது. இன்றும் தொடர்கின்றது. (எ-44)

# துமிந்த ஆட்டம் விரைவில்!

கொழும்பு. ஜூன் 27

ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, குறுகியதொரு ஓய்வு காலத்தின் பின்னர் மீண்டும் செயற்பாட்டு அரசியல் நடவடிக்கையில் இறங்குவார் என தகவல் வெளியாகியுள்ளது.

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும், அவர் சிறைக்குச் சென்று சுமார் நான்கரை வருடங்களுக்குள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் கடந்த 24 ஆம் திகதி விடுதலையானார்.

தற்போது அவர் சுயதனிமையில் இருக்கின்றார். தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்த பிறகும் அவர் சிறிது காலம் ஓய்வில் இருப்பார் எனவும், அதன்பின்னரே அரசியலில் இறங்குவார் எனவும் தெரியவருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஊடாகவே, சிறைக்குச்செல்ல முன்னர் துமிந்த சில்வா அரசியல் செயற்பாட்டில் பங்கேற்றிருந்தார். தற்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளது. எனவே, மொட்டுக் கட்சி ஊடாகவே அவரின் அரசியல் செயற்பாடு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, மாகாணசபைத் தேர்தலொன்று நடைபெறும் பட்சத்தில் முக்கிய பதவியில் துமிந்த சில்வா போட்டியிடக்கூடும் எனவும் சில சிங்கள இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 1932 • 03 • 28

இறப்பு 2021 • 06 • 18

## திருமதி நகுலேஸ்வரி சிவசுப்ரமணியம்

*(இளைப்பாறிய ஆசிரியை)*

சரசாலை, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி நகுலேஸ்வரி சிவசுப்ரமணியம் 18.06.2021 வெள்ளிக்கிழமை தனது 89 ஆவது வயதில் அன்னாரது இல்லத்தில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய இலங்கை வங்கி அதிகாரி மயில்வாகனம் சிவசுப்ரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினம், அன்னலட்சுமி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற மயில்வாகனம், சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகளும் கௌரி , பவானி ( USA ) ஆகியோரின் அன்புத்தாயாரும் சாந்திகுமார் ( Ex Emirates Airline, Dubai), சுரேந்திரன் (USA ) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மகேஸ்வரி, சிவசுப்ரமணியம், பாலசுப்ரமணியம் ( Singapore ) பரமேஸ்வரி ( UK ) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற குகதாசன், ஞானேஸ்வரி, ஜெயமலர் ( Singapore ), ராஜ்குமார் ( UK ) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரணவன், ஜனார்த்தன் ( All USA ) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.06.2021 ஞாயிற்றுக்கிழமையன்று கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்

**தகவல்**

**கௌரி சாந்திகுமார் - மகள்**
**பவானி சுரேந்திரன் - மகள்**
**சாந்திகுமார் - மருமகன்**
**சுரேந்திரன் - மருமகன்**

# மரண அறிவித்தல்



## திரு. தம்பு சிவஞானசுந்தரம்

சுன்னாகம் பொன்னராங்கத்தை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு. தம்பு சிவஞானசுந்தரம் அவர்கள் லண்டனில் கடந்த (13.06.2021) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பு பொண்ணுப்பிள்ளை அவர்களின் அருமை மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி ராமநாதன் மீனாட்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவபூரணம் அவர்களின் பாசமிகு கணவரும். திருமதி லோகேஸ்வரி விநாயகமூர்த்தி (லண்டன்). திருமதி விக்னேஸ்வரி ரவீந்திரன் (கனடா ). திரு. சிவதம்பு ( சைவ முன்னேற்ற சங்கம் பிரித்தானியா. தலைவர் சுன்னாகம் மக்கள் ஒன்றியம் ஐக்கியராச்சியம்). காலஞ்சென்ற திரு. செந்தில்நாதன் ஆகியோரின் அன்பு தந்தையும். திரு. விநாயகமூர்த்தி. திரு. ரவீந்திரன் திருமதி "முத்துராணி தம்பு ஆகியோரின் அன்பு மாமனாரும். திரு. சிவபாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற திரு. சிவ சங்கரநாதன் ஆகியோரின் அருமை சகோதரனும். காலஞ்சென்ற பரமேஸ்வரி. தெய்வநாயகி. ஆகியோரின் அன்பு மைத்துனரும். திரு.கவிலோன். செல்வி யசிக்கா. செல்வி தர்ஷனா. செல்வி யஸ்வினி. திருமதி தனுஷா கவிலோன் ஆகியோரின் அன்பு பேரனும். கத்தியா. கைரா. கைரன் ஆகியோரின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை **St Laurence Church 37, Bromley Road, London, SE6 2TS 28.06.21** ( திங்கள். 6.30 -10.00am) இல் நடைபெற்று. தகனம் Hither Green Crematorium Verdant lane, London, SE6 1TP (10.30 -11.00am) நேரஞ்சல் www.lankasri.com மற்றும் www.ninaivukal.info ஊடக பார்வையிடலாம்.

**தகவல்:**

திரு. சிவதம்பு 07861393295
திருமதி லோகேஸ்வரி விநாயகமூர்த்தி -02086528122 07860864498
திருமதி விக்னேஸ்வரி ரவீந்திரன் +15143004835

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு.

**077 223 1112**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள வீடொன்றுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை. **074 1366 118**

## பண்ணை வேலைக்கு ஆட்கள் தேவை

இடம் - பளை
தங்கி நின்று வேலை செய்பவர்கள் மாத்திரம் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: **076 430 9652**

## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கில் Medical Facultyக்கு அண்மையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 4அறைகளையும், 4 குளியலறைகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. வாடகை - **25,000/=**
(Prefer University Female Students)
**076 243 0394**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 07 . 06 . 1960



ஆண்டவன் திருவடியில் 28 . 05 . 2021

எமது குல விளக்கு

## அமரர் ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி

அன்னையே இனி என்று காண்போம் உம்மை
ஆண்டவன் படைப்பில் அற்புதமானவர் நீர்
இன்முகம் கொண்டு அனைவருடனும் பழகுபவரே
ஈசன் திருவடியை நாடியது ஏனோ
உண்மையான மனிதராய் வாழ்ந்து
ஊர் மீது அதீத பற்றுக் கொண்டவரே
எம்மை விட்டு விண்ணுலகம் சென்றதேனோ
ஏணியாக இருந்தவரே ஏன் சென்றீர்
ஐயம் போக்குபவரே நாம் அழுவது கேட்கவில்லையா
ஒரு முறை மீள உயிர் பெற்று வரமாட்டீரோ
ஓயாமல் உம்மை எண்ணிப் பார்க்கிறோம்
ஔடதமே எம்மை விட்டு ஏன் சென்றீர்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**காட்டுக்கந்தோர் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்**

### எம் நெஞ்சம் நிறைந்த நன்றி

**சிறந்த ஆளுமையும் நற்பண்புடன் திறன்மிக்கவராகவும் கருணையின் பிறப்பிடமாய் நிலை நின்று கருத்தோடு இவ்வுலகில் பாசமாய் வளர்த்தெடுத்து இதயத்தில் நீங்காத நினைவலையாக இருக்கும் – எம் அன்பிற்கும் பண்பிற்கும் குலத்திலகமாகி உறைவிடமாகத் திகழ்ந்த எங்கள் அன்னை**

## அமரர் ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி

அவர்களின் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும், முகநூல் ஊடாகவும், கண்ணீர் பதாகைகள் மூலமும் அனுதா பங்களைத் தெரிவித்து எம் ஆறாத்துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் எமது அன்னை நோயுற்று இருந்த போது வைத்தியம் செய்த வைத்தியர்கள், பராமரித்த தாதியர்கள் அனைவருக்கும் நன்றி.

Commercial Leasing & Finance PLC உத்தியோகத்தர்கள் யா/ வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், உயர்தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள், பட்டப் படிப்பு ஆசிரியர்கள், இரங்கல் உரை வெளியிட்ட அரியாலை சன சமூக நிலைய நிர்வாகத்தினர், பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டது மட்டுமல்லாது கண்ணீர் அஞ்சலி பதாகை ஊடாக அஞ்சலி செய்த அரியாலை 102ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகத்தினர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட அரியாலை மக்கள் மன்றம் நோர்வே, அரியாலை சமூக அபிவிருத்திச் சங்கம் ஐக்கிய இராச்சியம் மற்றும் இறுதிக் கிரியைக்கு உதவி செய்த அலுவலகர்கள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**காட்டுக்கந்தோர் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் உதவியாளர் தேவை

Cargils Square இல் (No-11 1st Floor, Jaffna) அமைந்துள்ள Secrets விற்பனை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை. தகைமை : A/L or O/L ஆங்கில அறிவு. வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது.
வேலை நேரம் : 10.00 A.M to 7.30 P.M, Monday - Saturday
தொடர்புகளுக்கு:Priya.G - 077 951 0436
021 221 6488

## நாகபூஷணி திருமண சேவை

அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக்கொள்ளலாம்.

021 222 9306, 077 138 7596
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## கணினி தரவுபதியுனர் தேவை

முன்னணி நிறுவனத்தின் விநியோக நடவடிக்கைக்கு 40 வயதிற்கு மேற்பட்டவரும் கணக்கியல் அறிவும், கணினியில் அனுபவமும், கணக்குப் பதிவில் தேர்ச்சியும் உடைய ஆண் கணினி தரவுபதியுனர் தேவை. விரும்புவோர் சுயவிபரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.

தொடர்பு: Ess Jey Electricals
No:09, Stanly Road, Jaffna.
TP: 021 222 2564, 021 222 7430

பாலன் மில்லினால் தயாரிக்கப்பட்ட சுத்தமான கலப்படமற்ற தேங்காய் எண்ணெய் சில்லறையாக பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்.

## பாலன்மில்

தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை,
கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதைகோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை
3Kg முதல் 3000Kg வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும்.

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.
021 321 2624

# சங்கிலியால் கட்டப்பட்டு களனி கங்கையில் சடலம்

## தலையில் சூட்டுக்காயங்கள் தெற்கில் பெரும் பரபரப்பு

கொழும்பு, ஜூன் 27

கை, கால்கள் இரும்புச் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் களனி கங்கையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது தெற்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நவகமுவ ரனால பிரதேசம், களனி கங்கையிலிருந்து 50 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவரின் கை, கால்கள் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு பூட்டுப் போட்டுப் பூட்டப்பட்டுள்ளது எனவும், தலையில் இரு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

ஆண் ஒருவர் கடத்திச்செல்லப்பட்டுள்ளார் என்று ஹங்வெல்ல பொலிஸ் நிலையத்தில் கடந்த 23ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இரும்புச் சங்கிலியால் கைவிலங்கிடப்பட்டு குறித்த நபர் இழுத்துச்செல்லப்பட்டார் என்று குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று மீட்கப்பட்ட சடலம், கடத்திச் செல்லப்பட்டவரது சடலமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திரைப்படப்பாணியில் இவ்வாறு கொடுமையாகக் கொல்லப்பட்டு சடலம் மீட்கப்பட்டுள்ளமை தெற்கில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-22)

# 'நாய்' எனக் கூறியிருந்தால் நிரூபித்துக் காட்டவேண்டும்!

## முன்னணியின் உறுப்பினர் ரஜீவ்காந்த் வெளிப்படை



யாழ்ப்பாணம், ஜூன் 27

மாநகர சபை அமர்வில் குறிப்பிட்ட நபரை பார்த்து நான் 'நாய்' என கூறியிருந்தால் அதனை நிரூபித்துக்காட்டவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர பை உறுப்பினர் ஜெ.ரஜீவ்காந்த் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற யாழ் மாநகர சபை அமர்வில் சக உறுப்பினர் ஒருவரை நோக்கி 'நாய்' என விளித்துப் பேசினார் என்று ஜெ.ரஜீவ்காந்த் ஒரு மாத காலத்துக்கு சபை அமர்வில் கலந்து கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே ஜெ.ரஜீவ்காந்த் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-20)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி [27.06.2021]

அமரர் பொன்ரதம் (சுமங்கலி) விவேகானந்தன்



பிறப்பு: 14.08.1948
இறப்பு: 27.06.2010

பதினொரு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவை மறக்க முடியவில்லை. தினமும் உங்களை நினைத்துக் கலங்குகின்றோம்.

உம் பிரிவால் வாடும்...
கணவர்,
சகோதர சகோதரிகள்,
பெறாமக்கள், மருமக்கள், சித்தி, மைத்துனர்கள்.

## 31ஆம் நாள் இதய அஞ்சலி

அன்னையின் மடியில் 18 . 01 . 1978
அரன் அடியில் 28 . 05 . 2021



திருநாவுக்கரசு அமலராஜன் (லட்டு)

லட்டுப் போல அழகிய முகம்
கள்ளமில்லா சிரிப்பு
இனிமையான பேச்சு
ஓடிச்சென்று உதவிடும் தயாளகுணம்

மானிடத்தின் மகத்துவம் நீ .
தேடற்கரிய செல்வம் நீ
எங்கள்உதயதீபமும் நீ
சொந்தம் பிறப்பிலிருந்து வருவதில்லை
என்பதை உணர்த்தியவன் நீ
எம்மை விட்டு அவசரமாய் எங்கே சென்றாய்

தம்பி மறக்க முடியுமா உன் நினைவுகளை
எம் இதயத்தில் என்றும் நிலைத்திருப்பாய்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பெரிய அரசடி சாவகச்சேரி. குடும்பத்தினர்.

## பிரத்தியேக வகுப்புகள்

A/L இணைந்த கணிதம் 2023, 2022 மற்றும் 2021 மாணவர்களுக்குத் தனியாகக் கற்பிக்கப்படும்.

074 1110 790

## மணமகள் தேவை

1979, யாழ் இந்து. செவ்வாய் குற்றமற்ற லண்டன் பிரஜாவுரிமை உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.

தொடர்பு: 071 689 1269

## பெண்கள் வேலைக்கு தேவை

யாழில் இயங்கும் புகைப்பட கலையகம் ஒன்றிற்கு அல்பம் கட்டும் வேலைக்கு பெண்கள் தேவை. பழக விரும்புபவர்களும்.

0777 222 362

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவியரீதில் சிநேகபூர்வமான சேவை.

AAA Gold Center
076 568 4346

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து பணிசெய்யக் கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித்தீர் மானிக்கப்படும்.

077 960 4079
077 086 8634

## விற்பனைக்கு

2 பழைய கார். 35x35 சதுர அடி Aspeta கூரையுள்ள Set Car engine-03 30' (அடி) நீளமுள்ள வாகன அடிச்சட்டம் (Chesi) 250 பழைய ஓடுகள். 1 மேசைப் பட்டறை (பழசு). வேறு இரும்புகள் மொத்தமாக.
விலை 750000.00
மேலதிக விபவரங்களுக்கு:
074 0016 757

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித் தெரு வீதியில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் விஸ்தீரணம் நில.பர 01 1/2 யும் வீடும் விற்பனைக்கு உண்டு.

076 702 3565

## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர் திரு. அ.தேவகுமார் அவர்களின்
(A.T. குமார் விற்பனை நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி)
பாசமிகு தாயார்

திருமதி இராசம்மா அருளம்பலம்

அவர்கள் கடந்த 26.05.2021 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

## கண்ணீர் அஞ்சலி

கடந்த (21.06.2021) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எமது பாடசாலை முன்னாள் அதிபர் செல்வி. சூரியவதனி அரசரத்தினம் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி அரசரத்தினம் நாகரத்தினம்


அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
20 . 02 . 1988



உதிர்வு
26 . 06 . 2021

## திரு. கிருபாமூர்த்தி சிந்துஜன்
## (சிவன் ஸ்டோர்)

K.K.S. வீதி இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் மலேசியா, இணுவிலை வாழ்விடமாகவும் கொண்ட கிருபாமூர்த்தி சிந்துஜன் நேற்று (26.06.2021) சனிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் கிருபாமூர்த்தி பிரபாவதி தம்பதியரின் அன்பு மகனும், கீர்த்திகாவின் (ஆசிரியை - யா/பளை மத்திய கல்லூரி) அன்பு அண்ணாவும், கபிதாஸின் (Elephant House) அன்பு மைத்துனரும், சஸ்விகாவின் அன்பு மாமாவும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் மகேஸ்வரி, நடராசா நாகம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் தயாபரன் சந்திரவதனா, மகேஸ்வரன் கல்யாணி ஆகியோரின் அன்பு மருமகனும், ரவீந்திரன் வனஜாவின் அன்புப் பெறாமகனும், அருண்பிரசாத், சோபிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சேந்தன், கௌசிகன், மாதுனன், துவாரகன், மாதங்கி ஆகியோரின் அன்பு மச்சானும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, வீரசிங்கம், ஆறுமுகம் சரஸ்வதி, சிவபாதம், சண்முகநாதன், ஞானேஸ்வரி, பரமேஸ்வரி, ஞானேஸ்வரன், சின்னம்மா, நாகரத்தினம், தில்லைநாயகி மற்றும் சுந்தரேஸ்வரி, திருச்செல்வம், தில்லையம்பலம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆறுதிருமுருகனின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அக்கா அகம்'
K.K.S. வீதி, இணுவில் மேற்கு.

தகவல்:
அ.கிருபாமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர்...

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

மரணதண்டனைக் கைதி துமிந்த சில்வாவை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலைசெய்ததை மூடிமறைப்பதற்காகவே தமிழ் அரசியல் கைதிகளில் 16 பேரை ஜனாதிபதி விடுதலைசெய்தார் என்று எதிரணியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை அரசு அடியோடு நிராகரிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் தினேஸ் குணவர்த்தன மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசு பதவியேற்ற நாள் தொடக்கம் துமிந்த சில்வாவை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு கொழும்பு மாவட்ட மக்கள், ஆளும் கட்சியினர் மட்டுமல்ல எதிரணியினர் கூட ஜனாதிபதியிடம் எழுத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர். அரசியல் பழிவாங்கல் காரணமாகவே துமிந்த சில்வா மரணதண்டனைக் கைதியானார்.

கடந்த நல்லாட்சி அரசுதான் தமிழ் மக்களை ஏமாற்றி ஆட்சி நடத்தியது. கோத்தாபய அரசு ஒருபோதும் தமிழ் மக்களை ஏமாற்றாது. தமிழ் மக்களை வைத்து அரசியல் நடத்தாது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அரசு அதீத அக்கறை கொண்டுள்ளது. அதை வெளிப்படுத்தும் முதல் சமிக்ஞையாகவே தமிழ் அரசியல் கைதிகள் 16 பேரை பொதுமன்னிப்பின் கீழ் ஜனாதிபதி விடுதலைசெய்துள்ளார். சிறையிலுள்ள ஏனைய அரசியல் கைதிகளையும் விடுவிக்கும் நடவடிக்கையை அரசு முன்னெடுக்கும்.

அதேவேளை, தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கும். எனவே, அரசை தமிழ் மக்கள் நம்ப வேண்டும்' எனவும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மேலும் கூறினார். (ம-22)

### அரசுக்கு...

டத்தை முன்னெடுத்தனர்.

ஊழல் நிறைந்த அரசின் தன்னிச்சையான ஆட்சிக்கு எதிராக நாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது எனவும், எரிபொருள் விலை குறைக்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ம-22)

### அரசியல் கைதி....

வின் வாதத்தையடுத்து கொழும்பு மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்ட புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட சந்திரபோஸ் செல்வச்சந்திரன் (வயது 40) என்ற அரசியல் கைதியே உயிரிழந்தவராவார்.

கடந்த 2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டி பித்தலை சந்தியில் அப்போதைய பாதுகாப்புச் செயலரான கோத்தாபய ராஜபக்சவை கொலைசெய்ய நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுடன் குறித்த நபர் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டி 14 ஆண்டுகள் குறித்த நபர் தடுப்பில் வைத்து விசாரிக்கப்பட்டார். ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவின் வாதத்தை அடுத்து கடந்த வருடம் அவர் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் நேற்றுத் திடீரென மயக்கமடைந்து விழுந்த அவர் உயிரிழந்தார்.

குறித்த நபருக்கு 14 இடங்களில் அடிகாயங்கள் உள்ளன என்றும் அவை விசாரணையின்போது ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என்றும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

### கொரோனா....

என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 51 ஆயிரத்து 727ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 16 ஆயிரத்து 840 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 982 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

### கொரோனாத்....

கள் இருவர் நேற்று உயிரிழந்தனர்.

காரைநகரைச் சேர்ந்த 62 வயதுடைய பெண்ணும், மன்னாரைச் சேர்ந்த 24 வயதுடைய ஆணுமே இவ்வாறு உயிரிழந்தனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. இருவரின் சடலங்களும் உரிய சுகாதார வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மின்தகனம் செய்யப்பட்டன.

அதேநேரம் மேலும் மூவர் கொரோனாவால் உயிரிழந்தனர் என்றும் நேற்றிரவு தகவலொன்று வெளிவந்திருந்தது. எனினும் அந்த மூவரும் ஏனைய நோய்களாலும் பாதிக்கப்பட்டிருந்தனர். எனவே இறந்தவர்களுக்குக் கொரோனா இருந்ததா அல்லது கொரோனாவால் இறந்தார்களா என்பது தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது. (ம-26)

### சாவு...

என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 25 ஆண்களும், 18 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 905ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

### வடக்கில்...

திலேயே 56 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் தனிமைப்படுத்தல் நிலையத்தில் 9 பேரும், முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், பூந்தோட்டம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவரும், கே.கே.எஸ் கடற்படை முகாமில் ஒருவரும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், மடு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேரும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேரும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேரும், யாழ் நகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 20 பேரும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், யாழ். போதனா மருத்துவமனையில் 3 பேரும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவரும், பண்டத்தரிப்பு மருத்துவமனையில் 2 பேரும் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். (ம)

### சுகவீனத்தால்...

கடித்தமையால்தான் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த 40 வயதுடைய குறித்த பெண் உறவினரின் வீட்டுக்கு கடந்த 10ஆம் திகதி சென்றபோது அவரை நாய் கடித்துள்ளது. இதையடுத்து இரு தினங்கள் கழித்து அவர் ஊசி ஏற்றிக்கொண்டுள்ளார்.

பின்னர் அவர் சுகவீனமடைந்து நேற்றுமுன்தினம் காரைநகர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

### அடுத்த....

ராஜபக்ச போட்டியிடவுள்ளார் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் சபாநாயகரும் அமைச்சருமான சமல் ராஜபக்ச உள்ளிட்டவர்களுக்கு இடையிலான இரகசிய சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொழும்பில் உள்ள மிரஹானை இல்லத்தில் இந்தச் சந்திப்பு இரவில் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் குறித்த ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பஸில் ராஜபக்சவைப் போட்டியிட வைப்பதற்கான இணக்கப்பாட்டுக்கு ராஜபக்ச குடும்பம் வந்திருக்கின்றது என பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அமைச்சர் நாமல் ராஜபக்சவை களமிறக்க உத்தேசிக்கப்பட்டிருந்தபோதிலும், தற்போது அந்தத் தீர்மானத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதம் நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்படவுள்ள பஸில் ராஜபக்ச 2024 ஆம் ஆண்டுக்குள் இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான சவாலை ஏற்றுக்கொள்ளப் போகின்றார். அந்தச் சவாலில் அவர் வெற்றியடைந்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலானது மிகப்பெரிய சவாலாக அவருக்கு அமையாது என்பதே ராஜபக்ச குடும்பத்தினரின் ஊகமாக உள்ளது என பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் குறிப்பிட்டார். (ம-22)

### சகல...

பதாகைகளை ஏந்தியவாறு தமது கோரிக்கையை வெளிப்படுத்தினர்.

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் மற்றும் ஏனையவர்களை சித்திரவதை செய்து துன்புறுத்துவதை நிறுத்த வேண்டும், ஏனைய கைதிகளுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும் என்று எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

சர்வதேச சித்திரவதைக்கு எதிரான தினத்தை முன்னிட்டு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும்போது, முகநூலில் கருத்துக்களைப் பதிவிட்ட இளைஞர்களை விடுவிக்காமல் இருப்பது ஏன் என்றும் போராட்டக்காரர்கள் கேள்வி எழுப்பினர். இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனும் பங்கேற்றார். (ம-22)

### வெடிக்காத...

டிருந்த நேரம் நிலத்தைத் தோண்ட முற்பட்டபோது குறித்த குண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)

# இரணைதீவு மக்களுக்கு மலேரியா பரிசோதனை

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுட்பட்ட இரணைதீவு மக்களுக்கு நேற்று முன்தினம் மலேரியா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை, மலேரியா அற்ற நாடாக அறிவிக்கப்பட்டிருப்பினும், இரணைத்தீவு இலங்கை - இந்தியாவுக்கு இடைப்பட்ட கடலில் தனித்தீவாக இருப்பதால், இந்தியாவில் தற்போதும் இருக்கின்ற மலேரியா சில வேளைகளில் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற அடிப்படையில் இப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு அங்கு குடியேறி வசித்து வருகின்ற மக்களுக்கு நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டன. கிளிநொச்சி மலேரியா தடுப்பு பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரியும், மாவட்ட உளநல மருத்துவ அதிகாரியுமான மா. ஜெயராஜா தலைமையிலான மருத்துவக் குழுவினர் இரணைத்தீவுக்குச் சென்று அங்கு வசிக்கின்றவர்களின் குருதி மாதிரிகளை பரிசோதனைக்காகப் பெற்றனர். (ப-214)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இலங்கையை வழித்துத் துடைத்தது இங்கிலாந்து

சவுத்தாம்டன், ஜூன் 27

இலங்கைக்கு எதிரான மூன்றாவதும் இறுதியானதுமான ரி20 ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை 3:0 என்ற அடிப்படையில் வழித்துத் துடைத்தது இங்கிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மலன் 76 ஓட்டங்களையும் பேர்ஸ்டவ் 51 ஓட் டங் களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சமீர 4 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்குக் களமி றங்கிய இலங்கை அணி வெறும் 91 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளை யும் இழந்து 89 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பினுர பெர்னான்டோ பெற்ற 20 ஓட்டங்கள்தான் அதிகபட்சம். பந்து வீச்சில் வில்லி 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக மலனும், தொடராட்ட நாயகனாக சாம் கரனும் தெரிவாகினார்கள். (ம)



# காலிறுதியில் டென்மார்க்

உரோம், ஜூன் 27

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று இரவு இடம்பெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் வேல்ஸை இலகுவாக வீழ்த்தி காலிறுதிக்குச் சென்றது டென்மார்க். டொல்பேர்க் 27 ஆவது மற்றும் 46ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று முன்னிலை வகித்தது டென்மார்க்.

இரண்டாவது பாதியிலும் அந்த அணி ஆதிக்கம் செலுத்தியது. ஜொகைட் 88ஆவது நிமிடத்திலும் மார்ட்டின் 92ஆவது நிமி டத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் டென்மார்க் வெற்றி பெற்றது. (ம)


**Individual English Classes**

**Grade 7 - Advanced level**

பட்டதாரிகள், தொழில் புரிவோர்

அடிப்படையில் இருந்து

Grammar Fluent Spoken

**Ganesh BA 077 766 8725** Jaffna.

**BIOLOGY**

Personal & Group Classes

**076 027 9144**

**பணியாளர் தேவை**

எமது நிறுவனத்தின் கைதடி கிளைக்கு பெண் பணியாளர் தேவை.

தகைமை:- A/L, ஓரளவு கணினி அறிவு

**V7 Group of Companies**

**0774581078, 0774223579**

A9 வீதி, கைதடி.

**வேலைக்கு ஆட்கள் தேவை**

நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள இனிப்புத் தொழிற்சாலைக்கு வேலைக்கு பெண்கள் தேவை.

மேலதிக தொடர்புகளுக்கு: **077 9693 210**

**வீடு வாடகைக்கு**

யாழ் நகரில் மேல் வீடு வாடகைக்கு உண்டு. 4Room, மற்றும் 2Bath Room, 4Hall உடன்

**வாடகை: 35000/-**

**அட்வான்ஸ்: 4 இலட்சம்**

தொடர்பு : **076 034 4767**

**வேலைவாய்ப்பு**

கிளிநொச்சி, மல்லாவி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கட்டட நிர்மான வேலை செய்வதற்கு மேசன், சட்டறிங் வேலை செய்பவர், கம்பி வேலை செய்பவர் மற்றும் கூலியாட்கள் உடன் தேவை. தங்குமிட வசதி உண்டு. நாள்/கிழமை அடிப்படையில் சம்பளம் வழுங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**0763165738, 0777120945**

**வாடகைக்கு**

கச்சேரி நல்லூர் வீதியில், கற்பக பிள்ளையார் நுழைவாயில் அருகில் சகல வசதிகளுடனும், புதிதாகக் கட்டப்பட்ட 02 மாடி வீட்டில் மேல் மாடி மட்டும் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: **0777 947 192**

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும் திறமையுமுடைய மேசன், கூலியாள், பெயின்ரர், கல் அரிதல் மற்றும் செங்கல் கட்டு வேலை செய்யக் கூடியவர்கள் தேவை.

தொடர்பு: **076 316 5734**

**Vacancy**

Software Engineer, Associate Software Engineer, Senior Software engineer, Cashier, Delivery Boy, Data Entry Operator, Accounts Assistant, Office Assistant, Security guard

**0741 38 3368**

**dewmasweb.com**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும். (யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து **100 m** தூரம்)

தொடர்பு:

**077 468 3354, 076 221 2037, 077 2880 152**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். யாழ் நகரிலிருந்து 1½ km தூரம் (பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)**

தொடர்பு: **076 734 1023, 077 064 2661**

**பணியாளர்கள் உடன் தேவை**

வவுனியா மூன்றுமுறிப்பில் அமைந்துள்ள AMT சேர்விஸ் நிலையத்தில் பணியாற்றுவதற்கு அனுபவமுள்ள வாகன சுத்திகரிப்புப் பணியாளர்கள் உடன் தேவை.

**0244925902, 0773434012, 0777391221**

**பண்ணை முகாமையாளர்கள் தேவை**

யாழ் மாவட்டதில் வெவ்வேறு பகுதிகளில் அமைந்துள்ள விவசாய பண்ணைகளை முகாமை செய்து, வழி நடத்தக்கூடிய பண்ணை முகாமையாளர்கள் தேவை.

**அவசியமான தகைமைகள்:**

1. விவசாய தொழில்நுட்ப அறிவு
2. விவசாய பண்ணை முகாமைத்துவ முன் அனுபவம்
3. **பணியாளர்களை வழி நடத்தும் திறன்கள்**
4. **அடிப்படை நிதி முகாமைத்துவ திறன்.**

**தெரிவாகும் சந்தர்ப்பத்தில், உடனடியாக இணையத் தயாராக உள்ள பொருத்தமானவர்கள், உங்கள் சுய விபரங்களுடன் கீழ்வரும்** தொலைபேசி / **மின் அஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.**

**Jaffna Horticulture (Pvt) Ltd**

**Phone: 0772849599**

**Email : jaffnahorticulture@gmail.com**


## மரண அறிவித்தல்



### திருமதி மகாசக்தி புவனேஸ்வரன்

**பிறப்பு : 08.12.1967** **இறப்பு : 25.06.2021**

சங்குவேலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாசக்தி புவனேஸ்வரன் கடந்த (25.06.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், புவனேஸ்வரனின் பாசமிகு மனைவியும், இலக்கியா, துதர்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மருதராஜா, மாதினி, மகாதேவி, மல்லிகா, அமரர் மங்களேஸ்வரி மற்றும் மகா விஷ்ணு ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மகுலபவானி, ஜெயபரன், நிருபேந்திரன், நவரட்ணராஜா, மேனன், அனுஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.** **தகவல்: குடும்பத்தினர்.**



... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியிற் பேசிப் பேசித்
தொந்தரவுக் குள்ளானான் காசி.
மலரை மணந் தான்! எனினும்
வாழ்கின்றான் - மீண்டும் அதே
தொலை பேசியிற் பேசிப் பேசி
- மஹாகவி

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: | வள்ளுவர் ஆண்டு : 2052 | ஆனி: 13 | ஞாயிற்றுக்கிழமை (27.06.2021) | சிகரம் : 53



வரைந்தவர் றஷ்மி

○ சேரன்

மஹாகவி காலமாகி இந்த ஜூன் மாதத்துடன் ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. "உயர் பதவியில் இருந்த ஏழை மனிதனாக, வாழ்வேன் மடியும்வரை" என்று பாடி அவ்வாறே வாழ்ந்து மடிந்த ஒரு உன்னதமான கவிஞர் அவர். வாழ்ந்த காலத்திலும் ஈழத்தில் பெருமளவு கொண்டாடப்பட்ட கவிஞர் அவர். வயதில் இளையவர் எனினும் 'மூத்த கவிஞர்' என அழைக்கப்பட்டவர். நாற்பத்து நான்கு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து அக் குறுகிய காலத்தில் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் அவர் வழங்கிய நற்கொடை அளப்பரிது.

15

# மஹாகவி:

# மாண்புமிகு பேரெழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ நிலாந்தன்

# பொசன் நாடகம்



கடந்த 12 ஆண்டுகாலத் தமிழ் அரசியலின் இயலாமையை வெளிக்காட்டும் குறிகாட்டிகளில் ஒன்று தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம். கடந்த 12 ஆண்டுகளாக தமிழ் மக்கள் வினைத்திறன் மிக்க விதத்தில் போராடவில்லை என்பதற்கு அது ஒரு குறிகாட்டி. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக தமிழ் அரசியல் தலைமைகள் பொருத்தமான வெற்றிகள் எதனையும் பெறத் தவறிவிட்டார்கள் என்பதற்கு அது ஒரு குறிகாட்டி.

தமிழ்க்கட்சிகளில் துருத்திக்கொண்டு தெரியும் பலரும் சட்டத்துறை ஒழுக்கத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் கடந்த 12 ஆண்டுகளில் அரசியல் கைதிகளுக்காக போராடுவதற்கென்று சட்ட உதவிக் கட்டமைப்பு எதையும் இன்று வரையிலும் எந்த ஒரு அரசியல் கட்சியும் உருவாக்கியிருக்கவில்லை. மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மையம் போன்ற எத்தனை செயற்பாட்டு அமைப்புக்கள் தமிழ்மக்கள் மத்தியில் உண்டு?

இப்படிப்பட்ட ஒரு வெற்றிடத்தில் தான் கைதிகள் காலத்துக்கு காலம் போராடத் தொடங்குவார்கள். குறிப்பாக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கத் தொடங்குவார்கள். உண்ணாவிரதிகளின் உடல்நிலை நலிவுறத்தொடங்கும்பொழுது சமூகத்துக்குள் ஒரு கொதிப்பு ஏற்படும். அப்பொழுது கட்சிகள் அதில் தலையிடும். தலையிட்டு ஏதாவது வாக்குறுதியை வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைக்கும். ஆனால் வாக்குறுதியளித்தபடி கைதிகளை விடுவிக்க கட்சிகளால் முடிவதில்லை. இதுவிடயத்தில் கட்சிகளின் வேலை என்னவென்று பார்த்தால் உண்ணாவிரதத்தை முடித்து வைப்பதுதான் என்ற ஒரு நிலைமையே கடந்த 12 ஆண்டுகளாகக் காணப்படுகிறது. இவ்வாறானதொரு அரசியல் சூழலில்தான் அரசாங்கம் கடந்த பொசன் தினத்தை முன்னிட்டு 16 அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருக்கிறது.

மன்னிப்பு என்றால் என்ன அர்த்தம்?அவர்கள் எந்த அரசியலுக்காகப் போராடினார்களோ அந்த அரசியல் ஒரு குற்றமாகப் பார்க்கப்படுகிறது என்று பொருள். அதனால்தான் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பானது பொது மன்னிப்பு என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக கைதிகளை விடுவிப்பது என்று ஓர் அரசியல் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

ஆனால் விடுவிக்கப்பட்ட கைதிகளும் அவர்களின் உறவினர்களும் இது விடயத்தில் கொள்கை நிலைப்பாட்டை விடவும் தமது உறவுகள் கூடிய விரைவில் விடுவிக்கப்படுவது முக்கியம் என்று வலியுறுத்துகிறார்கள். கொள்கையை வலியுறுத்தும் கட்சிகள் அல்லது செயற்பாட்டு அமைப்புகள் கைதிகளை விடுவிக்கும் வல்லமையோடு இல்லை என்பதைக் கடந்த 12 ஆண்டுகள் நிரூபித்து விட்டன. இந்த இயலாமையின் பின்னணியில் அரசியல்கைதிகள் எப்படித் தண்டனையைப் பெற்றுக் கொண்டு வெளியே வரலாம் என்றே சிந்திக்கிறார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எப்பொழுது விசாரணை?எப்பொழுது தண்டனை? என்று தெரியாமல் காலவரையறையின்றிக் காத்திருப்பதை விடவும் ஏதாவது ஒரு தண்டனையை ஏற்றுக்கொண்டு அதன்படி விடுதலை செய்யப்படும் திகதியைத் தெரிந்து கொண்டு நிம்மதியாக இருக்கலாம் என்று கைதிகள் கருதுகிறார்கள்.



இவ்வாறானதொரு பரிதாபகரமான சூழ்நிலையில் ஒரு பெருந்தொற்றுநோய் காலத்தில் சமூகத்தில்மறக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட ஒரு தரப்பினராக தமிழ் அரசியல் கைதிகள் காணப்படுகிறார்கள்.

எல்லாத் தமிழ்க்கட்சிகளும் அரசியல்கைதிகளை விடுவிக்க போவதாகக் கூறுகின்றன. ஆனால் யாராலும் இதுவரை அது குறித்து ஓர் அரசியல் தீர்மானத்தை எடுக்குமாறு எந்தவோர் அரசாங்கத்தையும் நிர்ப்பந்திக்க முடியவில்லை. நல்லாட்சி காலத்தில் ரணில் விக்ரமசிங்கவோடு நெருக்கமாக இருந்த கூட்டமைப்பாலும் அதைச் செய்ய முடியவில்லை. அந்தக்கால கட்டத்தில் ஒரு தொகுதி அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள், ஆனால் அதை கூட்டமைப்பு தனது சாதனையாக கூறிக்கொள்ள முடியாது என்று கைதிகள் கூறுகிறார்கள். ஏனெனில் வழமையான சட்ட நடைமுறைகளினூடாக அவர்கள் இயல்பாக விடுவிக்கப்பட்டார்களே தவிர அரசாங்கம் ஒரு கொள்கைத் தீர்மானத்தை எடுத்து யாரையும் விடுவிக்கவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்தவாரம் விடுவிக்கப்பட்ட16 அரசியல் கைதிகளில் 14 பேருக்கு இது பொருந்தும். இவர்கள் அனைவரும் தண்டனை வழங்கப்பட்டவர்கள். தண்டனைக் காலம் முடிவதற்கு சிலருக்கு ஆகக்கூடியது 18 மாதங்களே உண்டு. குறிப்பாக இவர்களில் ஒருவருடைய தகப்பனார் மிக அண்மையில் சுன்னாகத்தில் இறந்துபோனார். அந்தக் கைதியை சற்று முன்னதாக விடுதலை செய்திருந்தால் அந்தப்பிள்ளை தன் தகப்பனை உயிரோடு பார்த்திருக்கும்.

அரசியல்கைதிகளை விடுவிப்பது என்று அரசாங்கம் முடிவெடுத்தபின் அது குறித்து நாமல் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் இந்த வாரம் உரையாற்றினார். அவருடைய உரை ஒரு தமிழ்த் தேசியவாதியின் உரை போலிருந்தது. சில கைதிகள் சிறையில் இருக்கும் காலம் தன்னுடைய வயதுக்குக்கிட்ட வரும் என்று நாமல் கூறுகிறார். அவர் ஓர் அரசியல்வாதி. எனவே அவர் பேசுவதை, செய்வதை, எல்லாவற்றையும் அரசியலாகவே பார்க்கவேண்டும்.

ஆனால் அரசியல் கைதிகள் கூறுகிறார்கள் , கடந்த ஆட்சியின்போது நாமல் , தம்மோடு சிறையில் வைக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் அவருக்கு அரசியல்கைதிகள் தொடர்பில் ஒருவித நெருக்கம் கலந்த புரிந்துணர்வு ஏற்பட்டிருக்கலாம் என்று. ஏனெனில் நாமல் மகசின் சிறையில் வைக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகளோடு நெருக்கமாகப் பழகியிருக்கிறார். அது அரசியல்கைதிகளின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள அவருக்கு உதவியிருக்கலாம். சிறையில் சிலசமயம் அரசியல் கைதிகளே அவருக்கு தேநீர் தயாரித்து வழங்கியதுண்டாம். அதிலும் குறிப்பாக தேநீருக்கு வேண்டிய பொருள்களை அவர் அரசியல் கைதிகளிடம்தான் கொடுத்து வைத்திருந்தாராம். அவர்களிடம் தான் அவை பத்திரமாக இருக்கும் என்றும் அவர் நம்பினாராம். இவ்வாறு அவரோடு சிறையில் இருந்த ஒரு கைதி விடுவிக்கப்பட்ட பின் கிளிநொச்சியில் அந்தக் கைதிக்கு நாமல் ஒரு வீட்டையும் கட்டிக்கொடுத்தார்.

அவரைப் போலவே பொதுபல சேனாவின் தலைவர் ஞானசாரதேரரும் சிறையில் இருந்த பொது அரசியல் கைதிகளின் உணர்வுகளை அதிகம் புரிந்து கொண்டவராக காணப்பட்டனர் என கைதிகள் கூறுகிறார்கள். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் அவரும் கைதிகளின் விடுதலை தொடர்பாக பேசியிருந்தமையை இங்கு நினைவுபடுத்தலாம்.

எனவே அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான நாமலின் முயற்சியானது கைதிகளோடு அவருக்கு ஏற்பட்ட தனிப்பட்ட நெருக்கத்தின் விளைவாகவும் இருக்கலாம். ஆனால் அரசியலில் எந்த ஒரு தனிப்பட்ட நெருக்கமும் அதன் இறுதி விளைவைப் பொறுத்துக்கூறின் அரசியலாகவே பார்க்கப்படும். நாமல் ராஜபக்சவுக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே ஓர் ஆதரவுத்தளம் உண்டு. சில கிழமைகளுக்கு முன் அவர் சீனாவின் தடுப்பூசிகளை எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். இப்பொழுது அரசியல் கைதிகளுக்காக நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார். தவிர 16 கைதிகளும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றின் மூலம்வடக்கில் நாமலின் ஆதரவுத்தளத்தை பலப்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் சிந்திக்கும்.

எனினும் எல்லாவிதமான வாதப்பிரதிவாதங்களுக்கும் அப்பால் பல ஆண்டுகளுக்குப் பின் 16 கைதிகள் தமது குடும்பத்தி னருடன் இணைந்திருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியானது. அதே சமயம் மிச்சமுள்ள கைதிகள் தொடர்பில் ஓர் அரசியற் தீர்மானம் எடுக்கப்படவண்டும்.

அரசியல் கைதிகளின் விவகாரம் என்பது ஒரு சட்ட விவகாரம் மட்டும் அல்ல. மனிதாபிமான விவகாரம் மட்டும் அல்ல. அவற்றைவிட ஆழமான பொருளில் அது ஓர் அரசியல் விவகாரம். எனவே கைதிகளின் விடுதலை தொடர்பான தீர்மானமும் ஓர் அரசியல் தீர்மானமாகவே இருக்க வேண்டும். அவ்வாறு அரசியல் தீர்மானம் எடுக்கப்பட்டால் தான் இப்பொழுதும் சிறையில் இருக்கும் அனைத்து கைதிகளும் விடுவிக்கப்படும் ஒரு நிலைமை வரும்.

தவிர கஜேந்திரகுமார் அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றியதைப் போல பயங்கரவாதத்தடைச் சட்டம் இருக்கும் வரையிலும் இனிமேலும் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளை நிரப்பிக் கொண்டேயிருப்பார்கள். ஏனெனில் அரசாங்கம் தமிழ்மக்களின் அரசியலை பயங்கரவாதமாகச் சித்தரித்து ஆயுதப் போராட்டத்தை மீளுருவாக்கம் செய்கிறார்கள் என்று கூறி யாரையும் கைது செய்யக் கூடிய ஒரு நிலைமை தொடர்ந்தும் இருக்கிறது.


எனவே இங்கு பிரச்சினை தமிழ் மக்களின் போராட்டத்தை பயங்கரவாதமாக பார்க்கும் அந்தச் சட்டம்தான். அந்தச் சட்டத்தை அகற்றவேண்டும். இதுதொடர்பில் ஐரோப்பிய யூனியன் முன்வைத்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்ட காரணத்தால்தான் 2017ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்துக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டது. ஆனால் அரசாங்கம் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை சிறிய தேசிய இனங்களுக்கு எதிராக தொடர்ச்சியாகப் பாவித்துவரும் ஒரு பின்னணியில் அதற்கு எதிராக ஐரோப்பிய நாடாளுமன்றம் அண்மையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. தவிர கடந்த திங்கட்கிழமை தொடங்கிய ஐ.நா.வின்47ஆவது கூட்டத்தொடரிலும் மையக்குழு நாடுகளின் அறிக்கையிலும் இது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

பெருந்தொற்றுநோயால் நாட்டின் பொருளாதாரம் சரிந்து கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் ஜி.எஸ்.பி வரிச்சலுகையும் நிறுத்தப்பட்டால் நிலைமை மேலும் பாரதூரமாக மாறலாம். அதனால் அரசாங்கம் மேலும் சீனாவை நோக்கிப் போவதை தவிர வேறு வழி இருக்காது. அவ்வாறு போகக்கூடாது என்பதைத்தான் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்துக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவும் சுட்டிக்காட்டியிருக்கிறார். சீனாவிடம் கடன் வாங்குவதற்குப் பதிலாக அனைத்துலக நாணய நிதியத்திடம் போகலாம் என்று அவர் ஆலோசனை கூறுகிறார். எனவே 16 அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பை வழங்கியதன் மூலம் அரசாங்கம் தன்னை சுதாகரித்துக் கொள்ள முயற்சிக்கிறது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீளாய்வு செய்யப்போகிறோம் என நிதியமைச்சர் அறிவித்திருப்பதும் ஒரு சுதாகரிப்பே. இவை யாவும் ஐரோப்பிய யூனியனை சமாதானப்படுத்தும் முயற்சிகளே.

அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளரான பாதர் சக்திவேல் சொன்னார்....."ஒரு புனித பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் எமது அமைப்பைப் பொறுத்தவரை இது ஒரு அமாவாசை நாள்"என்று. "ஏனென்றால் அரசாங்கம் இதுவிடயத்தில் முதலாவதாக ஓர் அரசியல் தீர்மானத்தை எடுப்பதிலிருந்து தப்பியிருக்கிறது. இரண்டாவதாக அரசியல் கைதிகளையும் துமிந்த சில்வாவையும் சமப்படுத்தியிருக்கிறது. துமிந்த சில்வாவுக்கு மன்னிப்பை வழங்கும் பொசன் நாடகத்தின் ஒரு பகுதியாகவே அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் மன்னிப்பு கிடைக்காவிட்டாலும் அந்தக் கைதிகளில் பலர் சில மாதங்களில் விடுதலை பெற்றுவிடுவார்கள். எனவே இதில் மன்னிப்பின் பொருளையும் அரசாங்கம் கொச்சைப்படுத்தியிருக்கிறது. மொத்தத்தில் ஒரு பொசன் நாளில் புத்தபகவானின் பெயரால் இவை எல்லாவற்றையும் செய்து புத்தபகவானையும் அவர்கள் கொச்சைப்படுத்தியிருக்கிறார்கள்" என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுதை தேய்ந்து கட்டெறும்பானது..!



ந.பரமேஸ்வரன்

**1977** ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அறுதிப்பெரும்பான்மை பெற்று இலங்கை வரலாற்றில் முதல்தடவையாக எதிர்க்கட்சி அந்தஸ்தையும் அடைந்தது. இந்தத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்.மாவட்டத்தில் 11 ஆசனங்கள் உள்ளடங்கலாக வடக்கு,கிழக்கில் மொத்தமாக 18 ஆசனங்களைப் பெற்றது- தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

1994 ஆம் ஆண்டு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் அல்லது ஆசனங்களின் எண்ணிக்கை ஒன்பதாக குறைந்து பின்னர் 2020 தேர்தலில் ஏழாகச் சரிந்து, தற்போது ஆறாக தேய்ந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கையும், நாடாளுமன்றப் பிரதிநித்துவமும் குறைந்துகொண்டு செல்கையில், தெற்கில் வாக்காளர்களின் எண்ணிக்கையும் நாடாளுமன்றப் பிரதிநித்துவமும் அதிகரித்துச் செல்வதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

## வாக்காளர் மற்றும் ஆசனங்களின் எண்ணிக்கை

**1977ஆம் ஆண்டு**

கொழும்பு வாக்காளர் 9 லட்சத்து 72 ஆயிரத்து 196 - ஆசனங்கள் 17
கம்பஹா வாக்காளர் 8 லட்சத்து 35 ஆயிரத்து 265 - ஆசனங்கள் 13
யாழ்ப்பாணம் வாக்காளர் 4 லட்சத்து 88 ஆயிரத்து 845 - ஆசனங்கள் 11

**2019 தேர்தல் இடாப்பின்படி 2020 இல்**

கொழும்பு வாக்காளர் 17 லட்சத்து 09 ஆயிரத்து 209 - ஆசனங்கள் 19
கம்பஹா வாக்காளர் 17 லட்சத்து 85 ஆயிரத்து 964 - ஆசனங்கள் 18
யாழ்ப்பாணம் வாக்காளர் 4 லட்சத்து 69 ஆயிரத்து 823 - ஆசனங்கள் 06

யாழ். மாவட்டத்தின் சனத்தொகை வீழ்ச்சிக்கும் வாக்களர் எண்ணிக்கையின் வீழ்ச்சிக்கும் புலம்பெயர்வே அடிப்படைக் காரணம். நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக உயிரைப் பாதுகாக்கும் நோக்குடனோ அல்லது பொருளாதார ரீதியாகத் தம்மை வளப்படுத்தும் நோக்குடனோ வெளிநாடுகளுக்கு பெருமளவானோர் சென்றதில் தவறில்லை. ஆனால் இவ்வாறு புலம்பெயர்ந்து சென்றவர்கள் தமது தாயகத்திலும் தமது அடையாளங்களை உறுதிப்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

**யாழ். மாவட்டத்தின் சனத்தொகை வீழ்ச்சிக்கும் வாக்காளர் எண்ணிக்கையின் வீழ்ச்சிக்கும் புலம் பெயர்வே அடிப்படைக் காரணம். நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக உயிரைப் பாதுகாக்கும் நோக்குடனோ அல்லது பொருளாதார ரீதியாகத் தம்மை வளப்படுத்தும் நோக்குடனோ வெளிநாடுகளுக்கு பெருமளவானோர் சென்றதில் தவறில்லை. ஆனால் இவ்வாறு புலம் பெயர்ந்து சென்றவர்கள் தமது தாயகத்திலும் தமது அடையாளங்களை உறுதிப்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.**

தற்போது வாக்காளர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஒரேவழி புலம்பெயர்ந்து சென்றவர்கள் அனைவரும் இரட்டைப் பிரஜாவுரிமைக்கு பதிவுசெய்வதுதான். யூதர்களுடன் தம்மை ஒப்பிடும் யாழ்ப்பாணிகள் , யூதர்கள் எந்த நாட்டுக்கு புலம்பெயர்ந்து சென்றாலும் தமது சொந்தநாட்டிலும் பிரஜாவுரிமையையும் வங்கிக்கணக்கையும் வைத்திருக்கிறார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும். லண்டனிலும் ரொரண்டோவிலும் மட்டும் ஒரு மில்லியன் தமிழர்கள் வசிக்கின்றனர் எனக் கூறப்படுகிறது; ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் வசிப்பவர்களையும் சேர்த்தால் குறைந்தது 1.2மில்லியன் யாழ்ப்பாணத்தவர்கள் புலம்பெயர் நாடுகளில் இருக்கின்றனர்.

சிங்களவர்கள் இந்த விடயத்தில் மிகவும் அக்கறையாக உள்ளனர். ஜனாதிபதி கோத்தபாய ராஜ்பக்சவை தேர்தலில் போட்டியிடாமல் தடுக்கும் நோக்குடன் நல்லாட்சி அரசு செய்த காரியங்கள் உலகறிந்த விடயம். சிங்கள அரசியல்வாதிகள் மட்டுமல்ல சாதாரண சிங்களவர்கள் கூட இரட்டைப் பிரஜாவுரிமை விடயத்தில் மிகவும் அக்கறையாக உள்ளனர். ஆனால் தேர்தல் காலங்களில் மக்களை நாடும் தமிழ் அரசியல்வாதிகள் இரட்டைப் பிரஜாவுரிமை விடயத்தில் அக்கறை செலுத்தினர் எனத் தெரியவில்லை. தாம் வாழும் நாடுகளில் ஒவ்வொரு கிராமத்தின் பெயரிலும் பாடசாலைகளின்பெயர்களிலும் சங்கங்களை வைத்திருப்பவர்களும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தினர் என தெரியவில்லை. நாடு கடந்த தமிழ் ஈழ அரசு , பிரித்தானிய தமிழர் பேரவை, உலகத்தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் பேரவை, அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் என பல்வேறு பெயர்களில் அரசியல் செய்பவர்களும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தினர் எனத் தெரியவில்லை. சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைத் தமிழர் வாழும் நாடுகள் அனைத்திலும் தமிழ் ஈழம் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றதாக தமிழ் ஊடகங்களில் செய்திகள் வந்தன. இந்த வாக்கடுப்பால் யாருக்கு என்ன பிரயோசனம் என்பதை இந்தத் தேர்தலை நடத்தியவர்களைத்தான் கேட்கவேண்டும்.

வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கை அனுபவித்துக்கொண்டு 'ரிமோட் கொண்ட்ரோல்' மூலம் இலங்கையில் அரசியல் செய்பவர்கள் வாக்காளர் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் விடயத்தில் அக்கறை செலுத்துவார்களா ?



தற்போது பிரான்சில் வசித்துவரும் நண்பர் இராதாகிருஷ்ணன் இரட்டை பிரஜாவுரிமையின் அவசியத்தை வலியுறுத்தி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். இவர்களில் சாணக்கியன் மட்டும் "உங்களது மின்னஞ்சல் கிடைத்தது நீங்கள் சொல்கிற விடயம் முக்கிய மான ஒரு விடயம் தான். நாங்கள் அதுபற்றி யோசிக்கிறோம் "எனப் பதில் அனுப்பியுள்ளார். கிட்டத்தட்ட ஒரு அரசாங்க அதிகாரிக்கோ அரசியல்வாதிக்கோ அனுப்பும் கடிதங்களுக்கு அவர்களது உதவியாளர் அனுப்பும் பதில் போன்றதே இது.

வெளிநாட்டு தமிழர்களின் பணத்தில் உலகம் சுற்றும் வாலிபர்களாக அல்லது வயோதிபர்களாக அவ்வப்போது வெளிநாட்டு சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும் சுமந்திரன், விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார், சித்தார்த்தன், ஶ்ரீதரன், செல்வம் உட்பட ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்போதாவது தாம்போய் வரும் நாடுகளில் இரட்டைப் பிரஜாவுரிமை பற்றி வாய்திறந்திருக்கிறார்களா? மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என நீண்டகாலமாக வீணை வாசித்துக் கொண்டிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவாவது எப்போதாவது இரட்டைப் பிரஜாவுரிமை பற்றி பிரஸ்தாபித்துள்ளாரா?

வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாலோ நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாலோ மக்களுக்கு எதுவித நன்மையையும் கிடைக்கப்போவதில்லை. ஒருவர் போனாலென்ன ஒன்பது பேர் போனாலென்ன மக்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை. நன்மையடையப்போவது அரசியல்கட்சிகள் மட்டும்தான். அது எந்தக் கட்சியாகவும் இருக்கலாம். தமிழ்மக்களுக்கு அல்லது தமது மக்களுக்கு பிரயோசனமில்லாத ஒரு விடயத்துக்காக நாங்கள் ஏன் குத்தி முறிய வேண்டும் என தமிழ் அரசியல்வாதிகள் யாரவது கூறினால் அது ஏற்றுக் கொள்ளக்கூடியதே. தமிழ் அரசியல்வாதிகளுக்கு தெரியாத முஸ்லிம் அரசியல்வாதிகள் அவ்வப்போது பிரயோகிக்கும் ஒரு விடயம் இருக்கிறது. அதாவது தமது நலன்களுக்காக சிங்கள அரசியல்வாதிகளின் கண்ணுக்குள் விரலைவிட்டு ஆட்டுவது.

**“வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாலோ நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாலோ மக்களுக்கு எதுவித நன்மையையும் கிடைக்கப்போவதில்லை. ஒருவர் போனாலென்ன ஒன்பது பேர் போனாலென்ன மக்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை. நன்மையடையப் போவது அரசியல்கட்சிகள் மட்டும்தான்.”**




சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது அஷ்ரப் சந்திரிகாவின் கண்ணுக்குள் விரலைவிட்டு ஆட்டிக்கொண்டிருந்தார். நல்லாட்சி அரசாங்கத்தில் கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகத்தை முஸ்லிம் பிரதே செயலகத்துக்கு நிகராக (சமஅந்தஸ்துள்ளதாக) தரமுயர்த்தினால் தாங்கள் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்வோம் என முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நல்லாட்சி அரசாங்கத்தை மிரட்டினர்; ஆட்சி கவிழ்ந்துவிடுமோ என்று பயந்த நல்லாட்சி அரசு (நீங்கள் தமிழர்களைத் தலைநிமிரவிடாது அடக்கி ஆளுங்கள் என) தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தும் விடயத்திலிருந்து பின்வாங்கியது. மக்கள் நலனுக்காக இல்லாவிட்டாலும் தமது சொந்தநலன்களுக்காகவாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரட்டை பிரஜாவுரிமையின் அவசியத்தை இனியேனும் வலியுறுத்துவார்களா?

*கடந்த வாரம் வெளிவந்த சமஷ்டியும் மண்ணாங்கட்டியும் என்ற கட்டுரையில் வட்டுக்கோட்டை தீர்மானம் தந்தை செல்வா காலமான பின்னர் நிறைவேற்றப்பட்டதாக தவறுதலாக பிரசுரமாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறேன்: சுட்டிக்காட்டிய மூத்த ஊடகவியலாளருக்கு நன்றி.*

*- ந.பரமேஸ்வரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 13 ஆவது திருத்தச் சட்டத்தை கைவிட்ட இந்தியா?

அ.நிக்ஸன்

சீனாவின் பொருளாதார விரிவாக்கத்துக்குள் இலங்கை சிக்குண்டிருப்பதாக இந்தியா கவலை கொண்டிருக்கிறது. ஆனால் இந்தியாவுக்கும் சீனாவுக்குமான வர்த்தக நடவடிக்கைகள் இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 48.16 பில்லியன் டொலரை எட்டியிருப்பதாகச் சீனக் கம்பியூனிஸின் குளோபல் டைம்ஸ் (global times) என்ற ஆங்கிலச் செய்தித் தளம் கூறுகின்றது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற இந்திய-சீன எல்லை மோதலால், இருதரப்பு வர்த்தகம் 5.6 சதவீதம் குறைந்தது எனவும் இத்தகைய சிக்கலான சூழலுக்கு மத்தியிலும் கூட, சீனா இன்னும் அமெரிக்காவை முந்திக்கொண்டு 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக மாறியதெனவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. இறக்குமதி 90.2 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இந்தியாவும் சீனாவும் உலகின் வேறு நாடுகளுக்குச் சிறந்த முதலீட்டு இடங்களாக உருவெடுத்து வருகின்றன என பீஜிங்கில் உள்ள இந்தியத் தூதரகம் கடந்த வாரம் தனது இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

2019 ஜனவரி முதல் செப்ரெம்பர் வரை இந்தியாவில் சீன முதலீடுகள் 0.19 பில்லியன் அமெரிக்க டொலராகவும், 2019 செப்ரெம்பர் மாத இறுதி வரை இந்தியாவில் ஒட்டுமொத்த சீன முதலீடு 5.08 பில்லியன் அமெரிக்க டொலராகவும் இருந்தது. செப்ரெம்பர் 2019 வரை சீனாவில் ஒட்டுமொத்த இந்திய முதலீடு 0.92 பில்லியன் அமெரிக்க டொலர் எனவும் சீன வர்த்தக அமைச்சை மேற்கோள்காட்டி இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆசியான் நாடுகளை உள்ளடக்கிய சீனாவின் பிராந்திய பொருளாதாரக் கட்டமைப்பு ஒப்பந்தத்தில்(Regional Comprehensive Economic Partnership RCEP) இந்தியா கைச்சாத்திடவில்லை. ஏனெனில் சீனாவோடு தனியான வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடுவதற்கான விருப்பத்தை இந்தியா வெளியிட்டுள்ளது. அவ்வாறு இல்லையென்றாலும் இரண்டு ஆண்டுகளில் இந்தியா 'ஆசிஈபி 'எனப்படும் ஒப்பந்தத்தில் இணையவும் முடியும். ஆகவே சீனாவோடு அரசியல் ரீதியான பகைமை இருந்தாலும் குறிப்பாக இந்தோ பசுபிக் பாதுகாப்பு விவகாரங்கள் மற்றும் இந்திய - சீன எல்லை மோதல் போன்ற முரண்நிலை இருந்தாலும், வர்த்தக ரீதியில் சீனாவோடு உடன்பட வேண்டியதொரு தேவை இந்தியாவுக்கு உண்டு.

இந்த நிலையில் இலங்கையின் பொருளாதாரத் திட்டங்களில் இந்தியா பங்கேற்றிருப்பது தொடர்பாக இந்தியக் கடற்படையின் துணைத் தலைவர் வைஸ் அட்மிரல் அசோக்குமார் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். இது தொடர்பில் தாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் என அவர் கூறியிருக்கிறார். அவர் கூறியதிலும் நியாயம் உண்டு. ஏனெனில் வர்த்தக ரீதியான செயற்பாடுகள் இருந்தாலும், இந்தியாவின் எந்தவொரு பிரதேசத்திலும் சீனா தனித்துக்கால் ஊன்றவில்லை. ஆனால் வர்த்தகச் செயற்பாடு என்ற போர்வையில் இலங்கையில் பல இடங்களில் சீனா ஆதிக்கம் செலுத்துவதுடன் இலங்கைக்கு அதிகளவு நிதியையும் வழங்கியுள்ளது. கொழும்புத் துறைமுகக் கடலை மூடி வர்த்தக நகரமே அமைக்கப்பட்டு வருகிறது. இது தான் இந்தியாவுக்குப் பிரச்சினை.

இதனை வேறு கோணத்தில் அணுகவே இந்தோ- பசுபிக் பாதுகாப்பு அடிப்படையில், கடல்சார் கூட்டுப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஒத்துழைப்பு (Maritime Domain AwarenessMDA) நடவடிக்கைகளை சில நாட்களுக்குள் இலங்கை ஆரம்பிக்க வேண்டுமென்று கடந்த ஜனவரி மாதம் கொழும்புக்கு வந்து எச்ரிக்கைத் தொனியில் கேட்டிருந்தார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர். ஆனால் இன்றுவரை எதிர்பார்த்த தாக்கத்தை அது செலுத்தியதாகத் தெரியவில்லை.

இதனால் சென்ற திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தனவுடன் 'சூம்' காணொலியில் உரையாடிய இந்திய அமைச்சர் ஜெய்சங்கர், பிம்ஸ்டெக் எனப்படும் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான பிராந்தியக் கூட்டுச் செயற்பாடுகள் The Bay of Bengal Initiative for MultiSectoral Technical and Economic Cooperation BIMSTEC) தொடர்பாகவும் ஐ.ஒ.ஆர்.ஏ எனப்படும் இந்து சமுத்திரத்தைத் தொடுகின்ற கடலின் கரையோரத்தில் உள்ள பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்புக்கான கூட்டு முயற்சி (The Indian Ocean Rim Association IORA) பற்றியும் இடித்துரைத்திருக்கிறார். ஐ.ஒ.ஆர்.ஏ. எனப்படும் இந்து சமுத்திரத்தைச் தொடுகின்ற கடலின் கரையோர நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டு முயற்சி என்பது ஒரு சர்வதேச அமைப்பாகும். அதாவது இந்துமா சமுத்திரத்தின் கடலோர எல்லைகளைத் தொடுகின்ற நாடுகளின் கூட்டுச் செயற்பாடுகளாகும்.






கடந்த ஆண்டு இந்த அமைப்பில் பிரான்ஸ் இணைந்துள்ளது. ஏனெனில் பிரான்ஸ் நாட்டுக்குச் சொந்தமான சில தீவுகள் இந்தப் பிராந்தியத்தில் உண்டு. அது மாத்திரமல்ல இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விடயத்தில் பிரான்ஸ் தனித்தும் சில நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

ஆனால் இந்து சமுத்திரத்தைத் தொடுகின்ற கடலின் கரையோரத்தில் இருக்கும் பாகிஸ்தான், ஐ.ஒ. ஆர்.ஏ. அமைப்பில் அங்கம் வகிக்கவில்லை. இந்த அமைப்பில் பாகிஸ்தான் அங்கம் வகிப்பதை இந்தியா விரும்பவில்லை என்பதையே நகர்வுகள் காண்பிக்கின்றன. இந்த அமைப்பில் இணைவதற்கு பாகிஸ்தான் விண்ணப்பித்துமுள்ளது. அவுஸ்திரேலியா, மொரீசியஸ், மாலைதீவு, ஈரான், இலங்கை மற்றும் இந்தியா உள்ளிட்ட 23 நாடுகள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. 1997 ஆம் ஆண்டு மார்ச் ஆறாம் திகதி இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

பிம்ஸ்டெக் எனப்படும் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான செயற்பாடு என்பது தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் ஏழு நாடுகளின் சர்வதேச அமைப்பாகும். இதில் உள்ள உறுப்பு நாடுகளின் 2021 ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியை 3.8 ரில்லியன் டொலராக அதிகரிப்பதே நோக்கமாகும்.

பங்களாதேஷ்,பூட்டான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து நாடுகள் இதன் உறுப்பு நாடுகளாகும். 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பிலும் பாகிஸ்தான் இல்லை. 1985 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சார்க் அமைப்பில் பாகிஸ்தான் அங்கம் வகிக்கின்றது.

ஆனால் தற்போது உருவாக்கியுள்ள இந்தோ - பசுபிக் விவகாரத்தால் சார்க் அமைப்பைச் செயற்படுத்த இந்தியா பெருமளவில் விரும்பவில்லை. அதற்குப் பதிலாக பாகிஸ்தான் அங்கம் வகிக்காத பிம்ஸ்டெக் அமைப்பை ஊக்குவிப்பதிலேயே இந்தியா ஆர்வம் காட்டுகின்றது.

ஏனெனில் பாகிஸ்தானும் சீனாவோடு அதிகளவு வர்த்தக விரிவாக்கங்களைச் செய்வதாலும், இந்திய- பாகிஸ்தான் எல்லையில் இடம்பெறும் மோதல்களின்போத , சீன இராணுவ உதவியை பாகிஸ்தான் பெறக்கூடிய சூழல் ஏற்படலாமெனக் கருதியுமே, பாகிஸ்தான் தவிர்ந்த மேற்படி இரு அமைப்புகளையும் இயக்குவதன் மூலம் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த முடியுமென இந்தியா நம்புகின்றது.

இந்த இரு அமைப்புகளையும் ஊக்குவிப்பதோடு இவற்றில் இலங்கையை முக்கிய செயற்பாட்டாளராக மாற்றும் முயற்சியில் இந்தியா ஈடுபடுகின்றது என்பதையே ஜெய்சங்கரின் 'சூம்' காணொலி உரையாடல் சொல்லிநிற்கின்றது. சீன அரசால் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'கொழும்பு போர்ட் சிற்றி' எனப்படும் கொழும்பு சர்வதேச வர்த்தக நிதி நகரத்தின் செயற்பாடுகளுக்கு முன்னதாக மேற்படி இரண்டு அமைப்புகளின் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் இந்திய அமைச்சர் ஜெய்சங்கர் , இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவுடன் உரையாடியிருக்கலாம்.

ஆகவே 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் ஏற்பட்டிருக்கிற இந்த பிராந்திய நெருக்கடி தொடர்பாகக் கவனம் செலுத்தி இலங்கையோடு தோல்வி கண்டு வரும் இந்தியா, ஈழத் தமிழர்கள் விவகாரத்தைக் கையிலெடுக்கத் தயங்குகின்றது என்பதையும் இந்த உரையாடல் வெளிப்படுத்துகிறது.

இலங்கையோடு முடிந்தவரை கீழிறங்கிச்செயற்பட முற்படும் அதே வேளை, ஈழத்தமிழர் விவகாரத்தைக் கருவியாகப் பாவித்தும் இலங்கையை இந்தியா அச்சுறுத்திய ஒரு காலமும் உண்டு.

ஆனால் இன்று 13 ஆவது திருத்தச் சட்டத்தையே முழுமையாக அகற்றிவிடுவதற்காக இலங்கை முயற்சி எடுக்கும் நிலையில், அதனைப் பொருட்படுத்தாது தங்கள் புவிசார் அரசியல் நோக்கில் இலங்கையோடு இந்தியா தமது நலன்சார்ந்து மாத்திரமே உரையாடுகின்றது.

(13 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டீல்' அரசியல்

○ திருமுருகன்





தமிழர் அரசியலில் என்னதான் நடக்கின்றது என்பதைத் தெரியாதளவுக்கு கொரோனா பேரிடர் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. இன்னொருபுறம் நாட்டின் தேசியப் பிரச்சினைகளான எரிபொருள் விலை உயர்வு, விலைவாசி உயர்வு என்பவையும் தமிழ் மக்களை வதைத்தெடுத்துக் கொண்டிருக்கின்றன.

ஏற்கனவே தமிழ் அரசியல் மீதான விரக்தியிலும் வெறுப்பிலும் புரண்டு போயுள்ள தமிழ் மக்கள், இப்போதைய வாழ்வாதாரப் பிரச்சினையை எதிர்கொள்வதே பெரும்பாடாக இருப்பதால், தம்மைச் சுற்றி என்னதான் நடக்கின்றது என்பதை அறிவதற்கு ஆர்வம் இல்லாமல் இருக்கின்றனர். இதுவே அரசியல் தரப்புக்களுக்கு பெரும் வாய்ப்பாக இருக்கின்றது. தமிழ் மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றுக்குச் சென்றவர்கள் அந்த மக்களை அடகு வைக்கும் நிலைக்குச் செல்கின்றனர். அவை எதையும் கண்டு கொள்ளாமல் மக்கள் இருக்கின்றனர்.

## இரகசியப் பேச்சு

கடந்த வாரம் இணையத்தளம் ஒன்றில் வெளியான அரசியல் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயம் ஆச்சரியமானது. ஆனாலும் உண்மையானது.

பசில் ராஜபக்ச கடந்த மாதம் திடுதிடுப்பென அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார். அவர் மருத்துவத்துக்காகச் செல்கிறார் என ஒரு தரப்பும் இல்லை தனிப்பட்ட தேவைக்காக செல்கிறார் என இன்னொரு தரப்பும் ஆளும் கட்சிக்குள்ளேயே அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர். ஆனால் அவர் சென்ற நோக்கம் என்ன என்பதை அந்த அரசியல் கட்டுரை வெளிப்படுத்தியிருந்தது.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இணைந்து தமிழர் தரப்பை, ராஜபக்சக்களுடன் மீளவும் பேச வைக்கும் முயற்சிக்கு பிள்ளையார் சுழிபோடவே பசில் அமெரிக்காவுக்குப் பறந்திருக்கின்றார். அவர் அமெரிக்காவிலிருந்த சந்தர்ப்பத்தில், உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பு இரகசிய கலந்துரையாடல் ஒன்றை 'சூம்' செயலி ஊடாக நடத்தியுள்ளது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டார் என்று கூறப்படுகின்றது. ஆனால் அவர் அதனை மறுத்துள்ளார் எனவும் அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பசில் வந்தால் பேச்சு

அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் மறைமுக ஒழுங்கில் பசில் ராஜபக்சவுடன் தமிழர் தரப்பு பேச்சு நடத்தி ஓர் உடன்பாட்டுக்கு வருவது தொடர்பாகவே அந்த இரகசியக் கலந்துரையாடலில் பேசப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பேச்சு முடிந்த சில நாள்களின் பின்னரே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனாதிபதி கோத்தாபயவுக்கும் இடையிலான பேச்சு இடம்பெறும் என்ற செய்தி வெளியானது. ஆனால் அந்தச் சந்திப்பு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயைச் சந்தித்து தமிழ்க் கூட்டமைப்பினர் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சுக்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பசில் ராஜபக்ச வந்த பின்னர் ஜனாதிபதியுடனான கூட்டமைப்பின் பேச்சு நடைபெறும் என்று கூறியிருந்தார். அரசியல் விடயங்களை கையாளும் பிரமதர் மஹிந்தவைத் தவிர்த்து பசிலை வைத்துக்கொண்டு கூட்டமைப்புடன் ஜனாதிபதி பேச விரும்புவது ஏன்? என்ற கேள்வி இங்கே எழுகின்றது. அதற்கு மேலே நடந்த இரகசியக் கலந்துரையாடல் காரணமாயிருக்கலாம். அமெரிக்கா, பிரிட்டன் இணைந்து தமிழர் தரப்புக்களை ராஜபக்சக்களுடன் பேச்சு மேசைக்கு அனுப்புவது தொடர்பில் பசில் ராஜபக்சவுடனே கலந்துரையாடப்பட்டமையால் அவர், ஜனாதிபதியுடன் கூட்டமைப்பினர் நடத்தும் சந்திப்பில் அவசியம் தேவைப்பட்டவராகியுள்ளார்.

## அரசியல் கைதிகள் விடுவிப்பு

கடந்த வாரம் நாடாளுமன்றம் இரு நாள்கள் கூடியது. செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் அமர்வுகள் நடைபெற்றன. இந்த அமர்வில் திடுதிடுப்பென அமைச்சர் நாமல் ராஜபக்ச, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற அறிவிப்பை வெளியிடுகின்றார். உடனேயே கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வரவேற்பு வெளியிடுகின்றார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாமல் ராஜபக்ச எந்த நிலையியல் கட்டளையின் கீழ் இந்த விசேட அறிவிப்பை விடுத்தார் என்று சபாநாயகரிடம் கேள்வி எழுப்புகின்றார். அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ச நாடாளுமன்றில் செவ்வாய்க்கிழமை பேசவுள்ளார் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு முன்னரே தெரியும். நீதி அமைச்சர் அலி சப்ரி இந்த விடயத்தை தன்னிடம் முன்னரே தெரிவித்திருந்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம் கூறியிருக்கின்றார். இரண்டாம் நாள் புதன்கிழமை நாடாளுமன்ற அமர்வின்போது, நாளை (வியாழக்கிழமை) பொசனுக்காக அரசியல் கைதிகளை விடுவித்துக்காட்டுங்கள் என்று சுமந்திரன் சவால்விடுத்தார். இதில் பெரும் விவாதமும் ஏற்பட்டது.



## ஒரு நாளில் சாத்தியமில்லை


பொசன் நாளில் 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளார்கள் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு முன்னரே தெரியும். அதைவிட ஒரே நாளில் அதுவும் புதன்கிழமை சவால்விட்டு மறுநாள் வியாழக்கிழமை விடுவிக்க முடியாது என்பதும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கு நன்கு தெரியும்.

அப்படியான நிலையிலும் சுமந்திரன் இவ்வாறான சவால் ஒன்றை நாடாளுமன்றத்தில் விடுக்கக் காரணம் என்ன? தமிழ் மக்களுக்கு 'சீன்' போடவா?

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆரம்பத்திலிருந்து ஓர் விடயம் எல்லாப் புள்ளிகளுடனும் தொட்டுச் செல்கின்றது. அமெரிக்க, பிரிட்டன் நாடுகளால் பசில் ராஜபக்சவுடன் பேச்சு நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் சுமந்திரன் கலந்துகொண்டமை, இந்தியத் தூதுவருடனான சந்திப்பின்போது, பசில் நாடு திரும்பிய பின்னர் கூட்டமைப்பு - ஜனாதிபதி சந்திப்பு நடைபெறும் என்று தெரிவித்தமை, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான விடயங்கள் முன்னரே சுமந்திரனுக்கு ராஜபக்ச அரசால் தெரியப்படுத்தப்பட்டிருந்தமை, இவை எல்லாம் ஒன்றுடன் ஒன்று கோர்வையாகத் தொடர்ந்து செல்கின்றன.

இந்த திரைமறைவு நடவடிக்கையில் இறுதிப்போரின் போதான 'பொறுப்புக் கூறல்' விடயம் கைவிடப்பட்டுள்ளது. ராஜபக்சக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து அதனை விட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

இந்த கண்ணாமூச்சி ஆட்டத்தில் தமிழர்கள் அடகுவைக்கப்பட்டு மீளவும் ஏமாற்றப்படப் போகின்றார்கள். ஆனால் அவர்களை அடகு வைக்கும் அரசியல்வாதிகள் ஆதாயம் பெற்றுவிடுவார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா – இலங்கை: விட்டுவிலகாத பந்தம்?





○ ஐ.வி.மகாசேனன்

பல நாடுகள் சீன முதலீடுகளை மீள்மதிப்பீடு செய்யத்தொடங்கியுள்ள வேளையில், இலங்கையோ, சீனாவுடனான பொருளாதார ஈடுபாட்டை இரட்டிப்பாக்கி வருகிறது. கொவிட்-19 பெருந்தொற்றுநோய் காலப்பகுதியிலும் கூட, பீஜிங்கின் இலங்கைக்கான கருத்துக்கள் ஒரு விழிப்புணர்வோடு தொடர்கின்றன. ராஜபக்சக்களின் நிர்வாகத்தின் முழுக் கட்டுப்பாட்டில், சீன செல்வாக்கை இலங்கையில் செலுத்துவதற்கான ஒரு தனித்துவமான தருணமாகக் கருதப்படுகிறது. எனினும் இலங்கையர்கள் மத்தியில் சீனாவுடனான இலங்கை அரசாங்கத்தின் உறவு தொடர்பில் அதிருப்தியான எண்ணங்களும் சந்தேகப் பார்வைகளும் ஒருதளத்தில் காணப்படவே செய்கின்றன. இது ராஜபக்சகளுக்கான ஆதரவை மக்களிடம் குறைப்பதாகவும் விமர்சனம் உண்டு. இந்நிலையை சீர்செய்ய ராஜபக்சக்களின் நிர்வாகம், சீனா தொடர்பான நேரான எண்ணங்களை இலங்கையின் பெரும்பான்மையின சிங்கள பௌத்த தேசியவாத மக்களிடையே அதிக ஈடுபாட்டுடன் பரப்புரை செய்யத் தொடங்கியுள்ளது.

அந்த வகையிலானதோர் செயற்பாடாகவே சீனாவின் கொம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு நிறைவு விழாவில் மெய்நிகர் வழியூடாக இலங்கையின் பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆற்றிய உரை காணப்படுகிறது. அதனடிப்படையில் அந்த உரையில் இலங்கை மக்களை சீனா சார்பில் ஈர்க்கும் வகையிலான அரசியல் உரையாடலை தேடுவதாகவே இந்தக் கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.

சீனகொம்யூனிஸ்ட் கட்சியின் (சி.சி.பி) 100 ஆவது ஆண்டு விழாவை ஜுன்15 அன்று இணையவழி தொழில்நுட்பம் மூலம் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் பங்குபற்றினார்கள். மேலும் அமைச்சர்கள் தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ச, வாசுதேவா நாணயக்கார ,உதயகம்மன்பில, முன்னாள் அமைச்சர் டி.வி. குணசேகர மற்றும் திஸ்ஸ விதாரண போன்றோருடன் இலங்கையின் 14 அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் பிரதமர் மகிந்த ராஜபக்ச, இலங்கை - சீனா உறவின் ஆழமான வரலாற்று உறவை சிங்கள பௌத்த தேசியவாதத்தை இணைத்தும்,சீனா மீதான இலங்கையர்கள் கொண்டுள்ள எதிரான எண்ணங்களைக் களையும் வகையிலான வரலாறுகளை குறிப்பிட்டும் ஒரு வகை பிரசார உரையை நிகழ்த்தியிருந்தார். இதன்போது அவர் வெளியிட்ட ஆறு விடயங்கள் முக்கியமானவை.

முதலாவ்தாக, இலங்கையில் பௌத்தத்தை நிறுவிய வரலாற்று நாயகன் தேவநம்பியதீசன் காலத்து வரலாற்று தொன்மையோடு சீனாவின் வரலாற்றை தொடர்புபடுத்தியிருந்தார் மஹிந்த. சீனாவின் அடையாளமாகிய சீனப்பெருஞ்சுவர் நிறுவப்பட்ட காலப்பகுதியில் சமாந்தரமாக தேவநம்பியதீசன் அநுராதபுரத்தில் மஹமேவனா உயனவினை நிறுவியுள்ளார் என தெரிவித்துள்ளார். இதனூடாக சிங்கள பௌத்த தேசியவாத மக்களின் மனங்களில் சீனா பற்றிய ஒரு கவர்ச்சியை ஏற்படுத்த பிரதமர் முயல்வது புலப்படுகிறது. புதிய அரசாங்கம் சிங்கள பௌத்த தேசியவாதத்தை அதிகம் உரையாடியே ஆட்சியைத் தொடர்கின்றது. ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும், தன்னுடைய பதவிப்பிரமாண நிகழ்வை சிங்கள பௌத்த தேசியவாத நாயகனாக அடையாளப்படுத்தப்படும், துட்டகைமுனுவால் நிறுவப்பட்ட ருவான்வெலி சாய விகாரையில் ஒழுங்கு செய்தாரென்பது குறிப்பி டத்தக்கது.

இரண்டாவதாக, இலங்கையும் சீனாவும் பௌத்தத்தை பேணும் தேசங்களாகத் தொடர்புபடுத்தியுள்ளார். "இரு நாடுகளும் அன்றிலிருந்து ஒரே மாநிலம்,மொழி மற்றும் மதம் ஆகியவற்றைப் பேணுகின்றன"என்கின்றார். இது சிங்கள பௌத்த பெரும்பான்மையின மக்களை கவர்வதற்காக ராஜபக்சக்கள் தேர்தல் காலபிரசாரங்களில் பயன்படுத்தும் "ஒரு தேசம் ஒரு நாடு" என்பதை ஒத்திருப்பதாக சுட்டுகின்றார். எனினும் ஒரு நாடு, இரண்டு அமைப்புகள் என்பது சீன மக்கள் குடியரசின் அரசமைப்பு கொள்கையாகும். இது முறையே 1997 ஆம் மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் ஹொங்கொங் மற்றும் மக்காவு சீனாவின் சிறப்பு நிர்வாக பிராந்தியங்களாக ஆனதிலிருந்தான ஆட்சியை விவரிக்கிறது.

2020ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தேசியப் பாதுகாப்பு சட்டம் மூலமாகவே 'ஒரு நாடு, இரண்டு அமைப்புகள்' கொள்கை பூச்சிய மற்றும் வெற்றிடமாக அறிவிக்கப்பட்டது. ஆக சீன நீண்டகாலம் ஒரு நாடு இரு தேசம் என்ற கொள்கையை அங்கீகரித்து நடைமுறைப்படுத்திய தேசமாகும். இலங்கையிலும் தனித்து சிங்கள பௌத்தம் மாத்திரம் காணப்படுவதில்லை. இலங்கையில் நீண்டகாலமாக சிங்கள பௌத்தத்தை தாண்டிவாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களை பிரதமர் மஹிந்த இந்த உரையில் மறந்துள்ளார். மேலும் சிங்கள பௌத்த தேசியாவதிகள் சீனாவுடனான உறவை ஆதரிப்பதற்காக"கடந்த காலத்தில்,பௌத்தமே சீனா மற்றும் இலங்கையை இணைத்தது என இலங்கையுடனான சீனாவின் தொடர்புக்கு பௌத்தமே காரணமென மஹிந்த ஒப்புக்கொள்கிறார்.

மூன்றாவதாக,சீனா இலங்கையை ஆக்கிரமிப்பு செய்வதாக எதிர்க்கட்சிகள் இலங்கையரிடையே விதைத்துவரும் எண்ணத்தை நிராகரிக்க முயல்கின்றார். "சீனா ஒரு நாடு மட்டுமல்ல,சீனா ஒரு பெரிய நாகரிகம். சீனா பல்வேறு நாடுகளால் படையெடுக்கப்பட்டது, ஆனால் சீனா ஒருபோதும் மற்ற நாடுகளுக்கு படையெடுக்கவில்லை."என்ற கருத்தினூடாக சீனா இலங்கையை ஆக்கிரமிப்பு செய்வதாக அதிகரித்து வரும் சீனா மீதான எதிர்மறையான கருத்துக்களை முற்றாக நிராகரித்துள்ளார் மஹிந்த.

நான்காவதாக , இலங்கையர்கள் மற்றும் சீனர்கள் பொருளாதாரக் கட்டமைப்பிலும் ஒன்றித்தவர்கள் என நிறுவுகின்றார். சீனாவின் பொருளாதாரப் பலமாக விவசாயத்தை முதன்மைப்படுத்துகின்றார். "இது உலகின் மிகப்பெரிய மக்களை ஒரு தன்னிறைவுப் பொருளாதாரத்தில் நம்பவைக்கும் ஒரு நாடு. அதுமட்டுமல்லாமல்,சீனா தனது நம்பிக்கையின் அடிப்படையில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாடாக பார்க்கப்படுகிறது. அதனால்தான் சீனா மிகப் பெரிய நாகரிகம் என்று நான் சொல்கிறேன். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அந்த நாகரிகத்தின் அடையாளத்தை அங்கீகரித்ததால் சீனா இன்று உலகசக்தியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது" என்கிறார் மஹிந்த. இலங்கையும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு என்ற ரீதியில் சீனர்கள் வேறுபட்டவர்கள் அல்ல. அவர்களும் இலங்கையர்களின் பண்பாட்டை ஒத்தவர்கள் தான். ஆதலால் இலங்கையர்களால் சீனாவை ஏற்கமுடியும் நேசிக்க முடியும் என்பதை இதன் மூலம் மஹிந்த நிறுவமுனைந்துள்ளார்.

ஐந்தாவதாக, இலங்கையின் சுதந்திரத்தை பாதுகாக்கும் காவலர்களாக சீனாவை உயர்த்தி பரப்புரை செய்கின்றார்."ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் இறையாண்மைக்கு சீனா செய்த சேவையை நாம் ஒருபோதும் மறக்கமுடியாது. வரலாற்றைப் பொறுத்தவரை சீனா எங்கள் பழைய நண்பர் என்று நான் எப்போதும் கூறுவேன்."என சீனா இலங்கையின் பாதுகாப்பில் தவிர்க்க முடியாத தேசமென புகழாரம் சூட்டுகின்றார். "கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடது கட்சிகளுடன் இணைந்து பணியாற்றிய அரசாங்கத்தின் கீழ் பிரிவினைவாதம் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரை நாங்கள் முடிவுக்கு கொண்டுவந்தோம். போரின் போதும் அதற்குப் பின்னரும் நமது சுதந்திரத்துக்காக சீனஅரசு செய்த தியாகங்களை நாங்கள் எப்போதும் பாராட்டுகிறோம். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் ஆசியாவில் ஒரு நாட்டின் இறையாண்மைக்கு இது ஒருபெரிய பங்களிப்பாக இருந்தது." என்கின்றார். இதுவரை காலமும் போர் வெற்றி வீரர்களாக தியாகிகளாக இலங்கை இராணுவத்தை புகழ்ந்துரைத்த பிரதமர் தற்போது சீனாவையும் அந்த கௌரவத்துக்குள் ஒன்றிணைக்க முனைவது, பல சந்தேகங்களை எழுப்பத் தவறவில்லை.

ஆறாவதாக ,சீனாவை இலங்கையர்கள் ஏற்கும் வகையில் சீனா இலங்கையின் பிராந்திய நாடு என்பதையும் வலிந்து திணிக்கவும் பிரதமர் மஹிந்த இந்த உரையினூடாக 'குத்தி முறிவதையும்' அவதானிக்க முடிந்தது.

சீனாவுடன் இலங்கை நெருங்கினால், பிராந்திய நாடான இந்தியாவின் உறவு பாதிக்கப்படும் என பலரும் சுட்டிக்காட்டி வரும் வேளையில், எங்கேயோ இருக்கும் சீனாவையும் இலங்கையின் பலம் மிக்க பிராந்திய நாடாக ஒரு மாயையை மக்களிடத்தே உண்டாக்க இந்த அரசாங்கம் நினைப்பதை மஹிந்தவின் உரையும் காட்டிக் கொடுத்துள்ளது.

"சீனாவின் எழுச்சியை அடிப்படையாகக் கொண்டே இந்த நூற்றாண்டில் ஆசியாவின் எழுச்சி இடம் பெறும் என்பது அனைவரதும் நம்பிக்கையாகும். அந்த வரலாற்று வெற்றியை சீனாவுக்கு பெற்றுக் கொடுத்தது, இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் 1921ஆம் ஆண்டு பன்னிரெண்டு பேர் ஒன்றிணைந்து உருவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சி தான். அதனால் சீன கம்யூனிஸ்ட் கட்சி ஆசியாவிலேயே மிகப் பெரியதும்,முக்கியமானதுமான கட்சி" என்று அவரது துதிபாடல் தொடர்கிறது.



இதன் மூலம் எப்படித்தான் எதிர்ப்புகள் வந்தாலும், ராஜபக்சக்களின் அரசாங்கம் சீனாவை விட்டு விலகிச் செல்லாது என்பதையே மஹிந்தவின் உரை மீண்டுமொருமுறை உறுதிசெய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ரயிலுக்குக் காத்திருக்கிறார் கவிஞர். சிவப்பு நிறம் காட்டிய 'சிக்னல்' பச்சையாக மாறுகிறது. வழமையாக பச்சை (காய்) பழுத்து சிவப்பு (பழம்) ஆகும். ஆனால் மஹாகவி 'கனி காயாயிற்று' என்கிறார்.



# ஈழத்து மஹாகவி

கவிஞர் சோ.பத்மநாதன்

*"கேடுற்றவரிடையே கெட்டழியா தென்னிடமே*
*எஞ்சிக் கிடக்கின்ற இன்தமிழ் இவ்வென்பாக்கள்*
*என்றைக் கொருநாளோ எத்திசையையும் வெல்லும்"*

என்ற பிரகடனத்துடன் கவிதை உலகில் நுழைந்தவர் 'மஹாகவி'. ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் அடையாளமாகிய பேச்சோசையை முதன்மைப்படுத்தியவர் என்ற வகையிலும், பாநாடகம், வில்லுப்பாட்டு ஆகிய துறைகளிலும் தம் முத்திரையைப் பொறித்த சாதனையாளர் என்ற வகையிலும் மஹாகவி வகிக்கும் இடம் முக்கியமானது.

மஹாகவி பிறந்தது அளவெட்டியில். அளவெட்டி, அம்பனை, பன்னாலை, விழிசிட்டி, மயிலங்கூடல், மாவிட்டபுரம், வீமன்காமம் முதலிய கிராமங்கள் விவசாயத்துக்குப் பேர்போனவை.

*"அம்பனைக்கு முன்னால் அடிக்கும் வயற்காற்றில்*
*கொம்புலுப்பிப் பூக்களினைக் கொட்டும் குடைவாகை"*

இயற்கையோடிணைந்த எளிமையான இந்த மக்களை அவர்கள் பண்பாட்டை மஹாகவி நேசித்தார்.

*"நாள் முழுதும் பாடுபடுவார்கள் ஓயார்*
*நன்றுபுரி வார், இரங்கு வார்கள்*
*ஆள் புதியன் ஆனாலும் ஆதரிப்பர்*
*போய் உதவுவார்கள் ஊரார்கள்"*

என்று ரசிப்பார் அவர்.

இந்தக் கிராமங்கள் கோயில்களுக்கும் புராண படணத்துக்கும் பேர் பெற்றவை. குறிப்பாக அளவெட்டி ஸ்ரீ நாசுர தவில் கலைஞர்கள் வாழ்ந்த வாழ்கின்ற, ஊர். இந்தக் கலைஞர்களின் செல்வாக்கை மஹாகவியின் ஆளுமையில் குறிப்பாக கோடையில் காணலாம்.

ஈழ மண்டலத்தின் எழிலைப்பாடிய பழந்தமிழ் புலவர் போல, மஹாகவியும்

*"சங்குகள் முழங்க முத்து எறிந்திடும் கடற்கரையில்*
*நங்கையர் நடந்தவை உதைந்திடும் சதங்கை ஒலி*
*பொங்கும் உடலங்கள் தரளங்களில் நடம்பயிலச்*
*செங்கை வளையல்களோடு கிண்கிணி குலுங்குவன!*
*ஈழ நாடே எழில் சூழுநாடே"*

என்று பாடுகிறார். ஓசையை லயத்தை இந்த அளவுக்கு முதன்மைப்படுத்திய ஒருவரை நாம் மஹாகவியாக ஏற்றுக் கொண்டு கவிதைக்கும் ஓசைக்கும் விவாகரத்துச் செய்யமுனைவது முரண்நகையாகத் தோன்றவில்லை? மஹாகவி கவிதை எழுதத் தொடங்கிய காலத்தில் பாரதி, பாரதிதாசன் ஆகியோரே இளங்கவிஞர்களுக்கு 'மாதிரி'களாக விளங்கினர். தமிழகத்தில் திராவிட இயக்கங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஏனைய ஈழத்து எழுத்தாளர்களைப் போல் மஹாகவியும் இவ்வீர்ப்புகளுக்கு ஆளாகியிருந்தாலும் விரைவில் அவர் தமக்கென்று ஒரு பாணியை வகுத்துக்கொண்டார்.

*"இன்னவைதாம் கவியெழுத*
*ஏற்ற பொருள் என்று பிறர்*
*சொன்னவற்றை நீர் திருப்பிச்*
*சொல்லாதீர்!*
*சோலை, கடல், மின்னல் முகில், தென்றலினை*
*மறவுங்கள், மீந்திருக்கும்*
*இன்னல் , உழைப்பு, ஏழ்மை, உயர்வு*
*என்பவற்றைப் பாடுங்கள்!"*

என்றுரைக்கும் தெளிவு அவருக்கிருந்தது.

'ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்' என்ற அவரின் காவியம், யாழ்ப்பாணத்து மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சாமானியனான முத்தையனின் கதை. பிறப்பு, இளமை, வாலிபம், பாலுறவு, முதுமை, இறப்பு இவற்றின் ஊடு வாழ்வியக்கம் பற்றியதோர் அற்புதமான தரிசனம் அது. பாரதி தன் சுயசரிதைக்குப் பயன்படுத்திய கட்டளைக் கலிப்பா யாப்பில் ஆற்றொழுக்காக கதை சொல்கிறார் மஹாகவி.




'கோடை' பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்துக் கிராமம் ஒன்றில், ஒரு நாயனக்காரர் வீட்டில் நிகழும் கதை, அந்நியர் ஆட்சிக்கு எதிராக நீறுபூத்த நெருப்பாக இருக்கும் புழுக்கம், நம் கலை, பண்பாடுகளின் மீதுள்ள பற்றுதல் இந்நாடகத்தில் இழையோடும். 'கோடை' என்பதே ஒரு குறியீடுதான். வெளிநாட்டார் ஆட்சி விளைத்த ஒரு கோடை' அந்த வறட்சியிலும் அற்புதமான கலை பிரவாகிக்கிறது.

"நின்றந்தக் கோயில் நிமிர்ந்து நெடுந்தூரம்
பார்த்துப் பயன்கள் விளைக்கின்ற கோபுரமும்
வேர்த்துக் கலைஞர் விளைத்தமணிமண்டபமும்
வீதிகளும் நூறு விளக்கும் பரதத்தின்
சேதிகளைக் கூறும் சிலம்புச் சிறுபாதம்
ஆடும் அரங்கும், அறிந்து சுவைஞர்கள்
நாடிப் புகுந்து நயந்திட நீ சோமனுடன்
ஊதும் குழலில் உயிர்பெற்றுடல் புளகித்து ஆதி அறையில் அமரும் கடவுளுமாய்
என்றோ ஒருநாள் எழும்பும், இருந்து பார்!"

இந்த நம்பிக்கையோடு நிறைவு பெறுகிறது 'கோடை' மிகப் பிரபலமான 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற கவிதை இந்த நம்பிக்கையை அழுத்தமாகப் புலப்படுத்துவதே. கலட்டைக் கழனியாக்கும். யாழ்ப்பாணத்து விவசாயி. அவனுக்கு ஏற்படும் சோதனைகள்: வான் பொய்த்து வஞ்சிக்கும் அல்லது சோனாவாரியாய்ப் பொழிந்து பயிரை அழிக்கும்! எது நேர்ந்தாலும்,

"ஓயா வலக்கரத்தில் மண்வெட்டி பற்றி
அதோபார், பழையபடி கிண்டுகிறான்!'
அது தான் 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு !"

சாதிப்பிரிவினைக்கெதிராக மஹாகவி எழுதிய 'தேரும் திங்களும் ' ஓர் அற்புதமான கவிதை. ஒரு சம்பவத்தைக் கட்புல, செவிப்புல படிமங்கள் மூலம் சித்திரித்து [illegible] இது மனிதன்

சந்திரனில் இறங்கிய சாதனைக்கும்
ஆலயப்பிரவேச முயற்சியில் 'மல்லொன்று நேர்ந்து மனிசர் கொலையுண்டு' போகும் சிறுமைக்கும் மஹாகவி போடும் முடிச்சு அவர் மேதாவிலாசத்துக்கு எடுத்துக்காட்டு.

குறும்பா வேடிக்கைக் கவியாக இருந்தாலும் சமூகத்தின் தனி மனிதர்களின் பலவீனங்களை எள்ளற் சுவையோடு வெளிக்கொணர்வது, பணம் படைத்திருந்தும் 'கஞ்சப்பிரபு வாய் வாழும் ஒருவரைக் காட்டுகிறார் நம் கவிஞர். அதிகம் நடந்தால் காற்செருப்புத் தேயும் என்பது கஞ்சனுடைய சித்தாந்தம்.




"முந்தலிலே வாழ்கின்ற தேவர்
முழுத்தொழிலுக்கும் முதலாளி யாவர்
இந்தவிலை விற்கிறதே
ஏன் செருப்பைத் தேய்ப்பான் என்(று)
அந்தரத்தில் தான் நடந்து போவர்!"

தற்புதுமை (Originality) என்பது மகாகவிகளின் முத்திரை. நம் கவிஞர் பல தற்புதுமையான உவமைகளைக் கையாண்டுள்ளார்.

விடியற்காலை. இருள் விலக , ஒளி மெல்ல வருகிறது.

"கோப்பிக்குள் பாலையள்ளிக்
கொட்டினாற் போலிருட்டைச்
சாப்பிட்ட கிழக்கு வானம்
சரியாக வெளுக்க..."

கவிதை நூலொன்றை வாசித்துக் கொண்டிருக்கிறார் கவிஞர் "இதென்ன இந்த இடத்தில் குற்று வராதே!" என்று கைவிரலால் தட்டியபோது, புள்ளி அளவில் ஒரு பூச்சி இறந்து விடுகிறது. அதன் சாவு அவர் உளத்தை அலைக்கழிக்கிறது. பூச்சியின் இறப்புக்கு கவிஞர் தரும் உவமைகள் :

"காட்டெருமை காலடியில் பட்ட தளிர்போல
நீட்டுரயிலில் எறும்பு நெரிந்தது போல்
பூட்டாநம் வீட்டில் பொருள்போல நீமறைந்தாய்!"

ரயிலுக்குக் காத்திருக்கிறார் கவிஞர். சிவப்பு நிறம் காட்டிய 'சிக்னல்' பச்சையாக மாறுகிறது. வழமையாக பச்சை (காய்) பழுத்து சிவப்பு (பழம்) ஆகும். ஆனால் மஹாகவி 'கனி காயாயிற்று' என்கிறார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

# “மஹாகவியின் ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்”



ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றிலே மஹாகவியின் இடம் மறக்க, மறைக்க, அழிக்க முடியாதது. இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இருந்து ஈழத்துத் தமிழ்க் கவிதை எழுச்சியுடன் உலாவத் தொடங்கியதெனலாம். அந்தக் காலகட்டத்திலே நல்ல கவிதை, சிறுகதை, கட்டுரைகள் முதலியவற்றைப் படிக்கும் வாய்ப்பு எமக்குப் பத்திரிகைகள் ஊடாகவே கிடைத்தது. தினசரி, வாரவெளியீடுகளைத் தவிர வேறு நூல்களெதையும் படிக்கக் கூடிய பாடசாலைச் சூழல் எமக்குக் கிடைக்கவில்லை. க.பொ.த. சாதாரணம் வரை இதுதான் நிலை.

அன்றைய தினசரிப் பத்திரிகைகளான தினகரன், வீரசேகரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகள் எங்கள் பாடசாலையிலே மாணவர்கள் வாசிப்பதற்கென ஒரு மூலையிலே கட்டி வைக்கப்பட்டிருக்கும். பாட இடைவேளையிலும் ஆசிரியர்கள் வராத நேரத்திலும் சில வேளைகளிலே பாடசாலை விட்டதன் பின்பும் நாங்கள் சிலர் அந்த மூலையிலேயே இருப்போம். மாணவர்களை வாசிக்கத் தூண்டவென அந்தக்காலத் தமிழ்ப் பாடசாலையொன்று இவ்வளவைத்தான் செய்ய முடிந்தது போலும். எமது பாடசாலைத் தலைமை ஆசிரியர் தமிழரசுக் கட்சியின் மிகப் பெரிய தூண். இதனால் சுதந்திரன் பத்திரிகை தவறாமல் எங்களுக்கு கிடைக்கும்.

பள்ளிப் பருவத்திலேயே கவிதையில் நல்ல ஈடுபாடு இருந்தது. இரசனையுடன் கற்பித்த தமிழாசிரியர்களாலேதான் அது உருவானது என்று நினைக்கிறேன். அந்தக்காலத் தினத்தாள்களில் கவிதை எழுதிய பல கவிஞர்களின் கவிதைகள் சில இன்றும் நினைவில் இருக்கின்றன. அந்தக் கவிஞர் பரம்பரையிலே நான் விரும்பி இரசித்து இரசித்து படித்த கவிதைகள் பல மஹாகவியினுடையவை. மஹாகவி என்ற பேரைத் தவிர எதுவும் தெரியாத அந்தக் காலத்திலே கவிதை வழிபிறந்த காதல் ஒன்று மஹாகவியில் எனக்கு உண்டாது. மஹாகவியை விட்டுப் பிரிய முடியாத காதலாக அது உருவாகி இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

மஹாகவி மறைந்து ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் படித்ததை எழுபதுகள் கடந்த நிலையில் எண்ணும் பொழுது இன்றும் அந்த நினைவுகள் இனிக்கின்றன. நான் மஹாகவியை நேரிலே கண்டதில்லை. காண வேண்டுமென்ற ஆவல் இருந்தது. அது நிறைவேறவில்லை. ஆனால் அவரின் கவிதைகளினூடு அவரைப் பரிபூரணமாகப் பார்த்துவிட்டேன் என்றுதான் எண்ணுகிறேன்.

அச்சில் வந்த அவரது படைப்புக்கள் (என் கண்ணிற்பட்டவை) அனைத்தையும் படித்திருக்கிறேன். (பல தடவைகள்) குறும்பா நூலும் எனக்கு நினைவில் இருக்கிறது, கோடை நாடகத்தை பல வருடங்கள் கற்பித்திருக்கிறேன்.

“ஒரு நாவலிலோ அல்லது சிறுகதையிலோ ஏதாவது ஒரு படைப்பிலோ ஏதோவொரு வகையில் வாசகன் ஒரு பாத்திரமாகவோ அல்லது அதில்வரும் சம்பவங்களுடன் நேரடித் தொடர்புடையவனாகவோ இருந்தால் வாசகன் அதை விரும்புவான். படித்துப் பல காலம் சென்ற பின்னும் மறக்கமாட்டான்” என்று யாரோ கூறியதை எங்கோ வாசித்த நினைவு உண்டு. மஹாகவியின் ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்” ஏறத்தாழ என் சரித்திரம் தான்.

நவகாவியமாக நான் கருதும் 'ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்' ஒரு கா்லகட்டத்தின் யாழ்ப்பாணச் சமூகத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் பதிவாகவே காணப்படுகின்றது. காவியத்தைக் 'கதைபொதி பாடல்' என்று யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். முத்தையனின் கதையினூடு யாழ்ப்பாணத்தின்-குறிப்பாக அளவெட்டிக் கிராமத்தின் - அழகியல் , வாழ்வியல் அனைத்தும் பதிவாகியுள்ளன.




யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான கிராமங்களின் அந்தக்கால வாழ்வியல் இதுதான். ஒரு சாதாரண மனிதனின் ஐம்பது வயது கடக்கும்போது தான் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பது பழைய நினைவுகளை 'இரை மீட்பது' என்பதெல்லாம் ஒரு இனிய அனுபவம்தான். ஆனால் மஹாகவி இந்தக் காவியத்தை தமது முப்பத்தியெட்டாவது வயதிலே எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அளவெட்டிதான் வடலிக் கூடல் (அளவெட்டிக் கிராமம் எமக்கு நன்கு தெரியும். அடிக்கடி சைக்கிளில் அந்தக் கிராமத்தை வலம் வந்த அனுபவம் நிறையவுண்டு). அந்தக் கிராமத்தின் விவசாயக் குடும்பத்தின் அன்றாட நிகழ்ச்சியினூடு சமூகவியல், மானுடவியல், ஆய்வாளர்கள் கண்டு கொள்ள வேண்டிய கன விடயங்களை கவியாக்கிய பெரும் பணி மஹாகவிக்கு உரியது. “சொல்லை இசைத்து கவி செய்யுமாறே” என்று பாரதி கூறியது மஹாகவிக்கு நூறு வீதம் பெருந்தும் என்பது எனது கருத்து. 'நாம் வளர்ந்ததும் நம்மை வளர்த்ததும் நயம்படச் சொல்லும்' இக் காவியம் காலத்தால் அழியாதது.

“ஒல்லிகட்டி இருந்த அரையொடும்
ஒடிமாரிக் கிணற்றில் குதித்ததும்
பல்விழுந்த பொழுததைக் கொண்டுபோய்
பாம்புப் புற்றினில் இட்டதும் கீரியே
நல்ல பல்தருவாய்”

இப்படியே முத்தையனின் வளர்ச்சியைச் சுட்டிச் சொல்லும் பகுதியைக் கிராமத்திலே பிறந்து வளர்ந்த (அந்தக்கால)

> **யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான கிராமங்களின் அந்தக்கால வாழ்வியல் இதுதான். ஒரு சாதாரண மனிதனின் ஐம்பது வயது கடக்கும்போது தான் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பது பழைய நினைவுகளை 'இரை மீட்பது' என்பதெல்லாம் ஒரு இனிய அனுபவம்தான். மஹாகவி இந்தக் காவியத்தை தமது ஐம்பத்திரண்டாவது வயதிலே எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.**

பலரும் தங்கள் இளமை நினைவுகளோடு இணைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது. பிறந்தமை, வளர்ந்தமை, முனைந்தமை, திரிந்தமை, மணந்தமை, இணைந்தமை, சிறந்தமை, நிறைந்தமை, நடந்தமை, இறந்தமை எனப் பல 'மை'களைக் கொண்டு வண்ண ஓவியக் காவியமாக மஹாகவி இதனைப் படைத்துள்ளார். மஹாகவியின் இக்காவியத்தினூடு கிராமிய வாழ்வின் பலம் அதன் அழகு அனைத்தும் தெளிவாகப் புலப்படுகின்றது. மஹாகவி கிராமத்தை நேசித்தார். கிராமிய வாழ்வை இரசித்தார். அதைப் பதிவுசெய்ய விரும்பினார் என்பதை இந்தக் காவியத்தினூடு கண்டுகொள்ள முடியும்.

முத்தையன், வேலுப்பிள்ளை, செல்வி, நல்லையாபிள்ளை, வள்ளியம்மை, தெய்வானை முதலான ஆட்பெயர்களை இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்திலே யாரும் இடுவதும் இல்லை. இந்தப் பெயர்களை இரசிப்பதும் இல்லை. பெயரை உடையவனே பேரன் ஆனான் என்பர். முத்தையனின்பிள்ளை வேலுப்பிள்ளை ஆயினான். யாழ்ப்பாணத்துக் காணி உறுதிகளைப் பார்த்தால் (தோம்பு) முத்தையா வேலுப்பிள்ளை, வேலுப்பிள்ளை முத்தையா என்பவை போன்ற பெயர்கள் திரும்பத் திரும்ப தொடர்ந்து வருவதை அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணத்துக் கிராமிய சடங்காசாரங்களை சமூக நடைமுறைகளை குறிப்பாகத் திருமணச் சடங்கு, மரணச் சடங்கு முதலானவை இந்தக்காவியத்திலே படம்பிடித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கிராமியச் சொற்கள் எவ்வாறு பொருள் பொதிந்து வழங்கின என்பதை அற்புதமாகப் பதிவுசெய்துள்ளார். அசுகை( சந்தம்) தறை (தரை) முதலான பேச்சு வழக்குச் சொற்களைப் பதிவுசெய்துள்ளார். இந்தச் சொற்கள் இன்று பெரும்பாலும் வழக்கில் இல்லை. பண்பாட்டு மொழியியல் ஆய்வாளர்களுக்கு இவர் கையாளும் கிராமியச் சொற்கள் விருந்தாக அமையும்.

அற்புதமான காவியமான ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம் மஹாகவியின் கவிதா ஆற்றலை காட்டி நிற்பதை மிக விரித்து எழுத வேண்டும் என்ற ஆசை எனக்கு அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பற்சுகாதாரமும் அதன் அவசியமும்

சிரிக்கும் போது பளீச்சென்று அழகூட்டும் அழகுப் பொருளாக, பேசும் மொழியினை சிறப்புடன் உச்சரிக்க உதவும் சாதனமாக மற்றும் உண்ணும் உணவுப் பொருளினை நன்றாக அரைத்துப் பின்னர் அது சமிபாடு அடைவதற்கு உதவும் இன்றியமையாத உறுப்பாக பற்கள் உதவுகின்றன.

"பல் போனால் சொல் போச்சு" என்பார்கள். அத்தகைய மகத்துவமுடைய பற்களை பாதுகாப்பதில் இன்று எம்மில் பலர் தவறுகின்றோம். முரசு நோய்கள், பற்சூத்தை என்பவற்றுக்கு இன்னும் பலரும் ஆட்பட்டுள்ளோம். அல்லது அதன் ஆபத்தில் உள்ளோம்.

முரசு நோய்கள் பற்களிற்குப் பாதுகாப்புத் தரும் இழையங்கள் மற்றும் என்புகள் முதலியவற்றில் ஏற்படும் கிருமித்தாக்க மற்றும் அழற்சி நோயாகும். இது பல் ஈறுகளையும் அதனைச் சுற்றியுள்ள இழையங்களையும் பாதிக்கின்றது. நோயின் தீவிரத்தைப் பொறுத்து பல்வேறு படிகளாக முரசு நோய்கள் காணப் படுகின்றன.

பல் ஈறுகளில் கிருமித்தாக்கத்தால் ஏற்படும் அழற்சி பல் ஈறழற்சி எனப்படுகின்றது. இதில் முரசானது செந்நிறமாக வீங்கிக் காணப்படும். பற்களைத் தீட்டும் போது இரத்தம் கசியும். பெரும்பாலும் இத்தகைய நோயுடையோருக்கு வலி எடுப்பதில்லை, எனவே அதனைப் பற்றி அக்கறை கொள்ளாது உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்வதில்லை. இது உருவாகுவதற்குரிய முன்னணிக் காரணியாக பாக்டீரியாக்கள் திகழ்கிறன. பொதுவாகவே பற்களில் முரசுகளில் ஒரு நிறமற்ற படலமாக பக்டீரியாக்கள் படிகின்றன. பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களின் ஆரம்ப நிலையில் ஏற்படும் இத்தகைய படலம் "பிளாக்" என்று அழைக்கப்படுகிறது.

இந்தப்படலமானது ஆரம்பத்தில் இலகுவாக விரல் நகம் கொண்டு அகற்றப்படக்கூடியளவு இளகலாகக் காணப்படும். இது அகற்றப்படவில்லை என்றால் 48 மணி நேரங்களுக்குள் கடினமடைந்துவிடும். மேலும் பத்து நாள்கள் சென்ற பின்னர் மேலும் தீவிரமடைந்து அகற்ற முடியாததாகவே ஆகிவிடும். அல்லது தாத்தார் எனப்படும் மஞ்சள் நிறமுடைய நிலையை அடைந்துவிடும். எனவே தான் நாளாந்த வாய்ச் சுகாதாரம் அவசியம். ஒழுங்காக பல் துலக்காதவிடத்து இத்தகைய சிக்கல்கள் பற்சிதைவு, பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களைத் தோற்று விக்கும்.

பல்லின் அமைப்பைப் பற்றி பார்த்தோமானால், அது நான்கு வகை இழையங்களால் ஆனது:

1. பற்காரை : பல் வேரின் வெளிப்பகுதியைச் சூழ உள்ளது.
2. காற்றிடை என்பு : தாடையில் பற்களுக்கு ஆதாரமாக விளங்குவது.
3. ஈறு : தொடுப்பிழைய அமைப்பு
4. பல் சுற்றி இணைப்பிழை : பற்காரைக்கும் காற்றிடை என்புக்கும் இடையிலே தொடுப்பாகத் திகழ்வது.

மேற்கூறியவற்றுடன் இன்னும் சில நார்கள், இழையங்கள் சேர்ந்து ஆரோக்கியமான பற்களை உறுதியாக வைத்திருக்க உதவுகின்றன. இந்த அமைப்பினை முரசு தொடுப்புச் சாதனம் என்று அழைப்பர்.


முரசு அழற்சியின் போது பற்களுக்கும் இந்த அமைப்புகளுக்கும் இடையிலான தொடுகையானது இழக்கப்படுகிறது. ஆனால் இது தற்காலிக மாற்றமே, சிகிச்சை பெறப்பட்டால் மீண்டும் பழைய ஆரோக்கிய நிலைக்கு திரும்பி விடும். இங்கு என்புகளோ மற்றைய இழையங்களோ பாதிப்படைவது இல்லை.

எனவே பற்களில் அக்கறை கொண்ட [illegible] யை உடையவர்களாக பற்சுகாதாரத்தையம் வாய் சுகாதாரத்தையும் பேணுவோம். நோய்களில் இருந்து [illegible] ருப்போம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மஹாகவி:

## மாண்பு மிகு பேரெழில்



மஹாகவியும் பத்மாசனியும்




*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

மஹாகவி காலமான போது பேராசிரியர் சு. வித்தியானந்தன் எழுதிய அஞ்சலிக் கட்டுரையில் ' கவிதையே தன் ஆவியாக வாழ்ந்தவர் மஹாகவி " எனக் குறிப்பிடுகிறார். " நான் வளர்ந்த கருப்பை" என மஹாகவியைப் பாடியவர் கவி நுஃமான். " மாண்பு மிகு பேரெழில்" எனத் தன் பாடலால் மஹாகவியை வர்ணித்தவர் கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரை. மஹாகவியின் கவிதைகளை ஆரம்பத்தில் மஹாகவி என்ற பெயரில் கலைமகள் இதழில் வெளியிட மறுத்து, " து. உருத்திரமூர்த்தி" எனும் பெயரில் வெளியிட்டவர் அதன் ஆசிரியர் கி.வா.ஜ என்ற கி.வா. ஜகந்நாதன். "மஹாகவி" எனப் போடாவிட்டால் கவிதை அனுப்பமாட்டேன் எனச் சொல்லிவிட்டார் மஹாகவி.

இளவயதில் மஹாகவியின் வாழ்க்கை வறுமையும் சிக்கல்களும் நிறைந்ததாகவே இருந்தது. மஹாகவியின் தந்தை துரைசாமி ஒரு தவில் வித்துவான். இளவயதில் காலமாகி விட்டார். மஹாகவியின் மாமனார் ( மஹாகவியின் மனைவி பத்மாசனியின் தந்தை) முத்தையாப் பண்டிதர் ஒரு நாயனக்காரர்.

யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற பண்டிதர் சிவானந்தையர், தமிழறிஞரும் திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையின் புகழ் பூத்த உப அதிபரும்" மௌனத் தவமுனி" என்று சிறப்பிக்கப்பட்டவருமான பொ.கைலாசபதி ஆகியோரின் நெருங்கிய நண்பர். இவர்களின் நூல்களை இரவல் வாங்கிப் படித்தும் இவர்களோடு உறவாடியுமே பண்டிதர் தேர்வில் சித்திபெற்று அளவெட்டி சதானந்த வித்தியாசாலையில் தமிழாசிரியராகக் கடமை செய்தவர் முத்தையாப் பண்டிதர்.

மஹாகவியின் கோடை நாடகத்தில் வருகிற பஞ்சையர் எனும் பாத்திரம் சிவானந்த ஐயர்தான். ஆசாரங்களையும் சாதியத்தையும் துறந்து மனிதமே வாழ்வின் அடிப்படை என்று வாழ்ந்தவர் அவர். உலகம் என்பது நாங்கள் உய்யக் கொண்டது; தமிழ் அறியாதோர் காதல் அறியமாட்டார் என்று கொண்டாடியவர் அவர். அந்த அடிநாதம்தான் மஹாகவியுடையதும்.

"என் சிந்தனையைச் சின்ன மனிதருக்காய்ச் சிறிதாக்கத் தேவையில்லை" என்றும் "வேருக்குள் உறுதிகொண்ட வேம்புகள் மனிதர்" என்றும் "பிழையினைக் கடவுள் செய்தால் சரியாக்கல் மனிதர் வேலை" என்றும் " இயற்கைப் பெருந்தாய் இதயத்தைப் " புரிந்துகொள்ளாது மனிதர்கள் உலகை நாசமாக்குகிறார்கள் என்றும் அறுபது ஆண்டுகள் முன்னரே பாடியவர் அவர்.

மானுடரின் அணு ஆயுதக் கண்டுபிடிப்புக்குப் பிற்பாடு இந்த தொல்லுலகை ஆள்கிற உரிமை நண்டுகளுக்குத் தான் இருக்கிறது என்று அவர் சொன்னார். மற்றவர் சொல்வதைப் பற்றிக் கவலைப்படாமல் " உன் பாட்டில் மலர்வாய் நீ. நான் என்பாட்டில் எழுதுகின்றேன்" என்று காட்டு மல்லிகையைப் பார்த்து மிகுந்த நேசத்துடன் சொன்னவர் அவர்.

பகலெலாம் வயலில் வேலை செய்து விட்டுப் பொழுது சாயும் நேரம் வீடு திரும்புகிற பெண்ணின் குரலாக அவர் பாடுகிறபோது,

*"நான் பூத்த மல்லிகை அல்ல . பாதம் புதிய பூவிதழ் அல்ல.*
*வேர்த்து எந் நாளுமே வேலை செய்வதால் காய்த்த தோல் எனக்கு "*

என்கிறார். அந்தப் பெண்ணின் பெயர் வள்ளி. அவள் தொடர்ந்தும் சொல்கிறாள்:


நெல்லிடிக்குமாம். நீரிறைக்குமாம்.
புல் செதுக்குமாம் கைகள்.
அதனால் பொலிவு பெற்ற அவைகள்.
கல்லொடு ஒத்தது காரிகை உடல்.,
வல் இடை.இடை


அறுபத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு மஹாகவி எழுதியது இந்தக் கவிதை. கவிதை "பழைய பண்டிதர்களுக்கும் கோட்பாடுகளை விழுங்கி விட்டுச் செமித்துக் கொள்ள முடியாதவர்களுக்கும்" உரியது அல்ல என்பது அவரது கருத்து. " பாட்டென்றால் என்ன?" பழைய இலக்கணத்தின் ஓட்டுக்குள்ளேயே உறங்கிக் கிடப்பதுவா? கற்களைப் போல் சொல் அடுக்கிக் கட்டுவதா?" இல்லை என்று சொல்கிற மஹாகவியின் படைப்புகள் நவீன தமிழ்க் கவிதைக்கும் கவிதையியலுக்கும் முன்னோடி எனச் சொல்வது மிகை அல்ல.

ஒரு வகையில் கவிகளுக்கும் மஹாகவிகளுக்கும் உள்ள தர வேறுபாடு இதுதான்: யதார்த்தம் என எளிதாகச் சொல்லப்படும் உலக வழக்கிலிருந்துதான் எல்லாக் கவிகளும் தமது பட்டறிவையும் படிமங்களையும் ஒத்திசை, ஒவ்வா இசைகளையும் பெற்றுக்கொண்டாலும் அந்த வழக்கைப் புனைவு, ஆழ்ந்த தரிசனம், தொலைநோக்கு என்பவற்றுக்கூடாக நாடக வழக்காக அவர்கள் புடமிடுகிறபோதுதான் கவிகள் மஹாகவிகளாவது சாத்தியமாகிறது.

இந்த மதிப்பிட்டுக்குக் காலம் ஒரு சிறந்த அளவுகோல். மலைகளை மதிப்பிடச் சேய்மை இன்றியமையாதது. அந்த வகையில் துரைசாமி உருத்திரமூர்த்தி நம் காலத்தில் மேலெழுந்த ஒரு மஹாகவி. அவரது ஐம்பதாவது நினைவு நாளை ஒட்டி அவருடைய படைப்புக்களாக, மஹாகவி காவியங்கள், மஹாகவி நாடகங்கள், மஹாகவி கவிதைகள் இந்த ஜூன்மாதம் வெளியாகின்றன. யாழ்ப்பாணம் ஜீவநதி பதிப்பகமும் மஹாகவி நூல் வெளியீட்டுக் குழுவும் இணைந்து இந்த நூல்களை வெளியிடுகின்றன. மஹாகவியின் உற்ற நண்பரும் கவிஞரும் பேராசிரியருமான எம்.ஏ. நுஃமான் இந்த நூல்களைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார்.

**மஹாகவி கையெழுத்தில் பொருள் நூறு 3**




# ஈழத்து...

*(07ஆம் பக்கத் தொடர்ச்சி)*

"நட்டிருந்த கைகாட்டி மரத்தில் ஒரு
கனிமுதிர்ந்து காயாகிற்று..."

தேர் வரும் காட்சியை வருணிக்கும் கவிஞர்,

"தெற்கு வீதிக்குத் திரும்பிற்று
கிழக்கினில் இருந்து'
நெற்குவித்தது போல் உயர்ந்தொருபுது
நெடுந்தேர் !"

இவை வேறெந்தக் கவிஞனும் எடுத்தாளாத புது உவமைகள்/ பிரயோகங்கள். அநாயாசமான வெளிப்பாட்டுத் திறன் மஹாகவியின் கலையாக்கத்தின் பிரதான அம்சமாகும். தான் சொல்லவரும் செய்தியை எந்தப் பாவடிவத்துக்குள்ளும் மடக்கிக் கொண்டுவர அவரால் முடியும். மிகையான ஒரு (வெற்று) சொல்லோ , அசையோ அவர் பாட்டில் வராது.

நீலவாணனுக்கு மஹாகவி எழுதிய அஞ்சல் அட்டை இது.

"பேரன்ப ஒன்றும் பெரிதாய் எழுதவில்லை
சேரன் பிறந்த செருக்கு "

தமிழ்க் கவிதை மரபில் அவர் அடைந்த சிகரம் அது.

வாய் விட்டுப் பாட, நிழலுத்திக் காட்டப் பொருத்தமான ஒரு சந்தத்தை [illegible] மஹாகவி 'கோடை' நாடகத்தைப் பிரமாதமாகத் தொடங்குகிறார்:

"வெறுவான வெளிமீது மழைவந்து சீறும்
வெறிகொண்ட புயல்நின்று கரகங்கள் ஆடும்
நெறிமாறு படநூறு சுழிவந்து சூழும்
நிலையான தரைநீரில் இலைபோல் ஈ ஆடும்
சிறுநண்டு கடல் மீது படமொன்று கீறும்
சிலவேளை இதை வந்து கடல் கொண்டுபோகும்"

இவை சில உதாரணங்கள். தமிழ்க் கவிதைக்குரிய ஓசையில் மஹாகவிக்கிருந்த பிடிமானத்தைக் காட்டப்போதுமானவை. அந்த மரபையே அவர் காதலித்தார். 'குறும்பா' என்னும் ஒரு புதுப் பாவினத்தை தமிழுக்கு மஹாகவி அறிமுகப்படுத்தினார். அவர் புதுக்கவிதை எழுதவில்லை . தவறு. ஒரேயொரு புதுக் கவிதை எழுதினார். அதன் தலைப்பு 'சேரன்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்

யாழ்ப்பாண இராச்சியத்தில் முதன் முதலாக முதலியராக நியமிக்கப்பட்ட சிலரது விபரங்கள் வருமாறு.

| | |
|---|---|
| அழகாண்மைவல்லமுதலி | - கல்வியங்காடு |
| திடவீரசிங்கமுதலி | - அச்சுவேலி |
| தனபாலசிங்கமுதலி | - மல்லாகம் |
| வெற்றிவேலாயுதமுதலி | - சண்டிலிப்பாய் |
| விஜயதெய்வேந்திரமுதலி | - அராலி |
| இராஜேந்திரமுதலி | - கச்சாய் |

இந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பறங்கிகள்( போர்த்துக்கீசர்) பொதுமக்களுக்குத் தொல்லை கொடுத்துவந்தனர். பொதுமக்கள் அரசனிடம் முறையிட்டும் அரசன் எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது மக்களுக்கு அரசன் மீது வெறுப்பை ஏற்படுத்தியது. இதனால் மக்கள் அரசனைப் பதவியிலிருந்து நீக்கி இராமேஸ்வரத்திலிருந்த அரசகுமாரனைப் பதவியில் அமர்த்த முற்பட்டனர். தஞ்சாவூர் அரசனும்,கண்டி அரசன் விமலதர்மசூரியனும் இதற்கு ஆதரவளிக்கிறார்கள் என வாக்குறுதியளித்தனர். இதையறிந்த பரராசசேகரன் மன்னாரிலிருந்த பறங்கித்தளபதிக்கு தகவல் அனுப்பினான்.

1592 ஆம் ஆண்டு மனுவெல் டீ அதையிட் (Manuel De Athoid) என்ற போர்த்துக்கீசத் தளபதியின் படை, இராமேஸ்வரத்திலிருந்து வந்த அரசகுமாரனை தோற்கடித்தது. பரராசசேகரனை மீண்டும் அரசனாக்கினான் மனுவெல் டீ அதையிட்.

1616 ஆம் ஆண்டு தமையன் முறையான அரசகேசரியிடம் தனது மூன்று வயதுக் குழந்தையை ஒப்படைத்துவிட்டு குழந்தை வளரும்வரை ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்துமாறு கூறி உயிரிழந்தான் பராசசேகரன்.ஆனால் இதற்கிடையில் சங்கிலிகுமாரன் என்பவன் அரசகேசரியைக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். போர்த்துக்கீசருக்கு எதிராக தஞ்சாவூர் அரசனின் உதவியை நாடி இந்தியா செல்ல முற்பட்ட சிங்களச் சிற்றரசன் ஒருவனை திருப்பியனுப்பினான் சங்கிலி. இதனால் சங்கிலி தொடர்ந்து ஆட்சிசெய்ய அனுமதித்தனர் போர்த்துக்கீசர்.

சங்கிலியின் ஆட்சியில் மக்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்தனர் . இதனால் அரசனுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த மக்கள் அரண்மனையை முற்றுகையிட்டு பராசசேகரனின் குழந்தையைக் காட்டச்சொல்லி ஆர்ப்பரித்தனர். சங்கிலியும் குழந்தையை கொண்டுவந்து ஜன்னல் ஊடாக வெளியே காட்டினான்.

இதேவேளை மன்னாரிலிருந்து போர்த்துக்கீசத் தளபதியொருவன் வந்து சங்கிலிக்கும் மக்களுக்குமிடையே சமாதானம் பேசினான். எனினும் மக்கள் சமாதானமடையவில்லை. சங்கிலிக்கு எதிராக கலகம் புரிந்ததில் அரசகுடும்பத்தவர்களான முதலிமார்களே முன்னணியில் நின்றனர். முதலிமாரை அடக்குவதற்கு தஞ்சாவூர் அரசனின் உதவியை நாடினான் சங்கிலி .இது போர்த்துக்கீசருக்கு ஆத்திரத்தை மூட்டியது. இதேவேளை சங்கிலி நீண்டகாலமாகத் திறைசெலுத்தவில்லை. சங்கிலியின் கொட்டத்தை அடக்கும் நோக்குடன் பிலிப்டீ ஒலிவேரா என்ற போர்த்துக்கீசத்தளபதி கொழும்பிலிருந்து படையுடன் புறப்பட்டான். யாழ்ப்பாணம் நோக்கி பூநகரி ஊடாக புறப்பட்ட ஒலிவேரா ,திறை செலுத்துமாறு சங்கிலிக்கு தூது அனுப்பினான்.

சங்கிலி திறையின் ஒரு பகுதியை ஒலிவேரா பூநகரியை அடைய முன்னர் தருகிறேன் எனப் பதில் அனுப்பினான். சங்கிலி தன்னை ஏமாற்றுகிறான் எனக் கருதிய ஒலிவேரா போர் தொடுத்தான். வண்ணார்பண்ணை பனங்கூடலுக்குள் போர்த்துக்கீசப்படைகளும் தமிழ்ப்படைகளும் மோதிக்கொண்டன. இறுதியில் போர்துக்கீசப்படை வெற்றியீட்டியது. சங்கிலி இந்தியாவுக்கு தப்பியோட முற்படுகையில், பருத்தித்துறைக்கடலில் வைத்து கைது செய்யப்பட்டான். பின்னர் அவன் கோவாவுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து சிரச்சேதம் செய்யப்பட்டான். (சங்கிலயனின் சமாதி இப்போதும் கோவாவில் உள்ளது. யாழ்ப்பாணத்தவர்கள் பலரும் சங்கிலியின் சமாதியை பார்வையிட்டுள்ளனர்.)

## 1617

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசக் கொடி ஏற்றப்பட்டது,யாழ்ப்பாணம் போர்த்துக்கல்லின் மாகாணங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டது. ஒலிவேரா யாழ்ப்பாணத்தின் முதலாவது ஆளுநராகப் பதவியேற்றார்.யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதுடன் இலங்கையில் தமிழ் இராச்சியத்தின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது என போர்த்துக்கீச வரலாற்று ஆசிரியரான ப்ரேராய் சௌஸா(Fraray Sousa) என்பவரை மேற்கோள்காட்டி பிரித்தானியர் ஆட்சியில் குடியேற்ற நாடுகளின் செயலராக இருந்த சேர் ஜேம்ஸ் எமர்சன் ரெனெண்ட்(Sir James Emmerson Tennent) குறிப்பிட்டுள்ளார். ( ஆதாரம்: History of Ceylon pg 28) போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னரும் யாழ்ப்பாணத்தவர்கள் போர்த்துக்கீசருக்கு எதிராக கலகம் செய்தனர். எனினும் இந்த கலகங்கள் யாவும் போர்த்துக்கீசரால் முறியடிக்கப்பட்டன.

1620 ஆம் ஆண்டு வருணகுலத்தான் என்பவன் தஞ்சாவூர்ப் படையின் உதவியுடன் போர்த்துக்கீசர் தங்கியிருந்த வெற்றிமாதா ஆலயத்தின் மீது தாக்குதல் நடத்தினான். எனினும் போர்த்துக்கீசர் இந்தத் தாக்குதலை முறியடித்தனர் .இதன் பின் மீகாப்பிள்ளை என்பவன் தஞ்சாவூர் சென்று படை திரட்டிக்கொண்டுவந்து தொண்டைமானாற்றில் இறங்கி நல்லூரை முற்றுகையிட்டான். இதனைக் கேள்விப்பட்ட கொழும்பிலிருந்த போர்த்துக்கீசத் தளபதி, ஒலிவேராவுக்கு உதவியாக கொழும்பிலிருந்து ஒரு படையை அனுப்பினான். கொழும்பிலிருந்து வந்த படை, கண்ணில்பட்ட தமிழர்களையெல்லாம் மார்பை பிளந்து கொன்றது. பாலூட்டிக் கொண்டிருந்த தாய்மாரிடமிருந்து குழந்தைகளை பறித்து வாள் நுனியில் குத்திகொன்றது. பெண்களின் வயிற்றை கிழித்து குழந்தைகளை வயிற்றினுள் திணித்தது. கொழும்பிலிருந்து வந்த போர்த்துக்கீசப்படையும் யாழ்ப்பாணத்திலிருந்த கூலிப்படையும் இணைந்து மீகாப்பிள்ளையின் தாக்குதலை முறியடித்தன. இந்தச் சம்பவம் 1620 மார்ச்சில் இடம்பெற்றது எனக் கூறப்படுகிறது. (ஆதாரம் : யாழ்ப்பண வைபவ விமர்சனம் சுவாமி ஞானப்பிரகாசர்).

*(வரலாறு நீளும்)*

# குழைக்காட்டு கதைகள்

கோகுலராகவன்



கிராமத்து மனிதர்களின் கண்ணியத்தைப் பற்றி பல தடவை எழுதி இருக்கின்றேன். எப்போதும் கௌரவமான வாழ்க்கை வாழ்ந்து மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வார்கள். ஆனாலும் நெல்லுக்குள் களை தோன்றுவது போல சமூகத்திலும் சில களைகள் இருக்கத்தான் செய்கின்றன. இவர்களை பொதுவாக 'சபை குழப்பி' என காரண இடுகுறிப் பெயரால் அழைப்போம். முற்றாகி வரும் திருமணத்தை குழப்புவார்கள்.

"ஏன் பொன்னையாண்ணை பெட்டையின்ர கலியாணம் குழம்பினது?"

"என்ன செய்ய? ஆரோ கல்லுக் குத்திப் போட்டினம்"

"கல்லுக் குத்துதல்" என்பது இல்லாத பொல்லாத தகவலை சொல்லி கல்யாணத்தை குழப்பும் செயற்பாட்டைக் குறிக்கும்.

இந்த கல்லுக் குத்தும் செயற்பாட்டில் எங்கடை ஊரில் ஒரு பிரபல்யமானவர் இருந்தார்.

ஒரு திருமணம் நடப்பதற்கு முன்னர்,மாப்பிள்ளை தரப்பு பெண் பிள்ளையைப் பற்றியும் . பெண் பிள்ளை தரப்பு மாப்பிள்ளையை பற்றியும் விசாரித்து குணம், நடை, பழக்கவழக்கம் ஒழுக்கம் பற்றி அறிவது வழமை. எனது அப்பாவை பற்றி அம்மா தரப்பு விசாரித்தபோது, வேண்டாத ஒருவரிடம் விசாரித்துவிட்டனர். அவருக்கு அப்பா தரப்பில் ஏதோ கோபம் அல்லது பொறாமை இருந்திருக்கலாம்.

## "கல்லுக் குத்துதல்" - இல்லாத பொல்லாத தகவலை சொல்லி கல்யாணத்தை குழப்புதல்

"கோவிந்தரும் (அப்பப்பா) பொடியளும் (ஏழுபேர்) சேர்ந்து குடிக்கிறவங்கள்" என்று ஒரு பொய்த் தகவலை வழங்கி இருக்கிறார். ஆனால் தீர விசாரித்ததில் இதில் உண்மை இல்லை என அறிய முடிந்தது.

இப்படி திருமணத்தை குழப்புவதில் சிலருக்கு அலாதி விருப்பம். இதில் என்ன பயன் கிடைக்கும் என்றால் எதுவுமில்லை. ஆனால் ஒரு திருமணத்தை குழப்புவது மிகவும் பாவமான காரியமாகவே கருதப்பட்டு வந்தது. அப்படிப்பட்ட பாவத்தை செய்ய ஒருவர் முனைகின்றார் என்றால் அவருடைய மனப்பாங்கு எப்படியானது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

"பாழ்படுவான் என்ரை பிள்ளையின்ர வாழ்க்கையை நாசமாக்கிப் போட்டான்"

திருமணத்தைகுழப்புபவரின்பெயரை அறிந்து கொண்டால் இவ்வாறாக சாபம் நிச்சயமாக கிடைக்கும். மண் அள்ளி எறிந்து திட்டுவார்கள். இது மிகவும் பொல்லாத சாபமாக கிராம மட்டத்தில் பார்க்கப்படும்- கருதப்படும். பூமாதா இப்படியான பாவிகளை தன் மீது வாழ விடமாட்டார் என்பது கிராமத்தவரின் நம்பிக்கை கிட்டத்தட்ட சாபத்தின் கடைசி சாபம் இதுதான்.

"மனமெரிஞ்சு சொல்லுறன் உன்ரை குடும்பம் நடுத் தெருவில் நிற்கும்"

எங்கட ஊரில் கல்லுக் குத்தும் அந்த ஒருவர் இதிலே சகல கலா வல்லவர். மாப்பிள்ளை பெண்பிள்ளை வீட்டாரை மணந்து தேடிப் பிடித்துவிடுவார். எப்படி தொடர்பை பெறுகின்றார் என்பது புதினம். சிலவேளை பஸ் ஏறிப்போய் திருமணத்தை குழப்பியும் இருக்கிறார். அந்த வீட்டுக்கு ஆடு, மாடு விற்க இருக்கோ என்று கேட்டபடி போய் விடுவார். சும்மா கதையளந்து தன்ரை ஊரை சொல்லிவிட்டு அவர்கள் முகத்தைப் பார்ப்பார். அவர்களும் இவரிடம் விசாரிக்கலாம் என்று

"இன்னாரைத் தெரியுமோ?"

"நல்லாத் தெரியும்"

"சம்பந்தம் பேசுறம் பொடியன் எப்படி?"

"நல்ல பொடியன். ஆனால் சோம்பேறி"

திருமணம் குழம்பிவிடும். இதை விட ஒழுக்கம் பற்றியும் தவறாக சொல்லிவிடுவார். ஆனால் அந்த சோம்பேறி பின்னாளில் லண்டனில் சொந்தவீடு, பளையில் சொந்தவீடு மனைவி ஊரில் (வேறு பெண்) கடைத் தொகுதி கட்டி சீரும் சிறப்புமாக இருப்பது காலத்தின் தெளிவு.

எங்கடை மிக நெருங்கிய நண்பர் சிவராசாண்ணையின் முதல் கல்யாணப் பேச்சு குழப்பி விட்டதாம்.

"ஏணண்ணை குழம்பினது? ஆர் குழப்பினது?"

"ஒருத்தரும் குழப்பேல்லையடா"

"பிறகு?"

" தோட்டத்துக்கு இறைச்சுப் போட்டு சரியான பசி. அப்படியே பளைச் சந்தைக்குப் போய் துரையின்ரை கடையில அரை இறாத்தல் பாணை வாங்கி அரிசி மூடையில இருந்து சாப்பிட்டு கொண்டிருந்தன்"

"அதுக்கென்ன பாண் சாப்பிட்டு கலியாணம் குழம்புமே"

"கதையைக் கேளன்.

பாணைத் திண்டிட்டு அந்த கரிப் பாணில உள்ளுக்கு ஒட்டிக் கொண்டிருந்த தோலை வாயால காந்து காந்து திண்டு கொண்டிருந்தன்"

(பாணில மேல்பக்கமாக உள்ள கரிப்பாணுக்கு கீழே கொஞ்சம் சதை இருக்கும். இதை காந்திதான் தின்ன வேணும். அப்படி காந்து திண்டால் அம்மா இப்படிப் பேசுவார்.

"எடேய் அப்பிடி பாணைத் தின்னாத பொம்பிள்ளை தராங்கள்")

" அதில என்னண்ணை நாங்களும் சாப்பிடுறனாங்கள் தானே"

"அடேய் நான் அப்பிடி தின்னேக்க அந்தப் புரோக்கரும் பொம்பிள்ளையின் தேப்பனும் என்னைத் தேடி வந்து எட்டிப் பாத்திருக்கினம்"

"அடக்கடவுளே" நாங்கள் சிரிக்கத் தொடங்கினோம்.

"பொம்பிள்ளையின்ர தேப்பன்அப்படியே என்னைப்பார்த்தார்"

"உவரோ மாப்பிள்ளை?"

புறோக்கர் தலையாட்டினார்.

"அண்டைக்கு போனவங்கள்தான் திரும்பி வரவேயில்லை"

"பிறகு.? "

"பிறகென்ன இராசாத்திக்கு தூது விட்டதுகான்"

இராசாத்தி சிவராசாண்ணையின் சொந்த மச்சாள். சிவராசாண்ணைக்கு இப்போது மூன்று பிள்ளைகள். மூத்தவள் பல்கலைக்கழகத்தில் படிக்க மற்றவர்களும் படிப்பில் மிக கெட்டிக்காரர்கள்.

சிவராசண்ணை சீரும் சிறப்புமாகத்தான் இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டிராகனை வேட்டையாடுமா பெண்கழுகு?

○ வீ.கே.எஸ்



தெற்காசியப் பிராந்தியத்திலே சீனா தன்னுடைய இராஜதந்திர நகர்வுகளுக்காக இந்தப் பிராந்தியத்திலுள்ள இலங்கை போன்ற நாடுகளை நேரடியாகப் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகிறது. தெற்காசியப் பிராந்தியத்திலே தனது இராணுவ மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை வலுப்படுத்துவதே சீனாவின் நோக்கம்.

அண்மையில் இலங்கையில் அரங்கேறியிருக்கும் சீன முதலீடுகள் தொடர்பான விரிவாக்கப் பணிகள் இதற்குச் சான்றாகின்றன. சீனாவின் இந்த விரிவாக்கப் பணிகள் தொடர்பாக அமெரிக்க பைடன் நிர்வாகம் பல வழிகளில் தனது அதிருப்தியை தெரிவித்திருக்கிறது. அத்தோடு நிற்காமல், பைடன் நிர்வாகம் வலுவான இராஜ தந்திர நகர்வு ஒன்றையும் மேற்கொள்ளவுள்ளது.

அதன் முதற்கட்டமாக சீனாவின் நகர்வுகளைக் கண்காணிக்கவும் , எதிர்வினையாற்றவும் முன்னனுபவமும், கடும்போக்காளருமான ஒருவரை இராஜதந்திரப் பணியில் அமர்த்த அமெரிக்கா முடிவுசெய்துள்ளது. அவ்வாறு நியமிக்கப்படும் ஒருவர் கொழும்பில் இருந்து சீனாவின் சர்வதேச நகர்வுகளைக் கண்காணிப்பதோடு, குறிப்பாக இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீன நகர்வுகளை முறியடிக்கும் பணிகளைச் செவ்வனே செய்யக்கூடியவராகவும் இருக்க வேண்டும் என அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

அமெரிக்கா வெள்ளை மாளிகையிலுள்ள பைடன் நிர்வாகம் அதற்குரிய சரியான ஒருவரை இப்போது இனங்கண்டுள்ளது. அவர் தான் ஜூலு சுங். அண்மைக் காலங்களில் அமெரிக்க செனட் வெளியுறவுக் குழுவுக்கு சீனா தனது இராணுவ மற்றும் பொருளாதாரத்தை நகர்த்துவதற்காக முன்னெடுத்துவரும் சர்வதேச சூழ்ச்சிகளை கோடிட்டுக்காட்டியவர் என்ற வகையில் இவரே பொருத்தமானவர் என வெள்ளை மாளிகை வட்டாரங்கள் பூரணமாக நம்புகின்றன. எனவே இலங்கைக்கான அடுத்த தூதராக ஜூலி சுங் நியமிக்கப்படவுள்ளார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சில் பணியாற்றுகின்ற யூலி சுங்கின் வயது 49. அவர் தென் கொரியாவில் பிறந்தவர். அது மட்டுமல்லாது சர்வதேச நடவடிக்கைகள் தொடர்பாக ஆழமான அனுபவத்தைக் கொண்ட வல்லமைமிக்க ஒரு அமெரிக்க இராஜதந்திரி. அவர் தனது பணியைப் பொறுப்பேற்றதும் உலகளாவிய அமெரிக்கத் தலைமைத்துவ ஈடுபாட்டை உறுதிசெய்தல் 'அல்லது அமெரிக்க சட்டத்தை நடைமுறைப்படுத்த அவர் பணிக்கப்படுவார்.

அது மட்டுமல்லாது சீன மக்கள் குடியரசு முன்வைக்கும் கொள்கைச் சவால்களுக்கு பதிலளிக்கும் விதமாக உலகளவில் அமெரிக்க இராஜதந்திரம், தலைமை மற்றும் முதலீடுகளைப் புத்துயிர் பெறவைக்கும் பதிய கொள்கைளையும் சட்டங்களையும் வகுப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இலங்கையில் நிலைகொண்டு இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் தனது நடவடிக்கைகளை வலுப்படுத்த சீனா எடுத்துவரும் சூழ்ச்சிகளை. தெற்காசியப் பிராந்தியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளோடு இணைந்து அதனை முறியடிப்பதற்கான திட்டங்களையும் யூலி சுங் தீவிரமாக முன்னெடுக்கும் சாத்தியங்கள் உண்டு.

யூலி சுங் தென்கொரிய பூர்வீகத்தைக் கொண்டவரென்பதால் இயல்பாகவே அவர் ஒரு சீன எதிர்ப்பாளர். அத்தோடு சீனாவின் நகர்வுகளும் அவருக்கு அத்துப்படி. சீன டிராகன்களை வேட்டையாட, அமெரிக்கா ஒரு யூலி சுங்ன் எனும் இந்தப் பெண் கழுகைத் தேர்ந்தெடுத்துள்ளது. எனவே சீனா. இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இனி அதிக அளவில் வாலாட்ட முன்னரே அதை ஒட்ட நறுக்க யூலி சுங் பொருத்தமானவர் என்பதாலே உடனடியாக அவரை இலங்கைத் தூதராக அமெரிக்கா அனுப்பி வைக்கவுள்ளது.

யூலி சுங் களத்தில் குதித்தால், இலங்கையை மையமாக் வைத்து ஆடும் [illegible] இராஜதந்திரப் பகடையாட்டம் இன்னும் களை கட்டும்.

# அதிகாரக் கொலைகள்

○ மயூ



தமிழகம், சேலம் மாவட்டத்தில் பொலிஸாரின் தாக்குதலில் அப்பாவிப் பொது மகன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அதிர்வை ஏற்படுத்தியிருக்கின்றது. மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பதவியேற்று ஓரிரு மாதங்களில் நடந்துள்ள இந்தச் சம்பவம் அரசுக்கும் குடைச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள எடப்பட்டிபுதூரைச் சேர்ந்த முருகேசன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரும், இவரது இரு நண்பர்களும் மோட்டார் சைக்கிளில் கடந்த 22ஆம் திகதி பாப்பநாயக்கன்பட்டி வனத்துறை சோதனைச்சாவடி வழியாகப் பயணித்திருக்கிறார்கள். அப்போது அவர்கள் மதுபோதையில் இருந்தனர் என்று கூறப்படுகின்றது.

அவர்களைச் சோதனையிட முயன்றபோது, முருகேசனுக்கும் பொலிஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டிருக்கின்றது. ஆத்திரமடைந்த பொலிஸார் முருகேசனை மூங்கில் பிரம்பால் சரமாரியாகத் தாக்கியிருக்கின்றனர். தடுமாறி விழுந்த முருகேசனுக்கு தலையின் பின்புறமாகப் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டபோதும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

பொலிஸார் தாக்குதல் நடத்தும் காணொலியும் சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தது. முருகேசன் மதுபோதையில் இருந்தார் என்றும், பொலிஸாரின் சோதனை நடவடிக்கைக்கு ஒத்துழைக்காது முரண்பட்டதுடன், தகாத வார்த்தைகளால் திட்டியதை அடுத்தே அங்கு அசாதாரண நிலைமை ஏற்பட்டது என்றும் பொலிஸ் தரப்பில் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் பொதுவெளியில் மட்டுமின்றி, அரசியல் தளத்திலும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சம்பவ இடத்தில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் பணி நீக்கம் செய்யப்பட்டு, கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகப் பொலிஸாரின் அத்துமீறிய நடவடிக்கைகள் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்கள் எழுந்த வண்ணமே இருக்கின்றன. அ.தி.மு.க ஆட்சிக்காலத்தில் தூத்துக்குடி படுகொலைகள், சாத்தான்குளத்தில் பொலிஸார் தாக்கியதில் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவர் இறந்தமை, மோட்டார் சைக்கிளில் பயணித்த கர்ப்பிணிப் பெண் தள்ளி வீழ்த்தப்பட்டு உயிரிழந்தமை என்று இந்தக் குற்றச்சாட்டுக்கள் நீண்டுகொண்டு செல்கின்றன.

இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையிலும் இவ்வாறான சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. பொலிஸ் துறை மக்களின் பாதுகாப்புக்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. மக்கள்மீது அடக்குமுறைகளை ஏவுவதற்காக அல்ல. மக்களின் நம்பிக்கையைப் பெற்றால் தான் பொலிஸ் துறையால் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த முடியும். ஆனால் அதிகாரத்தின் மமதையில் இவையெல்லாம் அவர்களுக்குப் புரிவது இல்லை.



# அணில் மீது பழி



தமிழகத்தில் இப்போது அடிக்கடி மின் தடை ஏற்படுவது மக்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால் அந்த விசனத்திலும் மக்களின் முகங்களில் சிரிப்பை ஏற்படுத்தியிருக்கிறார் துறை சார்ந்த அமைச்சர் செந்தில் பாலாஜி. மின் கம்பிகளில் கொடி படர்ந்துள்ளதாலும், அவற்றில் அணில்கள் ஓடுவதாலும் மின் தடை ஏற்படுகிறது என்று அவர் கூறியிருக்கும் காரணத்தைப் பலவாறாகக் கலாய்த்து வருகின்றனர் மக்கள். சமூக வலைத்தளங்களிலும் கிண்டலுக்குக் குறைவில்லை. சென்னை போன்ற நகரங்களில் மின் தடங்கள் நிலத்துக்குக் கீழாகச் செல்லும் நிலையில், ஒருவேளை அணில்கள் பூமிக்கு அடியில் ஓடுகின்றனவோ என்றும் பலர் நகைச்சுவையாகக் கேள்வி எழுப்பியிருக்கின்றனர்.

முந்தைய அரசில் அமைச்சாராக இருந்த செல்லூர் ராஜ், அணை நீரை பாதுகாக்க, 'தெர்மாகோல்' அட்டை கொண்டு மூடி விடலாம் என்று கேலிப்பொருளானார். அவர் போன்றவர்கள் இந்த புதிய அமைச்சரவையில் இல்லையோ என, மக்கள் ஏங்கிக் கொண்டிருந்தனர். அந்த ஏக்கத்தை இவர் தீர்த்து வைத்துவிட்டார் என்பதில், 'டவுட்'டே இல்லை என்றும் கலாய்த்து வருகின்றனர்.

ஆனால் தமிழகத்தில் தற்போது ஏற்படும் மின் தடைக்கு , ஒப்பந்ததாரர்கள் மோதல் உள்பட பல்வேறு காரணங்கள் பின்னணியில் உள்ளன என்கின்றன மின் ஊழியர் சங்கங்கள். மின் தடை விவகாரமும் புதிதாக பதவியேற்றுள்ள ஸ்டாலின் அரசுக்கு பெரும் பின்னடைவுதான். அதனால் மின் தடைப் பிரச்சினையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர முதலமைச்சர் ஸ்டாலின் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ம.மயூரபாலன்

# இதுவும் கடந்து போகும்



எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு". எந்த விடயத்தை யார் கூறினாலும் அது உண்மையானதா, தவறானதா என்பதை நாம் நம்து அறிவின் மூலம் ஆராய்ந்து முடிவுக்கு வருவது அவசியம். இந்தக் கருத்தை எத்தனையோஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ளார். நாமும் அதனை நன்றாக மனப்பாடம் செய்து பரீட்சையில் சரியாக ஒப்புவித்து மதிப்பெண்களையும் பெற்றுக்கொண்டோம். வள்ளுவரின் அந்தக்கருத்தை கற்றறிந்துகொள்வதோடு எமது பகுதி முடிந்து விடவில்லை என்பதை.அந்த குறளின் காலம் கடந்து நிற்கும் தன்மை நிரூபிக்கின்றது. இன்று அந்த ஒற்றைக் குறளை புரிந்து அதற்கேற்ப செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது.

எங்களில் பெரும்பான்மையானவர்கள், சொல்லப்படும் பல விடயங்களை ஆராய்ந்துபார்க்காமல், சொல்பவர் யார், சொல்பவரின் தன்மை என்ன முதலான காரணங்களைப் பாராது விடயங்களை நம்புவதற்கு முன் வருகின்றோம். எந்த விடயமானாலும் அதன் புறவயமான தன்மைகளைத் தாண்டி.அது உண்மையானது என்றோ.அல்லது உண்மைக்குப் புறம்பானது என்றோ முடிவெடுக்கக் கூடியதன்மை நிச்சயமாக இருக்கத்தான் செய்யும். அத்தன்மையை அறிந்த பின்னரே ஒரு முடிவுக்கு வருவதுதான் பொருத்தமானது.

ஆனால் நாம் காரணமில்லாத பயத்தின் விளைவாக பலவற்றையும் நம்புவதற்கு முன்வருகிறோம். ஒரு விடயம் தொடர்பான விளைவைப் பற்றி அறிய நேரிடும் தகவல்கள், நம்மில் பலரையும் பயம் கொள்ளவைத்துவிடுகின்றன. இதுகூட நமது ஆராய்ந்து பார்க்காத தன்மையால் தான் நடக்கிறது. இவ்வாறு பயம் கொள்ளும் பொழுது அதற்கான பரிகாரங்களாக எத்தனையோ விடயங்களை கண்மூடித்தனமாக பின்பற்றத் தொடங்குகின்றோம். நமக்கு வேண்டிய ஒருவர் நோய் வாய்ப்பட்டிருக்கும் பொழுது,"ஆறு இலைகளிலே அவரது பெயரை எழுதி ஆற்றிலே விடுங்கள். அப்பொழுது அவர் சுகமாகிவிடுவார்"எனயாராவது கூறினால் நாமும் அதனைச் செய்யத் தயாராகிவிடுவோம்.

**துன்பத்தின் அலைகள் கடுமையாக தாக்கும் பொழுது நமக்கு துணிவும் தெளிவும் மிகவும் அவசியமாக உள்ளன.**

இன்றைய நவீன விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாகப் பல தரப்பிலிருந்தும் பல்வகைப் பட்ட விடயங்களை மக்கள் அறிந்துகொள்கிறார்கள். இன்றைய வலைத்தளங்களில் உள்ள பல விடயங்கள் மனிதனுக்கு அவசியம் இல்லாத பல தகவல்களைத் தருகின்றன. அவற்றை நாடுகின்ற மக்கள்,அவற்றால் உண்டாகக் கூடிய விளைவுகள் பற்றிய சிந்தனை இல்லாமல் அவற்றின் பின்னால் தொடர்பவர்களாக இருக்கிறார்கள். கஷ்டங்கள், துன்பங்கள் என்று வரும்போது மனிதர்கள் அவற்றிலிருந்து விடுபடுவதற்காகப் பல விடயங்களை நாடுகின்றார்கள். அத்தகைய விடயங்கள் சில சமயங்களில் மனிதனை தவறான திசையில் நடத்திச் சென்றுவிடுகின்றன. ஆற்றில் விழுந்து விட்ட ஒருவன் தப்பிக் கொள்வதற்காக, அகப்படும் ஒன்றை இறுகப்பற்றிக் கொள்கிறான். தான் பற்றிக் கொண்டிருப்பது மரக்குற்றியா அல்லது முதலையா என்பதை அவன் அறியாமலிருக்கின்றான். இதுதான் இன்றைக்கு பலரது நிலமையாக உள்ளது.



துன்பத்தின் அலைகள் கடுமையாக தாக்கும் பொழுது நமக்கு துணிவும் தெளிவும் மிகவும் அவசியமாக உள்ளன. நாம் அச்சத்தை விடுத்து எமது மனதில்,எமது இதயத்தில் துணிவையும்,வாழ்க்கை மேலுள்ள நம்பிக்கையையும் உறுதியாக்கிக் கொள்ள வேண்டும். நம்பிக்கையும் உறுதியும் இருக்கும் ஒருவன் உண்மையின் தெளிவான தன்மையை உணரும்போது,அந்த உண்மைதன்னுள்ளே எப்போதும் நிலைகொண்டுள்ளது என்பதை உணரும்போது, அவனுக்குள் இருக்கும் அச்சம் நீங்கிவிடுகின்றது. என்னுள் எப்போதும் நிலைத்திருக்கும் உண்மை,என்னை எப்போதும் வழி நடத்தும் என்பதை ஒருவன் நிச்சயமாக காணும்போது, அவனது உள்ளம் பல மடங்கு ஒளியுள்ளதாய் மாறுகின்றது. அந்த ஒளியின் பாதையில் அவனது பயணமும் இலகுவாகின்றது.

நாம் அனைவரும் உயிரோடு இருப்பதற்கு பெரும் பாக்கியம் புரிந்தவர்களாக இருக்கின்றோம். அந்த உண்மையை அறிந்து உணர்ந்துகொள்ளும் போது, நமக்கான உதவி நமக்குள் இருந்தே கிடைக்கின்றது. அந்த உண்மையின் உதவியைநாம் பெற்றுக் கொள்ளும் வழிமுறையை அறிந்து கொள்ளும்போது, எம்முள் ஆனந்தம் நிலைகொள்ளத் தொடங்குகின்றது. அந்த ஆனந்தநிலையோடு எமது உள்ளத்தை இணைக்கும்போது கவலைகளும் பயங்களும் செயலற்றுப் போகின்றன. இந்தநிலை‌ நாம் நம்முள்ளே உறுதிப்படுத்திக் கொள்ளும்போது கண்ணுக்கு தெரியாத அந்த கிருமியால் விளையக்கூடிய தீமைகள் பற்றிய அச்சம் விலகுகின்றது.

இயல்பான எமது வாழ்க்கை நடைமுறையில் இன்று சுகாதாரம் தொடர்பான பல நடவடிக்கைகள் வலியுறுத்தப்படுகின்றன. முகக்கவசங்களை அணியவேண்டும், கைகளை தொற்று நீக்கி மூலம் எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.தொற்றும் தன்மையுள்ள கிருமியாக இருப்பதால் நாம் தொற்றுக்கு உள்ளாகக் கூடிய நிலைமைகளை தவிர்க்கவேண்டும், கூட்டமாக நிற்பதையோ,பழகுவதையோ தவிர்க்கவேண்டும். இது போன்ற நடைமுறைகளை நிச்சயமாக பின்பற்றவேண்டும். இவ்வாறான புற நடவடிக்கைகளை அறிவுபூர்வமாக பின்பற்றிக்கொண்டு எம்முள் இருக்கும் உண்மையை பற்றிக்கொள்ள நாம் தயாரானால், எது பற்றியும் நாம் அஞ்ச வேண்டியதில்லை. தனிமைப்படுத்தல் அவசியம் என எடுத்துக்காட்டப்படும்போது, நாம் அதனை மறுப்பின்றி பின்பற்றிக் கொள்ளவேண்டும்.

தனிமையாக இருக்க சலிப்பாக இருக்கிறது என்று தெரிவிப்பவர்கள் தம்முள் நிலைகொண்டுள்ள உண்மையைப் பற்றிய சிந்தனையுடனும், அந்த உண்மையின் பேரருள் பற்றிய உள்ளுணர்வோடும் எமது மனதை பொருத்திக்கொண்டு எமக்கேயான ஆனந்த நிலையில் இருப்போமெனில் பயமோ கவலையோ எம்மைத் தீண்டாது. எமக்கு எப்போதும் வேண்டியிருப்பது நாம் அந்த பேரின்பப் பெருங்கருணையின் நிழலிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற நம்பிக்கையை உறுதியாக பற்றிக்கொண்டிருக்கும் மனோநிலை மாத்திரமே. எல்லாவற்றுக்கும் மேலாக இது பயப்படுவதற்கான நேரம் அல்ல. என்ன நடைபெற்றாலும் பொறுமையாக இருக்க வேண்டும். இது எப்பொழுதுமே இவ்வாறு இருக்கப் போவதில்லை. இதுவும் ஒருநாள் கடந்துபோய்விடும்.

# 13 ஆவது...



(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கொழும்பில் சந்தித்த கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு நீங்கள்தான் இலங்கை அரசாங்கத்திடம் கேட்க வேண்டுமெனக் கூறியிருந்தார்.

13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வல்ல என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் அன்று முதல் கூறி வந்த நிலையிலும், 13 ஆவது திருத்தச் சட்டமே தீர்வு என வலியுறுத்தி வந்த இந்தியா, தற்போது இலங்கை அரசாங்கத்துடன் அது பற்றிக்கூட பேசத் தயங்குகின்றது என்பதையே தூதுவரின் கருத்து எடுத்துக் காட்டியிருக்கிறது.

இலங்கை அதாவது சிங்கள ஆட்சியாளர்கள். ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் சொல்வதைச் செய்வதாக இல்லை. ஆகவே பிராந்திய நலன்சார்ந்து வெட்கத்தைவிட்டு இலங்கையோடு பணிந்துபோக இந்தியா துணிந்துவிட்டது என்பதும் இங்கே புலனாகிறது.

இந்தப் பலவீனங்களாலேதான், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகளை சர்வதேச அரங்கில் இருந்து முற்றாகத் துடைத்தெறிய வேண்டுமென்றால் [illegible] அமெரிக்காவிடமும் இந்தியாவிடமும் இலங்கை அதி உச்சக் கோரிக்கைகளை முன்வைக்கிறது.

அதுதான் ஐ.நா.வில் புலிகளைத் தடை செய்யவுள்ள சூழ்ச்சியும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கம் செய்யும் முயற்சியும்.

இந்த மாத முற்பகுதியில் ஜேர்மனியில் இருந்து தமிழ் இளைஞர்கள் நாடு கடத்தப்பட்டமையும் இதன் பின்னணியிலேதான்.

இதனால், வடக்கு, கிழக்கு பொருளாதார உதவிக்காகவேனும் சீனாவோடு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு தடவை பேச்சு நடத்தினால் பிராந்தியத்தில் புதிய மாற்றத்தைக் காணலாம் என்ற சிந்தனைகள் தமிழ் இளைஞர்கள் மத்தியில் உருவாக ஆரம்பித்துள்ளன.

எனவேதான் சீனாவை ஈழத்தமிழர்களும் தமிழ் நாட்டுத் தமிழர்களும் எதிர்க்கிறார்களெனக் கூறும் புதிய தந்திரோபாயம் ஒன்றை இந்திய - இலங்கை அரசுகள் கையாள முற்படுகின்றன. இந்த ஆபத்துக்குள் சிக்காமல் அறிவு சார்ந்து ஈழத்தமிழர்கள் உணர வேண்டிய காலமிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாகவி குறும்பா



# மஹாகவியின் குறும்பா



○ தருமராசா அஜந்தகுமார்
*(விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

ஈழத்துத் தமிழ்க்கவிதையின் திசையை மாற்றிய மஹாகவி, மறைந்து ஐம்பது ஆண்டுகள் உருண்டுவிட்டன. கவிதை பற்றிய தெளிவும் தனது பாடுபொருள் பற்றிய தெளிவும், புதுமைகள்புகுத்தும் முயல்வும் அவரிடம் ஊறியிருந்தன.

“கவியரசு இந்த நாட்டுக்கு இல்லையென்னும் வசையென்னாற் கழிந்ததன்றே” என்று பாரதியார் பாடியதுபோல, உருத்திரமூர்த்தியும் மஹாகவி என்ற பெயரைத் துணிவோடு சூடிக்கொண்டார். மரபுக்குள் இருந்து தன்னை நீடித்துக் கொண்ட பாரதியார் இறந்து நூறாண்டு என்பதும், அந்த வடத்தைப் பிடித்து புதியதிசைக்கு இன்னும் அழைத்துச் சென்ற மஹாகவி இறந்து அரைநூற்றாண்டு என்பதும் தற்செயல் நிகழ்ச்சியாகத் தோன்றவில்லை.

வாராது வந்த மாமணி பாரதியார் மட்டுமல்ல மஹாகவியும் தான். அவரது குறும்பாக்களுக்குள் பயணித்து சில நயங்களை உரைத்தலே நோக்கமாகும்.

ஆங்கிலத்தில் உள்ள 'லிமரிக்' என்கின்ற யாப்பு வடிவத்தின் தாக்கத்தால் அதன் நீட்சியாக மஹாகவியால் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்ட வடிவமே குறும்பா ஆகும். குறும்பா என்பது குறுகிய பாடலடிகளைக் கொண்டது என்றும் குறும்பாகப் புனையப்பட்டது என்ற அர்த்தங்களைத் தரக்கூடிய காரணப்பெயராக அமைந்துள்ளது. எதுகை, மோனை, இயைபு என்ற தொடைகளின் பயன்பாடுடைய இந்த யாப்பு அழகையும் ஓசையையும் எளிமையினையும் உடைய தாகும்.

வடிவப் புதுமை மட்டுமல்ல பொருண்மைப் புதுமையும் மஹாகவியிடம் நிறைந்திருந்தது. இந்தத் தொகையில் புதிய உணர்த்துமுறையைக் கொண்டுவருகின்றார். சமூக அவலங்களை அழுதுவடித்தும், கோசம் எழுப்பியும் வந்த கவிஞர்கள் மத்தியில் வெடிக்கும் எள்ளலுடன் சமூக அவலத்தைப் பதிவுசெய்துள்ளார். சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் எளிமையும் சிலநேரங்களில் பூடகத்தன்மையும் குறும்பாவின் வெளிப்பாடுகள் ஆகின்றன. இந்தக்கவிதைகளுக்கு 'சௌ'என்ற ஓவியர், 50 ஓவியங்களை வரைந்துள்ளார். ஓவியம் இல்லையென்றால் கவிதையே இருண்மையால் மூடப்பட்டிருக்கும் குறும்பாக்களும் உண்டு. எடுத்துக்காட்டாக வள்ளியைப் பெண் தூக்கிய வழக்கு என்று தொடங்கும் கவிதையைக் குறிப்பிடலாம்.

இந்தக் குறும்பாக்கள் பல்வேறு திசைகளில் பல்வேறுபரிணாமங்களில் சஞ்சாரம் செய்கின்றன.

- பழைய இலக்கியங்களின் தாக்கத்தில் புதிய அனுபவங்களை வார்க்கின்றன
- பழைய இலக்கியங்கள்மீது மறுவாசிப்பைக் கோருகின்றன.
- சமூகத்தின் அவலங்களை எள்ளலுடன் பதிவு செய்கின்றன.
- நகைச்சுவை உணர்வை ஆழமாக ஊட்டுகின்றன.
- புதிய கற்பனைக்கு மனதை அழைத்துச் செல்கின்றன.

### பழைய இலக்கியங்களின் தாக்கத்தில் புதியஅனுபவங்களை வார்க்கின்றன

காளமேகப் புலவர் காத்தான் என்பவனின் சத்திரத்துக்குச் சாப்பிடச் செல்கின்றார். முதல்நாள் காலையில் சென்றவருக்கு அடுத்தநாள் காலையே உணவு கிடைக்கின்றது. இதனைக் 'கத்துகடல் சூழ்நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்..'என்றபாடலில் எள்ளலோடு பாடியிருந்தார்.

இதனைப் போலவே முதல்நாள் 5.58 இற்கு சென்றவனுக்கு அடுத்தநாள் காலையே இரயில் வந்து சேர்கின்றது. அதே காத்தான் என்ற பெயரையே மஹாகவியும் பயன்படுத்துகின்றார்.

“ஆத்திரம் இல்லாதவன்தான் காத்தான்
5.58 இரயில் பார்த்தான்
காத்து நின்று நின்று இறந்தான்
காண்! இரயில் வந்ததுவோ
ஈற்றில் 5.57 போற்றான்”

முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி என்று கேள்விப்பட்டிருக்கின்றோம். அதேபோல பெரிய பணக்காரர் பாரி என்ற பெயரை உடையவர் தந்திமரத்தில் தளிரைக் காணாதவர் வேருக்கு அத்தர் வார்த்ததாய் எள்ளுகின்றார்.

“பாரி என்ற பாரிய பணத்தர்
பண்புடைய மெல்லிய உளத்தர்
ஊரில் தந்திமரத்து
ஓர் தளிரும் காணாராய்
வேரினில் வார்ப்பித்தார் அத்தர்”

பன்முக வாசிப்புக்கான வாய்ப்பைத் தனது குறும்பாக்களின் மூலம் தாராளமாகச் செய்துள்ளார். அதனால்தான், “எனது குறும்பாக்கள் முற்றும் ஓய்வுக்குரியனவும் அன்று” என்று கூறியுள்ளார் போலும். எளிமைக்கு அப்பால் அவரின் கலை நுட்பமும் எடுத்துரைப்பும் ஆழமானவை.

### பழைய இலக்கியங்கள்மீது மறுவாசிப்பைக் கோருகின்றன

சங்ககாலப் போர் வாழ்க்கை, அரசர்களைப் புகழ்ந்து பாடிய புலவர்கள், இதிகாசங்களில் பெண்களுக்கு இழைக்கப்பட்டஅநீதி, இதிகாசங்களில் பெருப்பிக்கப்பட்ட விம்பங்கள் என்பவற்றை வஞ்சனையின்றி எள்ளியுள்ளார்.

“மகன் களத்தில் மாண்டானாம்
மறுபுறமாய்ப் பீறியதால் இன்னும்
புகுந்ததுவோ? மார்புவழிப்
போந்ததுவோ,என்றறியாள் –
அகம் துடித்து முலை பிசைந்தாள் அன்னம்”

பாரதியார் பாஞ்சாலிசபதத்தில்,

“தம்பி கழற்றிட கழற்றிட துணி புதிதாய்
வண்ணப் பொற்சேலைகளாம் அவை
வளர்ந்தன வளர்ந்தன வளர்ந்தனவே”

என்று எழுதினார்.

மஹாகவி,

“பாஞ்சாலி ஆடையை உரிந்தார்
பாண்டவரோ கல்லாய்ச் சமைந்தார்
ஏஞ்சாமி என்றழுதாள்
இவள் களிக்கக் கண்ணபிரான்
ஆம் சேலை ஆயிரமாய்த் தந்தார்”

அந்தக் கவிதையின் உட்கிடையை 'சௌ' வரைந்த ஓவியம் புதிய வாசிப்புக்கு இட்டுச் சென்றுவிடுகின்றது. மரத்தில் இருந்துகொண்டு கோபிகையரின் சேலையைத் திருடியவன் பாஞ்சாலிக்குச் சேலைகளை அளிப்பதாகிய சித்திரம் உருவாக்கும் கற்பனையும் வாசிப்பும் புதிய தளங்களுக்கு உரியதே ஆகும்.

### சமூகத்தின் அவலங்களை எள்ளலுடன் பதிவுசெய்கின்றன

ஆண், பெண் உறவுகளின் யதார்த்தத்தன்மையையும் அவற்றுள் ஊடுருவியுள்ள போலிகளையும் ஏமாற்றுகளையும் பண்பாட்டின் பேரால் நடைபெறும் கூத்துகளையும், இலஞ்சம் வாங்குபவர்களையும், ஆசிரியர்கள் சிலரின் நடத்தை விமர்சனங்களையும் தொலைபேசியின் விளைவையும் கைவைத்தியம்,பண்டிதர்கள், சமயம் ஆகியவற்றின் மீதான விமர்சனங்களையும் பதிவுசெய்துள்ளார். அவற்றுக்குள்ளால் அவரின் சமூகநோக்கும், நகைச்சுவை உணர்வும், அழகியலும் புலப்பட்டு நிற்கின்றன.

பண்டிதர் பண்பாவடன்று நிற்பார்
பழையதொரு புணரியலே கற்பார்!
மண்டை உடைபட்டதனால்
மருத்துவர் பாற்சென்றவர் , அப்
புண் தையல் போடுதற் கொப்பார்

சொந்தத்திற் கார்,கொழும்பில் காணி
சோக்கானவீடு,வயல் கேணி
இந்தளவும் கொண்டுவரின்,
இக்கணமேவாணியின் பாற்
சிந்தை இழப்பான் தண்டபாணி

### நகைச்சுவை உணர்வை ஆழமாக ஊட்டுகின்றன

சிவபெருமான் இந்நிலத்தில் இவர்ந்தார்
சில்லாலைப் பக்கம் நடந்தார்
அவர் உடைகண்டால் விடுமா
அவ்விடத்துநாய்? அப்பன்
அவசரமாயத் தம்விடை இவர்ந்தார்

எத்தனையைச் சொன்னாலும் கேளான்
இந்துவின் பால் இட்டநெஞ்சு மீளான்
சத்தம் ஒன்று! பட்டுதை!
சந்திரனைச் சுற்றுகிறான்!
இத்தரையில் இன்றுவரை வீழான்





### புதிய கற்பனைக்கு மனதை அழைத்துச் செல்கின்றன


இந்தக் குறும்பாக்கள் சிரிப்புக்கும் சிந்தனைக்கும் கருத்துக்கும் கற்பனைக்கும் உரியவை என்பதே மஹாகவியின் நோக்கம். இவை ஒன்றோடு ஒன்று உறழ்ந்து இந்தப் பாக்கள் வழி புலப்பட்டு விடுகின்றன. புதிய கற்பனைகளையும் அதன் வழி சமூகத்தில் ஒரு விழிப்பை உருவாக்கும் இவரின் அசாத்தியக் கவி வல்லமை போற்றுதற்குரியது.

வண்டு வடைக்குள்ளிருந்து மேலே
வந்தது,நான் பிய்த்தமுயாலே!
கண்டொரு சொல் பேசாமல்
காற்றில் அது போயினது,
நன்றி சொல்லாதெம்மவரைப் போலே.

மஹாகவி, குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டாமல் கவிதைகளை மரபின் வேரில் இருந்து கொண்டு வெவ்வேறு சுவை தரும் கனிகளைத் தந்திருக்கின்றார். அந்தக் கனிகள் இன்றும் பழுதுண்டுபோகாமல் புதிய சுவைகளைத் தந்தபடியே இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.ரா.: நினைவுகள்



**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.



20

இலாசுபேட்டை, ராஜாஜிநகர் முகவரியிலிருந்து எனது முகவரிக்கு 'ஊடகம்' என்ற இதழைக் கொண்டுவந்தோம். அதுவரை பத்திரிகை, தொலைக்காட்சி, சினிமா, தொலைபேசி எனத் தனித்தனியாகவும், மொத்தமாகச் சொல்லும் போதுதகவல் பரப்பும் சாதனங்கள் என்று சொல்லிக்கொண்டிருந்த நிலையை மாற்றி அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சொல்லாக 'ஊடகம்' என்ற சொல்லைப்பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தோம்.

நான்கு இதழ்கள் தான் வந்தது என்றாலும் வெகுமக்கள் அரசியலும் ஊடகங்களும் இணைந்து செல்லும் நிலையைப் பலவித ஆய்வுகள் வழியாகவும் மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் வழியாகவும் கருத்தியல் விளக்கக் கட்டுரைகள் வழியாகவும் எழுதும் நண்பர்களின் மொழியைக் கி.ரா.வால் உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை. வெளிப்படையாகவே என்னய்யா பத்திரிகை நடத்திறீங்க; ஒன்னுமே விளங்கலையே என்று சொல்லிவிட்டு, ' எனக்கு விளங்கல என்பதற்காக இப்படி ஒன்னு வரக்கூடாதுன்னு சொல்லமாட்டேன். தமிழுக்கு இப்படியான பத்திரிகைகளும் வரவேண்டும்' என்று சொன்னார்.

என்னிடம் அப்படிச் சொன்னவர், அவரைச் சந்திக்கவரும் ஒவ்வொருவரிடம் அதனை காட்டி அதன் சிறப்புகளையும் கவனப்படுத்தும் துறைகளையும் சரியாகவே முன்வைத்தார். அவரது அறிமுகம் மூலம் கிடைத்த நன்கொடைகள் உண்டு. சந்தாக்களும் உண்டு.

ஊடகம் வந்துநின்ற பிறகுதான் அவரது கதைசொல்லி வரத்தொடங்கியது. அதில் நானெல்லாம் ஒன்றும் எழுதவில்லை. அதற்காக நிறைய வேலை செய்தவர்களாக பஞ்சாங்கத்தையும் பிரேமையும் சொல்ல வேண்டும். பிரேம், ரமேஷ் இருவரும் இணைந்து அவரது ஒட்டுமொத்த எழுத்துகளையும் வாசித்துக் கலைஞன் பதிப்பகத்துக்குச் செய்து தந்த ' கி.ராஜநாராயணன் எழுத்துலகம்' முக்கியமான ஒன்று. அது போல பஞ்சாங்கம் கி.ராவின் பங்களிப்புகளையும் படைப்புகளையும் குறித்துத் தொடர்ச்சியாக எழுதினார். தனியொரு நூலே கி.ரா. என்னும் கதைசொல்லி' கொண்டுவந்தார். இவற்றின் சாராம்சங்களை ஆங்கிலத்தில் தந்திருந்தால் அவருக்கு ஞானபீட விருது வழங்க நினைத்து தெரிவுக்குழுவுக்கு அவரது பன்முக ஆளுமை தெரியவந்திருக்கும்.

இந்திரா பார்த்தசாரதி ஒருமுறை சொன்னார்: நமக்குள் தரம், தகுதி பற்றிய ஆயிரம் சண்டைகள் போடலாம். அதே நேரத்தில் தேசிய அளவில் மற்றமொழிகளோடு போட்டிபோடும்போது அதையெல்லாம் காட்டாமல் தமிழுக்குக் கிடைக்கிறது என்று பார்க்கவேண்டும். தமிழ்நண்டுகளாக இருப்பதைக் கைவிடாமல் தேசிய அளவு விருதுகளை எதிர்பார்க்கக்கூடாது. அவர் சொன்னதைத் தமிழ் எழுத்தாளர்களும் திறனாய்வாளர்களும் உணர்ந்ததாகத் தெரியவில்லை

21

புதுவை பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் முனைவர் கி. வேங்கடசுப்பிரமணியனைத் தடாலடியான நிர்வாகி என்றுதான் சொல்லவேண்டும். அவர் நினைத்ததைச் செய்துவிடுவார். அப்பல்கலைக்கழகத்துக்குத் தேசிய அளவிலும் உலக அளவிலும் இடங்களை உருவாக்கவேண்டும் என்று திட்டமிட்டு வெவ்வேறு துறைகளில் அதற்கான நபர்களை அழைத்துவந்தார். பன்னாட்டு உறவுகளும் அரசியலும் என்ற துறையில் உலக அளவில் அறியப்பட்ட ஒருவரை வருகைதரு பேராசிரியராக ஆக்கினார். அவர் திரு ராஜீவ்காந்தி காலத்தில் நடந்த மூன்றாம் உலக நாடுகளின் கூட்டறிக்கையை பெல்கிரேட் முன்வைப்பு உருவாக்கியவர். உயிரியல் துறைக்கு சலீம் அலியின் பெயரைச் சூட்டி, அவரது சீடர் ஒருவரைக் கொண்டுவந்தார். விளையாட்டுத்துறையின் முதன்மையராக இந்திய ராணுவத்தில் மிக உயர்ந்த பதவியிலிருந்து ஓய்வுபெற்ற ஒருவரை நியமனம் செய்தார்.

வெளியே அறியப்பட்ட முகங்களை பல்கலைக்கழகத்தில் நிரப்புவதின் வழியாக உலக வரைபடத்தில் பல்கலைக்கழகம் இடம்பெறும் என்ற நோக்கத்தை நிறைவேற்றினார். தமிழ்த்துறைக்கு பேரா.க.ப. அறவாணன் தேர்வுசெய்யப்பட்டதின் பின்னணியில் கூட அவரது அயல்நாட்டுப் பணி அனுபவங்கள் இருந்தன. அவரோடு டெல்லிப் பல்கலைக்கழகத்தமிழ்த்துறையில் பணியாற்றி ஓய்வுபெறும் நிலையில் இருந்த எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதியை அழைத்துவந்தார். ஆனால் அவர் தமிழ்த்துறையில் பணியாற்ற இயலாது; அவர்கள் அனைவரும் மரபான தமிழாசிரியர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னபோது அவருக்காக ஆரம்பிக்கப்பட்ட'தேநிகழ்' கலைப்பள்ளி.

தமிழ்த்துறையோடு ஒத்துப்போக முடியுமா என்றெல்லாம் சிந்திக்காமலேயே ஆளுமைகளை அழைத்து வந்து அமர்த்திவிடுவார். அப்படியாக சிறப்புநிலைப் பேராசிரியராக அழைக்கப்பட்டவர் கி.ரா. அவருக்கு முன்பு க.நா.சு. இவ்விருவரின் இலக்கியச் செயற்பாடுகள், இலக்கியம் பற்றிய கருத்துகளோடு தமிழ்த்துறைக்கு இணக்கம் இருந்ததில்லை. ஓராண்டு இருந்த க.நா.சு. இந்திய இலக்கியம், இலக்கியத்திறனாய்வு எனச் சில சொற்பொழிவுகளை நிகழ்த்திவிட்டு வெளியேறிவிட்டார். கி.ரா.வோ நிதானமாக வந்து மூன்று மாதங்கள் வரை துறையாசிரியர்களோடும் ஆய்வாளர்களோடும் உரையாடி, இங்கு என்ன செய்யலாம் என்று திட்டமிட்டுக்கொண்டு, தனது சமகால இலக்கிய அடையாளத்தை முன்னிறுத்தாமல் நாட்டார் கதைத்தொகுப்பு என்ற இன்னொரு பக்கம் நகர்ந்தார். அப்படியொரு திட்டத்தைத் தந்தவுடன் துறை அவருக்கு ஆய்வு உதவியாளராக சிலம்பு நா.செல்வராஜை அனுப்பியது. தேடுவது, தொகுப்பது, வகைப்படுத்துவது, பதிப்புப்பணி என எல்லாவற்றிலும் திட்டமிட்டுச் செயல்படும் நா. செல்வராஜ் கி.ரா.வுக்குக் கிடைத்த நல்ல உதவியாளர்.

*(நினைவுகளும் குறிப்புகளும் தொடரும்)*



# செருப்புகள் வளர்வதில்லை

○ அகமது ஃபைசல்

ஒரு 'மினி*கதை'

பள்ளிக்கூட மாணவர்களுடன் எடுத்த குறூப் போட்டோவில் கையை வைத்துத் தடவிக்கொண்டிருந்தான் ஃபைஸ் அகமத். அப்போதுதான் பிறந்த குழந்தையின் பாதங்களைத் தடவும் மென்மை பிறந்தது அந்தப் பால்யத்துக்கு. அது மாணவர்களுடன் கடற்கரைக்குப் போய் எடுத்த குறூப் போட்டோ. அன்றுதான் அது தொலைந்தது. தன் வலது கால் செருப்பு. தொலைத்த ஞாபகம், துடிக்கும் மீன் வாயைச் சப்புவதுபோல மனதில் இன்னும் அவனுக்கு இருக்கிறது. மூன்றாம் வகுப்பு படிக்கும்போது அவன் தொலைத்த செருப்புக்கு அப்போது எட்டு வயது. இப்போது என்ன வயதிருக்கும்? அவன் வயதுதானிருக்கும். அந்தச் செருப்பின் நிறத்தையும், நீளத்தையும் கற்பனை செய்து பார்த்தான். பிறகு; தனக்கு நாற்பத்தைந்து வயதாகியும் இந்தச் செருப்பு கொஞ்சமும் வளரவேயில்லையே! என வீட்டில் கிடந்த அந்த ஒற்றைச் செருப்பைப் பார்த்து கவலையுற்றான்.

அந்த வலதுகால் செருப்பு தொலைந்த அன்றே திரும்பிக் கரைக்கு வந்திருக்குமா? தனியே அது எப்படி அந்த ஆழ்கடலில் இன்னும் வாழும். அல்லது வேறொரு இடத்தில் கரையொதுங்கியிருக்குமா? அதற்கொரு சோடி கிடைத்திருக்குமா? அல்லது தனியே கிடந்து பயத்தில் உடல் சிதைந்திருக்கும். என்று கடைசி முடிவுசெய்தான். இப்போதுகூட கடற்கரையோரம் கிடக்கிற ஒற்றைச் செருப்புகளைப் பார்க்கும் போதெல்லாம் அதன் ஞாபக அலை அவன் மனதில் அடிக்காமலில்லை.

அந்தக் கடற்கரையோரம் எந்த சாதி பற்றியும், எந்த இனம் பற்றியும் சிந்திக்காத, வேறு வேறு நிறத்திலும், அளவிலும் எத்தனையோ செருப்புகள் சோடியாகக் கிடந்து வாழ்கின்றதைப் பார்க்கும்போது அவனுக்கு ஒரு மனத் திருப்தி ஏற்படத்தான் செய்கிறது. இன்னமும் வீட்டில் தனியே இருக்கும் அந்த ஒற்றைச் செருப்பைப் பற்றிய கவலை, அவன் மனதுக்குள் பூனைக்குப் பதுங்கும் எலிபோல் எட்டியெட்டிப் பார்த்தது. அந்தச் செருப்பை ஒரு நாளைக்கு கடற்கரையில் கொண்டு வந்து போட வேண்டும் என்ற முடிவை எடுத்தான்.

மறுநாள் அந்த ஒற்றைச் செருப்பைத் தூக்கிக்கொண்டு; அன்று மூன்றாம் வகுப்பு மாணவர்களுடன் எந்த இடத்தில் இதன் ஒற்றையைத் தொலைத்தானோ அதே இடத்தைத் தேடிச் சென்றான். இத்தனை ஆண்டுகளாக அந்த இடம் எங்கும் நகர்ந்து சென்றுவிடாமல் இவன் வருகைக்காக அங்கேயே காத்திருந்தது போன்று முக பாவனை செய்தது. அந்தக் கடற்கரையில் அவன் அன்று நின்ற அதே இடத்தில் போய் நின்றுகொண்டான். நின்றதும், மெள்ள மெள்ள அவன் சிறுவனாக மாறத் தொடங்கினான். அங்கே கடற்பரப்பில் வெள்ளை நிறத்தில் சிறு பறவைகளின் கூட்டம் உப்பு நீரின் குளிர்ச்சியை சிறகுகளால் தடவிக்கொண்டு வேகமாகப் பறந்தன. ஒரு அலை எழுந்து பறக்கிறதோ என அந்தப் பறவைகளைப் பார்த்த கணமே வியந்தான்.

ஒரு கையில் செருப்புடன் நின்றவனைப் பார்த்த நாய் சற்று விலகியபடி நடந்தது. இவ்வளவு தண்ணீரையும் தன்னுள்ளே கொள்ளும் ஒரு பாத்திரம் இந்த உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் கிடக்கும்தானே? என அவன் உள்ளம் ஒரு கேள்வியை எழுப்பியபோது அவன் எதிர் பார்க்கவில்லை.

ஒருவர் அவனருகில் வந்து "இது என்ர மகன்ட செருப்புத்தான். இப்பதான் அந்தப் பக்கம் அலையில கால் கழுவக்கே விட்டவன். அதத் தாங்க" என்று அந்தக் கடற்கரையின் ஒரு பகுதியைக் கை நீட்டிக் காட்டினார். அவரின் ஒரு கையில் அதே நிறத்திலும், அளவிலுமான ஒற்றைச் செருப்பு உண்மையாவே இருந்தது. அவரருகில் நின்ற சிறுவனைப் பார்த்து "நீங்க எத்தனையாம் வகுப்பு படிக்கிறயள்" என்று கேட்டான் ஃபைஸ் அகமத். "மூன்றாம் வகுப்பு" என்று சொல்லிவிட்டு மௌனமாக நின்றான் அந்தச் சிறுவன். குனிந்து தன் கையில் இருந்த அந்த ஒற்றைச் செருப்பை சிறுவன் பாதத்தில் அணிவித்தான். அவர் கையில் இருந்த மற்றச் செருப்பைக் கீழே போட்டார். சிறுவன் அதையும் அணிந்தான் "சரியாகப் பொருந்திற்றே" என்று சிரித்தான் ஃபைஸ்.. அப்போது அலையொன்றின் வெண் நுரை வந்து அவன் கால்களுக்கு அருகே நின்று வற்றிப்போனது. அதன் மென்மையான சத்தம் அவன் காதுகளை எட்டிப் பிடிக்க முடியாமல் ஈர மண்ணோடு புதையுண்டது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெல்டாவின் களமாக மாறிவிடும் கால்பந்து!

உலக உலா

ஆர்.பிரகாஷ்

கொரோனா வைரஸ் திரிபுகளில் மிகவும் ஆபத்தானதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள டெல்டா வைரஸ், ஐரோப்பியாவில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விடலாம் என்ற அச்சப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

யூரோ கிண்ண கால்பந்தாட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே. யூரோ கிண்ணத் தொடர் சாதாரண ஒரு தொடரல்ல. கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்துக்கு அடுத்தபடியாக அதிகளவான ரசிகர்களைக்கொண்ட தொடர்தான் இந்த யூரோ.

கடந்த வருடம் நடைபெற வேண்டிய இந்தத் தொடர் கொரோனாப் பெருந்தொற்றால் பிற்போடப்பட்டு இந்த வருடம் நடைபெறுகின்றது. அதிலும் பல மைதானங்களில் ரசிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். முகக்கவச விலக்கும் அங்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை கொரோனாத் தொற்று ஊடுருவும் பட்சத்தில் அது மிகத் தீவிரமாக மேற்கொண்டு பரவுவதற்குக் காரணமாக அமைந்துவிடும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொரோனா வைரஸை ஐரோப்பிய நாடுகள் பலவும் கட்டுப்படுத்திய போதிலும், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் முழுவதுமான கட்டுப்பாட்டுக்குள் அது வரவில்லை. ஜேர்மனியும் பிரான்ஸும் யூரோ லீக் ஆட்டத்தில் மியூனிச் அரங்கில் மோதின. இந்த ஆட்டத்தைக் காண்பதற்காக 14 ஆயிரம் ரசிகர்கள் திரண்டனர். இந்த 14 ஆயிரம் பேரில் இருந்து டெல்டா வைரஸ் பரவலுக்கான அத்திபாரம் அமைக்கப்படலாம் என்று ஜேர்மனிய சுகாதாரத்துறை கவலை தெரிவித்துள்ளது. அத்துடன் பெல்ஜியம், டென்மார்க் அணிகள் மோதிய ஆட்டத்தைக் காண்பதற்காகக் குவிந்திருந்த பல்லாயிரம் ரசிகர்களில் நால்வருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் அவர்கள் டெல்டாவால் பாதிக்கப்பட்டுள்ளமை பேரச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்த ஆட்டத்தில் மாஸ்க் விலக்கு வழங்கப்பட்டிருந்தது. அதேநேரம் டெல்டா துரித பரவுகையைக் கொண்ட வைரஸாகும். எனவே யூரோ கிண்ணத் தொடர் மூலம் ஒரு டெல்டா கொத்தணிக்கான சாத்தியக்கூறு உருவாக்கப்பட்டுள்ளது என்றே கருதப்படுகின்றது.

## இங்கிலாந்திலிருந்து ஆட்டங்கள் மாற்றம்

இங்கிலாந்தில் கொரோனா வைரஸில் இருந்து உருமாறிய டெல்ரா வைரஸ் தீவிரமாகப் பரவி வருகின்றது. இந்த நிலையில் ஐரோப்பியக் கிண்ணத்தின் அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் அங்கு வெம்பிளி அரங்கில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இத்தகையதொரு பின்னணியில் அரையிறுதி, இறுதி ஆட்டங்களை இடமாற்ற வேண்டும் என்று எதிர்ப்புக்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. அவை வெம்பிளியில் இருந்து ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகருக்கு மாற்றப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. கால்பந்தாட்டம் என்பது கிரிக்கெட் போன்றதல்ல. அதில் ரசிகர்களின் கூச்சல்களும், ஆக்ரோசமும், ஆதரவும் மிகமிக அதிகம். கால்பந்தாட்ட ரசிகர்கள் வெற்றியை எல்லைமீறிக் கொண்டாடுபவர்கள். உணர்ச்சிவசப்படுபவர்கள். ஆதலால் யூரோ கால்பந்தாட்டக் களத்தை டெல்டா தனது களமாகப் பயன்படுத்த அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன.

# கிரிக்கெட்டின் ராஜா





விளையாட்டு

ஆர்.லயனல்

அதிர்ஷ்டமே இல்லாத அணி, இதுவரை பெரும் கிண்ணமொன்றையும் கைப்பற்றாத டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணி என்ற விமர்சனங்கள், பழிச்சொற்களையெல்லாம் துடைத்தெறிந்துள்ளது நியூசிலாந்து. தற்போது கிரிக்கெட் உலகின் ராஜா நியூசிலாந்துதான். அது தன் இராச்சியத்தை மிகப்பலமாகக் கட்டமைத்துள்ளது. முழு உலகமும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் கிண்ணத்தை தனது பெயரின் கீழ் எழுதியுள்ளது நியூசிலாந்து. ஐ.சி.சி. புதிதாக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை அறிமுகம் செய்தது.

இதன்படி ஒவ்வொரு அணிகளும் எதிர்கொள்ளும் தொடர்களும் பெறப்படும் வெற்றிகளும் புள்ளிகளின் அடிப்படையில் கணக்கிடப்படும். எந்த இரு அணிகள் புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடிக்கின்றனவோ அந்த அணிகள் இறுதியாட்டத்தில் மோதும்.

இதன்படி இந்தியா - நியூசிலாந்து அணிகள் பட்டியலில் முதலிடம் பிடித்திருந்தன. அந்த இரு அணிகளும் இங்கிலாந்தின் சவுத்தாம்டன் மைதானத்தில் கடந்த 18ஆம் திகதியில் இருந்து 23ஆம் திகதி வரை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மோதின. நியூசிலாந்து சம்பியனானது.

144 ஆண்டுகள் பழமையானது டெஸ்ட் கிரிக்கெட். அத்துடன் டெஸ்ட் ஆட்டங்கள்தான் கிரிக்கெட்டின் உண்மையான வடிவம். இதனால் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர்தான் கிரிக்கெட் உலகின் ஆகப்பெரும் கிண்ணம் என்றே கருதப்படுகின்றது. இதுவரை எந்தவொரு பெரிய கிண்ணத்தையும் கைப்பற்றாத நியூசிலாந்துதான் தற்போது கிரிக்கெட் உலகின் ஆகப்பெரும் கிண்ணத்தின் சொந்தக்கார அணி. அவர்களே கிரிக்கெட் உலகின் ராஜாக்கள்.

## நியூசிலாந்துக்கு ஏற்ற ஆடுகளம்

நியூசிலாந்து அணியின் வெற்றிக்கான காரணத்தையும் இந்திய அணி தோல்வியடைந்தமைக்கான காரணத்தையும் எடுத்துக்கொண்டால் ஆடுகளங்களும், அணித்தெரிவும் முக்கியத்துவம் மிக்கவையாக அமைகின்றன. இறுதியாட்டம் நடைபெற்றது இங்கிலாந்தின் சவுத்தாம்டன் மைதானத்தில். நியூசிலாந்தில் அமைக்கப்பட்டுள்ள ஆடுகளங்கள்கூட சவுத்தாம்டன் ஆடுகளங்களைப் போன்றவைதான்.

எனவே ஆடுகளப் புரிதல் என்பது நியூசிலாந்துக்குக் கூடுதல் சாதகம். ஆனால் இந்தியாவில் இருப்பவை சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்கள். எனவே இந்திய அணிக்கு சவுத்தாம்டன் ஆடுகளமென்பது ஒரு சிம்ம சொப்பனம்தான். இது நியூசிலாந்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

## தவறான அணித்தெரிவு

அத்துடன் இந்திய அணித்தலைவர் கோலியின் அணித்தெரிவுமீதும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. சவுத்தாம்டன் சுழலுக்கு அவ்வளவாக ஒத்துழைக்காத ஆடுகளம். வில்லியம்சன் ஒரு சுழற்பந்துவீச்சாளர் கூட இல்லாமல்தான் தனது அணியை அமைத்திருந்தார். வேகப்பந்து வீச்சாளர்கள் மட்டும்தான் நியூசிலாந்தில் இருந்தனர். ஆனால் கோலி இந்திய ஆடுகளங்களில் கொண்டுசெல்லும் அணியைப்போன்று தன் அணியை அமைத்திருந்தார். அதிலும் ஜடேஜா, அஸ்வின் என இரு சுழல்பந்து வீச்சாளர்களைக் கொண்டுசென்றார். இவர்களில் ஒருவரை நிறுத்திவிட்டு மேலதிகமாக வேகப்பந்து வீச்சுடன் துடுப்பாட்டம் செய்யக்கூடிய சர்துல் தாக்கூர், அல்லது கே.எல்.ராகுல் அல்லது ஹனுமா விகாரி இவர்களில் ஒருவரைக்கொண்டு சென்றிருக்கலாம் என்று தற்போது பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சவுத்தாம்டன் ராசி

நியூசிலாந்து அணிக்கு சவுத்தாம்டன் மண் கொஞ்சம் அதிர்ஷடமான இடமாகத்தான் இருந்து வந்திருக்கின்றது. 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்திலும் சவுத்தாம்டனில் வைத்துத்தான் இந்தியாவை வீழ்த்தி இறுதிக்கு நியூசிலாந்து சென்றது. ஆனால் இறுதியாட்டத்தில் இங்கிலாந்திடம் கிண்ணத்தை இழந்தது. தற்போது எந்த இங்கிலாந்தில் வைத்து தன் கனவு தகர்க்கப்பட்டதோ அதே இடத்தில் சாதித்துள்ளது. அதுவும் மிகப்பெரிய அளவில். இது ஒரு வரலாற்று வெற்றி. என்னதான் எத்தனை உலகக்கிண்ணங்களை ஆஸ்திரேலியா வென்றிருந்தாலும் முதலாவது உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய அணி என்ற பெருமை மேற்கிந்தியத் தீவுகளுக்குத்தானே. அதுபோன்று கிரிக்கெட் உள்ளவரை இனி நியூசிலாந்தின் பெயரும் நின்று நிலைக்கப் போகின்றது. அதுவும் வெறுப்பாளர்கள் இல்லாத அணியொன்று இவ்வளவு பெரிதாகச் சாதித்தால் கேட்க வேண்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org